

# யாழ்ப்பாண வைபவம்



இலங்கைத்தமிழியற் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வைபவம்

13952 CC

பதிப்பாசிரியர்

**கலாநிதி சயனொளிபவன் முகுந்தன்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வெளியீடு

இலங்கைத்தமிழியற் கழகம்

இலங்கைத்தமிழியற் கழகம்

288401

288401 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

954.93

நூல் : யாழ்ப்பாண வைபவம் (மூன்றாம் பதிப்பு), பதிப்பாசிரியர் : கலாநிதி சயனொளிபவன் முகுந்தன், வெளியீடு: இலங்கைத் தமிழியற் கழகம், பதிப்பாண்டு: 2021, பக்கம் :xxiv+92, பிரதிகள்: 200, அச்சுப்பதிப்பு: மிக்கி பிறிண்டிங் ஸ்பெசலிஸ்ற், பலாலி வீதி, திருநெல்வேலி. விலை : 350/=

ISBN : 978-624-6211-00-4

Title : Yazppana Vaipavam (History of Jaffna), Editor : Sayanolibavan Muhunthan, Published by: Socity of Sri Lankan Tamilology, Edition : 2021, Pages : xxiv+92, Copies: 200, Printed by: Mickey Printing Specialist, Palaly Road, Thirunelvely, Prize:350/=

ISBN : 978-624-6211-00-4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இலங்கைத் தமிழரது ஆக்கங்கள், இலங்கைத் தமிழர் பற்றிய ஆக்கங்கள் முதலானவற்றை ஆவணப்படுதிப் பேணுவதையே பிரதான நோக்கமாகக் கொண்ட இலங்கைத் தமிழியற் கழகம், சென்ற ஆண்டு இலங்கைத் தமிழ் ஓவியர் ஒருவரது படைப்புகளையும் அவைபற்றிய விமர்சனங்கள், அபிப்பிராயங்களையும் அந்த ஓவியர் பற்றிய விவரங்களையும் கொண்டதான தொகுதி ஒன்றினை வெளியிட்டது. அவ்வெளியீடு உலகளாவிய வரவேற்பினைப் பெற்றது. 'யாழ்ப்பாண வைபவம்' என்னும் இந்நூல் கழகத்தின் இரண்டாவது வெளியீடாக அமைகிறது.

தமது தேசம், அன்னியர் வசமான காலம் முதலாக இலங்கைத் தமிழரிடையே முனைப்புற்று வளர்ந்த சுதேசவுணர்ச்சி, வரலாற்று வரைவாக்கங்களாகச் செயற்பாட்டு வடிவம் கண்டுவந்துள்ளது. யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி முதலான பிராந்தியங்கள் சார்ந்த நிலையிலே வரலாற்று வரைவுகள் பல எழுந்தன. அந்த வரைவுகளுட் பெரும்பாலானவை யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு எழுந்தனவே. வையாபாடல், கைலாயமலை, யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற பெயரில் எஸ். ஜோன், ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, முதலியார் செ. இராசநாயகம் ஆகியோரால் எழுதப்பட்ட மூன்று வெவ்வேறு நூல்கள், யாழ்ப்பாண வைபவ கௌமுதி, யாழ்ப்பண வைபவ விமரிசனம் முதலியவை அத்தகையவை. சுதேச உணர்ச்சி மாத்திரமன்றி விதேச விசுவாசமும் வரலாற்று நூல்களில் வெளிப்படுவதுண்டு. சுவாமி ஞானப்பிரகாசரின் 'யாழ்ப்பாண வைபவ விமரிசனம்' அதற்கான உதாரணமாகலாம்.

யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய வரலாற்று வரைபுகளுள் 'யாழ்ப்பாண வைபவம்' என்ற பெயரில் அமைந்த இருவேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களும் இடம்பெறுகின்றன. அவை இரண்டும் ஆசிரியர் பெயர் அறியா நிலையிலேயே கிடைக்கின்றன. அவை எவ்வெக் காலத்தில் எழுதப்பட்டன என்பதும் தெளிவாய் அறியக்கூடியதாய் இல்லை. அவற்றுடள் ஒன்றை திரு. வே. சதாசிவம்பிள்ளை என்பவர் முதன்முதற் பரிசோதித்து 1884இல் வெளியிட்டார். மற்றையது பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணிய சர்மா அவர்களாற் பரிசோதிக்கப்பட்டு 1916இல் வெளியானது. இதனது மூன்றாம் பதிப்பே இப்போது இலங்கைத் தமிழியற் கழகத்தால் வெளியிடப்படுகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ச. முகுந்தன் அவர்களது பார்வையில் அவரது ஆராய்ச்சி முன்னுரையோடு இப்பதிப்பு வெளிவருகிறது. பதிப்பாசிரியர், யாழ்ப்பாண வைபவம் என்ற பெயரில் அமைந்த மேற்படி இரு நூல்களையும் மிக அவதானமாக ஒப்புநோக்கியுள்ளார் என்பது, அந்த ஆராய்ச்சி முன்னுரையால் நன்கு புலனாகின்றது.

திரு. வே. சதாசிவம்பிள்ளை பதிப்பித்த ‘வைபவம்’, சைவத் தமிழர் வரலாற்றில் தன் தனிப்பெரும் பணிகளாற் பெருங்கீர்த்தியுற்ற ஆறுமுகநாவலரது முயற்சியால் இடம் பெற்றுவரும் கோயிற்றிருப் பணிகள் பற்றிய விபரிப்போடு நிறைவடைவதைப் பதிப்பாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். அந்த விபரிப்பு சமகால விவரிப்பாக அமைகின்றமை அவதானிக்கத்தக்கது. நாவலர் தேகவியோகமாகி ஐந்து ஆண்டுகளில் அந்த நூல் வெளி யானமையும் அவதானிக்கத்தக்கது. பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணிய சர்மாவின் பார்வையில் வெளிவந்த ‘வைபவம்’ நாவலர் பற்றிய குறிப்பு எதனையும் கொண்டிருக்கவில்லை. நாவலர் தேகவியோகமாவதற்குப் பல்லாண்டுகள் முந்திய கால (1938) நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதோடு நிறைவடைகிறது. ஆதலால் இந்த வைபவம் காலத்தால் முந்தியதாகலாம். நூல் எழுதப்பட்ட காலத்துக்கும் முதன்முதலிற் பதிப்பிக்கப்பட்ட காலத்துக்கும் இடைப்பட்ட காலத்து நிகழ்ச்சிகள் நூலில் இல்லாத குறையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவர்த்திக்கக் கருதியோ வேறு காரணத்தாலோ பதிப்பாசிரியர் பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணிய சர்மா இலங்கையில் நிகழ்ந்த கோயிற்றிருப்பணிகள் தொடர்பான சில விடயங்களை எழுதி, தமது பதிப்பில் அநுபந்தமாக இணைத்துக் கொண்டார். அந்த அநுபந்தம் முற்றுமுழுக்க பிராமணீய மயமானது.

இலங்கையில் விதேசிகளால் அழிவுக்குள்ளாகியிருந்த திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகிய சிவத்தலங்களைப் புநருத்தாரணம் செய்வதில் நாவலர் எடுத்த முன்முயற்சிகள் பிரசித்தமானவை. ஆதாரங்களோடு கூடியவை; திருக்கேதீஸ்வரம் தொடர்பான திருப்பணிகளில் பசுபதிச்செட்டியார் முதலானோரின் பங்களிப்புகளும் அத்தகையனவே. திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் முதலான தலங்களில் இடம்பெற்ற திருப்பணிகள் பற்றித் தமது அநுபந்தத்தில் பாலசுப்பிரமணிய சர்மா குறித்தாராயினும், அவற்றையெல்லாம் பிராமணப் பெருமக்களின் பணிகளாகவே குறித்தார். நாவலர், பசுபதிச்செட்டியார் முதலானோர் பற்றிய பேச்சுக்கே அங்கே இடமில்லை. நூல் ஒன்றின் இறுதியிலேயே இணைக்கப்படுகின்ற வழக்கத்துக்கு மாறாக, இந்நூலின் அநுபந்தம் நூலின் முன்னே இணைக்கப்பட்டுள்ளமையும் மனங்கொள்ளவேண்டியது. இதையொத்த ஒழுங்கின்மை ஒன்றை பிரமஸ்ரீ சு. இரத்தினசாமி ஐயர் என்ற பிராமண அறிஞரால் 1930இல் எழுதப்பெற்ற மேன்மக்கள் சரித்திரம் என்ற நூலிலும் அவதானிக்கலாம். சமகாலத்தில் வாழ்ந்த இலங்கைத் தமிழ்ச் சமூகத்து உயர் குழாத்தினரை (Elites) அறிமுகம் செய்வதையே நோக்காகக்கொண்டு எழுதப்பெற்ற அந்நூலில், பொருத்தமற்ற வகையில் - இடைப்பிறவரலாக- யாழ்ப்பாணத்துக் கோயில்கள் இரண்டு பற்றிய விவரங்களும் தனித்தனித் தலைப்பின்கீழ்த் தரப்பட்டுள்ளன. இணுவிற் கந்தசுவாமி கோயில், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் என்பனவே அக்கோயில்கள். அக்கோயில்கள்மேல் பிராமணருக்குள்ள பாத்தியதையையும் அதற்குமாறாக ஏனையோர் வழக்குத்தொடுத்து அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையை அபகரிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளும் பற்றியனவே அங்கு தரப்பட்ட பிரதான தகவல்கள்.

இந்து சமயம், கோயில்களை மையப்படுத்தியே வளர்ந்தது. கோயிற் பண்பாட்டில் பிராமணர்கள் இன்றியமையா இடம்பெற்றவர்கள். அவர்களிற் பெரும்பாலானவர்களின் வாழ்வாதாரம் கோயில்களிலேயே தங்கியிருந்தது; தங்கியிருக்கிறது. ஆகையால் கோயில்களை நிறுவுவதிலும் பராமரிப்பதிலும் அவர்களுக்கு இருக்கக்கூடிய அக்கறை இயல்பானதே. போர்த்துக்கேயரால் அழிவுற்ற ஆலயங்களையும் ஒடுங்கிப்போன வழிபாட்டு மரபுகளையும் மீட்டெடுப்பதில் இயலுமான சந்தர்ப்பங்களிலெல்லாம் அவர்கள் அக்கறைகாட்டி உழைத்திருக்கிறார்கள். ஒல்லாந்தர்கால இலங்கை வரலாற்றில் வரதபண்டிதர், கொச்சிக் கணேசையர் போன்று பெயரறிப்பட்டவர்கள் சிலரும் பெயரறியப்படாதவர்கள் பலருமாக எத்தனையோ பிராமணர்களை நாம் சந்திக்கிறோம். அக்காலத்தில் இலங்கையில் இருந்த பால்தேயு முதலான ஐரோப்பியப் பாதிரிமார்களின் குறிப்புகளூடாகவும் பேராசிரியர் சி. அரசரத்தினம் போன்ற வரலாற்றறிஞர்களின் ஆய்வுகளூடாகவும் இத்தகைய தரிசனம் கிட்டுகிறது. எனினும் வரலாற்றுப் புருஷர்கள்மேல் குவித்துப் பாய்ச்சப்படும் பேரொளியால் அத்தகையவர்களின் புகழ் மழுங்கிப்போதல் இயல்பே. யாழ்ப்பாணத்தில் பிராமணர்கள் ஒரு காலத்திலும் மேலாதிக்க, சக்தியாய் விளங்கவில்லை. அவர்களுக்கு அங்கு வழங்கப்படும் முதன்மை வெறும் சம்பிரதாய பூர்வமானதே. அவர்கள் 'பொற்சிறையில் வாடும் புனிதர்க'ளாகவே புழுங்கினார்கள். அத்தகைய புழுக்கத்தின் எதிர்வினையாகவே இத்தகைய வழமைக்கு மாறான - இடைப்பிறவரலான - நடவடிக்கைகளை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். சமூகவியல் நாட்டம் உள்ளவர்களுக்கு இது ஆராய்ச்சிக்கு உகந்த ஒரு விடயமாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்படும் எந்த வரலாறும் பூரணத்துவம் உடையதல்ல. வரலாறு எழுதுபவர் எவரும் தத்தமக்கான ஒரு அரசியலைக் கொண்டிராதவர் என்று துணிந்து கூறுவதற்கும் இடமில்லை. அவரவரால் தற்சார்போடு எழுதப்பட்ட வரலாறுகள் அனைத்துக்கும் ஊடாக, உண்மை வரலாற்றை நோக்கி நகர்வதே உசிதமானது. வரலாறு என்று எழுதப்பட்ட எதுவும் ஏதோ ஒரு அளவில் அதற்குத் துணைசெய்யும். அந்த அடிப்படையில் யாழ்ப்பாண வைபவம் என்னும் இந்நூலும் பேணுவதற்கு உரியதே. அந்த உண்மையை உணர்ந்து, அதன் மூன்றாம் பதிப்பினைத் தரும் கலாநிதி ச.முகுந்தன் அவர்களின் பணி பாராட்டுக்குரியது. தன் துறையை நிமிர்த்தத்தக்க வல்லமை உடையவர் அவர். அவரது நிமிர்வுக்கு இத்தகைய புலமைப்பணிகள் உதவும். இந்து நாகரிகத்துக்கு மாத்திரம் அன்றி இலங்கைத் தமிழியலுக்கும் வளம் சேர்ப்பதான இந்த நூலை வெளியிடக் கிடைத்தமை குறித்து இலங்கைத் தமிழியற் கழகம் பெருமையுறுகிறது; செவ்விய முறையில் பதித்தளித்தமைக்காக பதிப்பாசிரியருக்கு நன்றி பாராட்டுகிறது.

**க. இரகுபரன்**
தலைவர்,
இலங்கைத் தமிழியற்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றை மரபுவழிநின்று தொன்மங்கள் மற்றும் செவிவழி ஐதீகங்களூடாகப் பேச முற்பட்ட நூல்களாக யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலை, வையா பாடல் ஆகியன அமைகின்றன. இவற்றுள் கைலாய மாலை, வையா பாடல் ஆகியன யாழ்ப்பாண வைபவமாலையை இயற்றுவதற்குத் துணைசெய்தனவாக அறியப்படுகின்றன.

யாழ்ப்பாண வைபவமாலையினை முன்னிறுத்தி அப்பனுவல் குறிப்பிடும் கருத்துக்களைப் புதுக்கியும், விரித்தும், சுருக்கியும் எழுந்த பனுவல்களாக யாழ்ப்பாண வைபவம், யாழ்ப்பாண வைபவ விமர்சனம், யாழ்ப்பாண வைபவகௌமுதி ஆகியன விளங்குகின்றன.

இவற்றுக்கு அப்பால் மேலைத்தேச ஆய்வறிவியல் முறையினைப் பின்பற்றி, யாழ்ப்பாண வரலாற்றைப் பதிவுசெய்வதற்கான முயற்சிகளும் 19ஆம் நூற்றாண்டில் நடந்தேறின.

1847இல் சைமன் காசிச்செட்டி எழுதிய On the history of Jaffna from the Earliest Period to the Dutch conquest என்ற யாழ்ப்பாண வரலாறு பற்றிய ஆங்கிலக் கட்டுரை, 1920இல் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய The Kings of Jaffna during the Portuguese Period of Ceylon history, இராசநாயக முதலியாரின் Ancient Jaffna (1926) ஆகியவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம்.

எஸ். ஜோன் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் (1879), அ. முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம் (1912) ஆகியனவும் யாழ்ப்பாண வைபவமாலையின் தடத்தினைப் பின்பற்றி யாழ்ப்பாண வரலாற்றைப் பேசும் பனுவல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாண வைபவமாலை**

தொன்மங்கள் மற்றும் ஐதீகங்களின் வழியே யாழ்ப்பாண வரலாற்றைப் பேசும் மூலங்களில் யாழ்ப்பாண வைபவமாலைக்குச் சிறப்பிடம் உண்டு. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவரால் மேக்கறூன் என்ற ஒல்லாந்த அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க 1736ஆம் ஆண்டளவில் இது எழுதப்பட்டதாக அறியப்படுகிறது. மாதகலைச் சேர்ந்த மயில்வாகனப்புலவர் கி.பி.1380 தொடக்கம் 1414 வரை யாழ்ப்பாண அரசின் மன்னனாக விளங்கிய ஜயவீரசிங்கை ஆரியனின் அரசவைக் கவிஞரான 'வையா' எனும் புலவரின் வழிவந்தவர் என்பதும் இந்நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுள் மூலமாக அறியக் கிடக்கிறது.

ஒண்ணலங்கொள் மேக்கறூனென் றோதுபெயர்
பெற்றவிற லுலாந்தே சண்ணல்
பண்ணலங்கொள் யாழ்ப்பாணப் பதிவரலா
றுரைத்தமிழாற் பரிந்து கேட்கத்
திண்ணிலங்கு வேற்படையான் செகராச
சேகரன்றொல் லவையிற் சேர்ந்தோன்
மண்ணிலங்கு சீர்த்தி'வையா' மரபின் மயில்
வாகனவேள் வகுத்திட்டானே.

இந்நூலை இயற்றுவதற்குத் தாம் கைலாயமாலை, வையா பாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை முதலிய பனுவல்களைத் துணைக் கொண்டதாக, மயில்வாகனப்புலவர் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சிக்காலம் பற்றிய விரிவான செய்திகளைத் தன்னுள் உள்ளடக்கிய பெருமை இதற்கே உரியது. ஆயினும் ஐதிகத்தன்மையுடைய விபரிப்புக்கள், கால இயைபினைக் கவனத்திற் கொள்ளாமை போன்ற குறைபாடுகளால் இதிற் கூறப்பட்டுள்ள வரலாற்றுச் செய்திகளின் நம்பகத்தன்மை பிற்கால வரலாற்றாசிரியர்களால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்தைப்பற்றி அறிவதற்குரிய ஒரு முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று - இலக்கிய மூலாதாரம் என்ற வகையில் யாழ்ப்பாண வைபவமாலையின் வகிபங்கு நிராகரிக்கப்பட வொண்ணாததாகும்.

**யாழ்ப்பாண வைபவமாலைப் பதிப்புகள்**

யாழ்ப்பாண வைபவமாலை முதன்முதலில் வட்டுக்கோட்டை திரு. ஏ. ஏ. சதாசிவம்பிள்ளை என்பவரால் 1884ஆம் ஆண்டு சென்னையில் பதிப்பிக்கப்பட்டது. யாழ்ப்பாண வைபவமாலையின் ஆங்கில மொழிபெயர்ப்பு சட்டத்தரணியான சி.பிறிற்றோ என்பவரால் கி.பி.1899இல் வெளியானது.

காலவெள்ளத்தில் காணாதொழிந்திருந்த வைபவமாலையின் புதிய பதிப்புக்கு முதலியார் செ.இராசநாயகம் அவர்கள் வழிசெய்தார். இலண்டனிலிருந்த கையெழுத்துச் சுவடிப் பிரதியொன்றின் புகைப்படப் பிரதியினைத் தருவித்ததன் மூலமாக அவர் இதனைச் சாத்தியப்படுத்தினார். அதனைப் பிரதிசெய்து பதிப்பிப்பதில் முதலியார் குல சபாநாதன் முன்னின்றுழைத்தார். மேலும் இந்நூலுக்கான அடிக்குறிப்புகளும் குலசபாநாதனால் எழுதப்பட்டன. இதன்மூலம் யாழ்ப்பாண வைபவமாலை மீண்டும் இலங்கைக்குள் அச்சேறியது. அந்தவகையில் 1939ஆம் ஆண்டிலிருந்து இலங்கை வித்தியா சமாசாரப் பத்திரிகையில் பாகங்களாக இது வெளிவந்தது.

1949 ஆம் ஆண்டு முதலியார் குலசபாநாதன் பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் யாழ்ப்பாண வைபவமாலையை ஈழகேசரி நா. பொன்னையா அவர்கள் வெளியிட்டார். இதன் இரண்டாம் பதிப்பினை 1953இல் கொழும்பு சரஸ்வதி புத்தகசாலையினர் வெளியிட்டனர்.

1995ஆம் ஆண்டில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினர் யாழ்ப்பாண வைபவமாலையின் 1949ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுப் பதிப்பினை மீள்பதிப்புச் செய்தனர். ஆயினும் இம் மீள்பதிப்பில் முன்னைய பதிப்பிலுள்ள அனுபந்தம் நீக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் பொருண்மையானது இராமாயண விபீஷணன் ஆட்சியில் தொடங்கி மகாவம்ச விஜயன் கதை, யாழ்பாடி பரிசுபெற்ற மணற்றிடர் பற்றிய செய்திகள், மாருதப்புரவீகவல்லியின் கதை, எனப் பௌராணிக ஐதிகப் பண்புகளுடன் நகர்கிறது.

யாழ்பாடியின் வரவுக்கு முன்னரே நிகழ்ந்த வன்னியர்களின் குடியேற்றம் பற்றியும் பேசப்பட்டுள்ளது. கூழங்கைச் சக்கரவர்த்தியின் வருகை, யாழ்ப்பாண அரசின் எழுச்சி, நல்லூர் இராசதானி ஆகிய விடயங்களைப் பற்றிச் சிறப்பாக விவரிக்கின்ற இப்பனுவல் வரலாற்றுச் சம்பவத் தொடர்ச்சியின் காலவரன்முறையில் சிரத்தை கொள்ளவில்லை யென்றே எண்ணத்தோன்றுகிறது. வரலாற்றுப் பாத்திரங்களை இணங்காண்பதிலும் மயக்கம் கண்டுள்ளது.

எடுத்துக்காட்டாக கூறுவதாயின் 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலியனையும் 17ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இராசப் பிரதிநிதியாகவிருந்த சங்கிலி குமாரனையும் ஒருவராகக் கருதியமையினைக் குறிப்பிடலாம்.

போர்த்துக்கேயர் ஆட்சி மற்றும் ஒல்லாந்தர் ஆட்சியின் சில காலகட்டங்கள் பற்றியும் இந்நூல் குறிப்பிட்டுள்ளது. இந்நூலின் சில பதிப்புகளில் இடம்பெற்றுள்ள ஆங்கிலேயர் ஆட்சி பற்றிய குறிப்புகள் பிற்சேர்க்கையாகக் கருதப்பட வேண்டியனவாகும்.

**யாழ்ப்பாணச் சரித்திரம் (ஜோன்)**

யாழ்ப்பாண வைபவமாலையினைத் தழுவி எஸ். ஜோன் என்பவரால் 1878இல் யாழ்ப்பாணச் சரித்திரம் எழுதி வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பளையைச் சேர்ந்த சுவாமிநாதபிள்ளை குமாரர் மண்டல நாயகம் பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்க

> "வைபவமாலை முதலாம் நூல்களை ஆதாரமாகக் கொண்டு அவற்றிற் தள்ளவேண்டிய தள்ளியும், கொள்ளவேண்டிய கொண்டும், சேர்க்க வேண்டிய சேர்த்தும்" ஒரு புதுநூலை இயற்றியதாக நூலாசிரியர் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பாடசாலைகளில் கல்விபயிலும் சுதேச மாணவர்கள் யாழ்ப்பாண வரலாற்றை அறிந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேயே இந்தப் பனுவலைத் தாம் யாத்ததாகவும், ஜோன் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் இந்நூல் அடிப்படையில் வரலாற்றுப் பாடநூலாகக் கட்டமைக்கப்பட்டது என்ற முடிவுக்கு வர இயலும். போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்பட்டது வரையிலான வரலாற்றையே இந்நூல் பேசியுள்ளது. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1882ஆம் ஆண்டில் வெளியானது. இவ்விரண்டாம் பதிப்பில் அனுபந்தமாக நூலின் பொருண்மைச் சுருக்கமொன்றும் ஆங்கிலத்தில் இணைக்கப்பட்டது.

இதன் மூன்றாம் பதிப்பு எஸ். ஜோனின் புதல்வாரான டானியல் ஜோன் என்பவரால் 1930இல் வெளியிடப்பட்டது.

**யாழ்ப்பாணச் சரித்திரம் (ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை)**

யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற பெயரில் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை என்பவரால் 1912இல் ஒரு பனுவல் எழுதி வெளியிடப்பட்டது. இதன் முதற்பதிப்பை நாவலர் அச்சகம் பிரசுரித்தது. இதனுடைய இரண்டாவது பதிப்பும் 1915இல் நூலாசிரியராலே வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணத்தின் உண்மையான வரலாற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்கிற வேணவாவும் அதற்கான சான்றுகளைத்தேடி அவர் செய்த பயணிப்புக்களும், எதிர்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்களும் முதற்பதிப்பின் முன்னுரையில் சுவாரசியமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

"யாழ்ப்பாணப் பூர்வ சரித்திரத்துக்கு ஆதார நூல்களாகிப் போதுள்ளன வைபவமாலையும் கைலாசமாலையுமே. அவையுஞ் சொரூபந் திரிந்துவிட்டனவாய்த் தோன்றுகின்றன. பறங்கிக்காரர் காலமுதலாகப் பிற்காலத்துச் சரித்திரம், பறங்கிக்காரராலும், ஒல்லாந்தராலும், ஆங்கிலேயர்காலத்துச் சரித்திரம் ஆங்கிலேயராலும் எழுதப்பட்டிருக்கின்றன. பறங்கிக்காரரும், ஒல்லாந்தரும் தமது கொடுங்கோண்மையைக் குறைத்தும் திரித்தும் எழுதியிருப்பதால் அது முழுதும் உண்மையெனக் கொள்ளப் போதாது. வைபவமாலைக்கு முன்னே வையாபாடலென ஒரு சரித்திரமிருந்தது. அஃ்து தகப்படவில்லை. கர்ணபாரம்பரிய கதையும் இக்காலத்தார்க்கு வினோதம் பயவாமையால் கேட்பாருமில்லை, சொல்வாருஞ் சுருங்கினர்".

இத்தகைய பத்திகளின்மூலமாக ஆட்சியதிகார வசதிகளைக்கருதாமல் புறவயமான வரலாற்றாய்வாளராக முத்துதம்பிப்பிள்ளையவர்கள் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார்.

இந்தவகையில் இவர் தனக்கு சமகாலத்தில் யாழ்ப்பாண வரலாற்றை எழுதிய சிலரிடமிருந்து வேறுபட்டுத் தெரிகிறார். இந்நூலின் அநுபந்தமாக யாழ்ப்பாணத்தின் பூமியமைப்பு என்ற தலைப்பில் தரைத்தோற்றப் படையடுக்குகள் பற்றிய குறிப்பும் இடம்பெற்றுள்ளது. மேலும் யாழ்ப்பாணத்திலிருந்த சாதிப்பிரிவுகள் பற்றிய ஒரு அட்டவணையும் தரப்பட்டுள்ளது. 1790இல் ஒல்லாந்தரால் தலைவரிக்காக எடுத்த ஆடவர்தொகை (16-70 வயது வரை) பற்றிய விபரத்தை இப்பட்டியல் விபரிந்துள்ளது. இதன்மூலமாக அக்கால யாழ்ப்பாணத்தில் வழக்கிலிருந்த 58 உபசாதிப் பிரிவுகள் பற்றி அறிய முடிகிறது. இந்நூலின் மூன்றாம் பதிப்பு 1933இல் வைத்தியலிங்கம் அவர்களாலும் நான்காம் பதிப்பு 2000இல் தணிகை ஸ்கந்தகுமார் என்பவராலும் வெளியிடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாண வைபவ கௌமுதி :**

யாழ்ப்பாண வைபவ கௌமுதி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது. இது 1918இல் வெளிவந்தது. புராதன காலம், ஆரியச்சக்கரவர்த்திகள் காலம், பறங்கியர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம் என ஐந்து காலகட்டங்களாக வரலாறு வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் சாதிக் கட்டமைப்புப் பற்றி ஆய்வு செய்ய விழைவோருக்கும், இடப்பெயர்குறித்து ஆராயவிழை வோருக்கும் பயன்தரும் பனுவலாக இது அமைந்துள்ளது. குறிப்பாக வடமாகாணத்திலுள்ள இடப்பெயர்களின் வரலாறு என்ற தலைப்பில் இப்பனுவலில் நூற்றுமுப்பத்தாறு பக்கங்களைக் கொண்ட பகுதியொன்று உள்ளடங்கியுள்ளமை நோக்கற்பாலது. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையவர்கள் இப்பனுவலை அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த புகழ்பூத்த சட்டவல்லுநராகிய ஐசக் தம்பையா அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். ஐசக் தம்பையாவே குறித்த பனுவல் வெளிவருவதற்குப் பலவழிகளிலும் உதவியதாக அறிய முடிகிறது.

இப்பனுவலினை புது டெல்லியிலுள்ள ஏஷியன் (ஏஜீகேஷன்ஸ் சேர்விசஸ்) நிறுவனத்தினர்2002இல் மறுபதிப்புச் செய்துள்ளனர்.

**யாழ்ப்பாணச் சரித்திரம் (செ.இராசநாயகம்)**

செ.இராசநாயகம் என்பவர் 1926 இல் Ancient Jaffna என்ற பனுவலை ஆங்கிலத்தில் எழுதினார். அதன் தமிழ்வடிவமாக 1933இல் அவரால் யாழ்ப்பாண சரித்திரம் என்ற பனுவல் வெளியிடப்பட்டது. ஆங்கில மூலத்தைப் போலன்றிச் சற்று வெகுஜனப் பாங்குடைய வரலாற்று நூலாக இந்நூல் அமைந்துள்ளது.

> "சரித்திர ஆராய்ச்சியென்னும் இருளடர்ந்த வனத்திற் புகுந்து ஒன்றுடனொன்றொவ்வாது மாறுபட்டுச் செல்லும் நூல்களென்னும் வழிகளில் அலைந்து சுருதி யுக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களுக்குப் பொருந்துமாறு உண்மைச் சரிதமெனும் அருந்தனக் குவியல்களை வெளியே யெடுத்துவருஞ் சிரமம் இனைத்தெனக் கூறும் தரத்ததன்று".

என ஒரு வரலாற்றாய்வாளனாக தான் எதிர்நோக்கிய சவால்களை விபரிக்கும் நூலாசிரியர் ஆறு அதிகாரங்களில் யாழ்ப்பாண வரலாற்றைக் கட்டமைத்துள்ளார்.

நாகர்காலம், கலிங்கர்காலம், ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் என்பவை இந்நூலின் முதல் மூன்று அதிகாரங்களாகும்.

இந்த முதல் மூன்று அதிகாரங்கள் நூலாசிரியரின் ஆங்கில நூலை ஒட்டியனவாக அமைந்துள்ளன.

ஆரியவரசர் இறுதிக்காலம், போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம் என்ற தலைப்புக்களில் அமையப்பெற்றுள்ள நான்காம் ஐந்தாம் அதிகாரங்கள் சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வுகளையும், போர்த்துக்கேயர்கால ஆவணங்களையும் தழுவி அமைந்துள்ளன.

ஆறாவது அதிகாரம் ஒல்லாந்தர்காலம் பற்றிப் பேசுகிறது. இதனை எழுதுவதற்குத் தான் ஒல்லாந்தர்கால ஆவணங்களை ஆராய்ந்து எழுதியதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்நூலில் இடம்பெற்றுள்ள அனுபந்தம் பிற வரலாற்றாய்வாளர்களின் கருத்துக்களை மறுத்துரைக்கும் சில பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1986இல் ஏசியன் மூலம் வெளிவந்தது. பின்னர் 1990களில் நான்கு தடவைகள் அந்நிறுவனத்தால் மறுபதிப்புச் செய்யப்பட்டது.

### யாழ்ப்பாண வைபவ விமரிசனம்

யாழ்ப்பாண வரலாற்றைப் பதிவு செய்த பனுவல்களுள்ளே சுவாமி ஞானப்பிரகாசரால் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ விமரிசனத்துக்கும் முக்கிய இடம் உண்டு. இதன் முதற்பதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1928இல் வெளிவந்தது. சன்மார்க்கபோதினி என்ற பத்திரிகையில் காலத்துக்குக் காலம் ஞானப்பிரகாசரால் எழுதப்பட்ட கட்டுரை களின் தொகுப்பாகவே இது அமைந்தது. இப்பனுவல் அச்சு வேலியில் அமைந்திருந்த ஞானப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

> "சன்மார்க்கபோதினிப் பத்திரிகையில் அவ்வப்போது பாகபாகமாய் வெளியிடப்பட்டவைகளே இருந்தவிருந்தபடி இப்புத்தகமாக அச்சிடப்பட்டமையால், முற்ற எழுதி முடித்துப் பிரசுரஞ்செய்வதோர் நூலுக்குரிய சிறப்புக்கள் சில இதனிடம் இல்லாதுகிடத்தலை வாசிப்போர் மன்னிக்குக."

என்று நூலின் 'உபோற்காத'த்தில் (முன்னுரை) குறிப்பிட்டுள்ள நூலாசிரியர் இந்நூலை பதினைந்து அத்தியாயங்களில் வகுத்தமைத்துள்ளார். அந்த வகையில் 'பண்டைநாள் வரலாற்று'டன் தொடங்கிப் 'பயனில்லாப் போராட்டங்க'ளுடன் நிறைவுறுகின்ற இந்தப் பதினைந்து அத்தியாயங்களும் மேலைத்தேசத்தார் ஆட்சிக்கு முற்பட்டகால யாழ்ப்பாணத்தின் வரலாற்றையே அதிகம் பேசியுள்ளன. குறிப்பாக போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்வதற்கு முற்பட்ட கால வரலாறே இப்பனுவலில் அதிகம் விவரிக்கப்பட்டுள்ளது.

> "இச்சிறு நூல் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆதிகால உண்மைச்சரித்திர ஆராய்ச்சியையும் யாழ்ப்பாண வைபவமாலை எனும் பெரிய நூலின் உள்ளுறை ஆராய்ச்சியையும் கையாளுவது"

என முதற்பதிப்பின் முன்னுரையில் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலமாக இது வெறுமனே யாழ்ப்பாண வைபவமாலையின் செய்திகளை ஆமோதித்துத் செல்லாமல் மேலதிக சான்றுகளின் துணையுடன் யாழ்ப்பாண வரலாற்றை ஆராய விழைகின்றமை புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த வரலாற்றாய்வாளராக ஏற்றுக் கொள்ளப்படத் தக்கவரேனும் சுவாமி ஞானப்பிரகாசரின் கத்தோலிக்க சமயச் சார்புநிலை அவரின் சமநிலையை மழுங்கடித்து விட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது. குறிப்பாகப் போர்த்துக்கேயரின் நல்லாட்சிக்கு விசுவாசமாக யாழ்ப்பாண மன்னர்கள் நடந்து கொள்ளவில்லையென அவர் கவலையுறும் இடங்கள் நகைப்பைத் தருவனவாயுள்ளன. மேலும் போர்த்துக்கேயத் தளபதி ஒலிவேறா யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களை நிர்மூலமாக்கியமையினை இவர் நியாயப்படுத்த முயல்வதும் நோக்கற்பாலது.

இவை யாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல சங்கிலிகுமாரன் தூக்கிலிடப்படும் பகுதியில் சுவாமி ஞானப்பிரகாசரின் விவரிப்புப் பின்வருமாறு அமைகிறது.

> "குற்றத்தினுக்காகக் கொல்லும்போதும் கொலைப்படுவோனின் இராச குலத்துக்கேற்ற மரியாதைகளைச் செய்யப் போர்த்துக்கேயர் தவறினாரில்லை. அப்பால் சிரங்கொய்யுமுன் வழக்கம்போல் கைகளை கட்டச் சங்கிலி சம்மதியாமல், யான் என் பாவங்களுக்காக மரிக்கின்றேனானதினால் என் மனமொப்பிக் கொண்டேன் என்றனன். பின் யேசு என்னும் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டிருக்கை-யிலேயே யாழ்ப்பாணத்தைக் கடைசியாய் ஆண்ட எம் அரச தோன்றலின் சிரம் விழுந்தது".

இங்கே சுவாமி ஞானப்பிரகாசரரின் கிறிஸ்தவ விசுவாசம் அவருடைய வரலாற்றுணர்வை விழுங்கிவிட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.

**யாழ்ப்பாண வைபவம் - ஒரே பெயரில் இருவேறு நூல்கள்**

யாழ்ப்பாண வைபவமாலையை அடியொற்றி யாழ்ப்பாண வரலாற்றைத் தொன்மங்களூடாகவும் ஐதீகப்புனைவுகளைத் துணைக்கொண்டும் விபரித்துள்ள பனுவலாக யாழ்ப்பாண வைபவம் திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வைபவம் என்ற பெயரில் இரண்டு பனுவல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் காலத்தால் முற்பட்டது 1884ஆம் ஆண்டில் வெளியானது. மற்றையது 1916ஆம் ஆண்டில் வெளிவந்தது(இதுவே இப்போது மறுபதிப்புக் காண்கிறது). இவ்விரண்டு பனுவல்களையும் யாழ்ப்பாண வைபவமாலையின் இருவேறு பதிப்புக்கள் என்று கருதியவர்களும் உளர்.

1884இல் வெளிவந்த யாழ்ப்பாண வைபவம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வே.சதாசிவம்பிள்ளை அவர்களால் சென்னையில் வெளியிடப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பை 1965இல் வட்டுக்கோட்டை டாக்டர்.ச.மஹேஹோற்கடன் என்பவர் பதிப்பித்து வெளியிட்டார். இப்பதிப்பு திருகோணமலை கோணேஸ்வர அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

இந்த இரண்டாம் பதிப்பிலிருந்தே முதற்பதிப்புப் பற்றிய மேற்காணும் விடயங்கள் அறியப்படுகின்றன.

> "யாழ்ப்பாண வைபவம் எனும் பெயரைக் கொண்ட இச்சரித்திர நூல் எமது மூதாதையராகிய வே. சதாசிவம் பிள்ளை அவர்களால் 1884ஆம் ஆண்டில் சென்னை ஸ்கொட்டிஸ் பிறசில் (The Scottish Press, Madras by Graves, Cookson and Co) அச்சிடப்பட்டது. அச்சிடப்பட்ட பிரதியினை வெளியிடுகிறேன். இந்த மூலப்பிரதியினைப் பாதுகாப்பாக வைத்திருந்து அச்சிடுவதற்குத் தந்துதவிய திரிகோணமலை அகிலேசபிள்ளை அழகைக்கோன் அவர்கட்கு எமது நன்றி உரித்தாகுக"

இந்நூலின் முதற்பதிப்பினை யாழ்ப்பாணம் தென்கோவையி லிருந்த (கோப்பாய் தெற்கு) கதிரேச முதலியார் கனகசபை என்பவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வட்டுக்கோட்டை வே. சதாசிவம்பிள்ளை அவர்கள் பரிசோதித்துப் பிரசுரித்துள்ளார் என்ற செய்தியும் அறியக்கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வைபவமாலையினைப் போல் விபீடணன் கதையுடன் ஆரம்பிக்காமல் பாண்டுவின் கதையுடன் இந் நூல் தொடங்குகின்றது. அதனைத் தொடர்ந்து சந்திரவன்னியன், உக்கிரராசசிங்கன், மாருதப்புரவீகவல்லி, கண்டிராசன் ஆகியோரைப் பற்றிய வரலாற்றுச் சம்பவங்கள் பேசப்பட்டுள்ளன. யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றியும் பரராஜசிங்கனின் வம்சவரலாறு பற்றியும் விவரித்துள்ள இந்நூல் ஆறுமுகநாவலரின் சைவசமய மறுமலர்ச்சிப் பணிகள் வரையில் தனது பொருண்மையை அகலித்துள்ளது.

மஹாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் மாணாக்கராகிய தில்லைவிடங்கன் சு.வேலுப்பிள்ளை அவர்களின் சிறப்புப்பாயிரமும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. சங்கானை பாலசுப்பிரமணியசர்மா அவர்களால் பதிப்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வைபவத்தைப்போல் அதிகாரப் பகுப்புக்கள் இந்நூலில் இடம்பெறவில்லை.

அதுபோன்றே

> "பறங்கிக்காரரால் இடிபட்ட அக்கோவில்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் நன்முயற்சியால் இக்காலத்துள்ள சில புண்ணிய மகான்களால் உள்ளூர்களிலும் புறவூர்களிலு முள்ள பல புண்ணிய சீலரின் பொருளுதவியைக் கொண்டு திருப்பணி வேலை நடத்தப்பட்டு வருகின்றன."

என்ற குறிப்போடு இந்நூல் நிறைவுறுகிறது.

ஆனால் சங்கானை சு. பாலசுப்பிரமணியசர்மா அவர்களால் பிரசுரிக்கப்பட்ட யாழ்ப்பாண வைபவத்தில் ஆறுமுகநாவலர்பற்றிய குறிப்புக்கள் எதுவும் இடம்பெறவில்லை.

அதுபோன்றே திருநெல்வேலி ஞானப்பிரகாசர் சிதம்பரம் சென்று திருப்பணி செய்தமை பற்றிய குறிப்பும் சு.பாலசுப்பிரமணியசர்மாவால் பிரசுரிக்கப்பட்ட யாழ்ப்பாண வைபவத்தில் இடம்பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வே.சதாசிவம்பிள்ளையின் யாழ்ப்பாண வைபவப் பதிப்பில் அச்செய்தி பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

> "இந்நல்லூர்க் கோட்டத்தைச் சார்ந்த நந்தங்களுள் ஒன்றாகிய திருநெல்வேலியின் கண்ணே சிங்கையாரிய மகாராசனால் இருத்தப்பட்ட கார்காத்த வேளாளருள்ளே முடிதொட்ட வேளாளராகிய பாண்டி மழவர் மரபிற் தோன்றிய ஞானப்பிரகாச தேசிகர் சிதம்பரத்திலே ஞானப்பிரகாசம் எனப் பெயரிய திருக்குளம் இயற்றுவித்தனர். சம்ஸ்கிருதத்திலே சில சிவாகமங்களுக்கு வியாக்கியானமும், சில சைவசித்தாந்த சாஸ்திரங்களுக்குந் தமிழிலே சிவஞானசித்தியாருக்கு ஒருரையும் இயற்றினர்". (யாழ்ப்பாண வைபவம் ப. ச. ச)

**எண்பத்தினான்கு வருடங்களின் பின்னர் மீள்பதிப்புக்காணும் நா.சி. பாலசுப்பிரமணியசர்மாவின் யாழ்ப்பாண வைபவம்:**

யாழ்ப்பாண வைபவம் என்ற இந்நூல் 1916இல் சங்கானை நா.சி. பாலசுப்பிரமணியசர்மா என்பவரால் பதிப்பித்து வெளியிடப்பட்டது. நா. சி. பாலசுப்பிரமணியசர்மா அவர்களால் பரிசோதித்து வழங்கப்பட்ட ஏட்டுச்சுவடிகளைப் பதிப்பித்து வெளியிட்டதாக இரண்டாம் பதிப்பின் முகவுரையில் சு. பொன்னுச்சாமிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (நூலில் காண்க)

இந்த இரண்டாம் பதிப்பு 1927இல் வெளிவந்தது. இரண்டாம் பதிப்பில் அனுபந்தமொன்றும் இணைக்கப்பட்டுள்ளது. அனுபந்தம் நீங்கலாக 23 அதிகாரங்களாக இந்நூல் அமையப் பெற்றது. நல்லூர்க் கந்தசுவாமி கோயில், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசாமிகோயில், நல்லூர்க் கைலாசநாத சுவாமி தேவஸ்தானம், திருக்கேதீஸ்வரம், முனீஸ்வரம் ஆகிய தலங்களைப் பற்றிய விவரணங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வைபவமாலையை அடியொற்றி எழுந்த நூல்களில் கோயில்களைப் பற்றியும், அவை சார்ந்த விடயங்களைப் பற்றியும் அதிக விபரங்களைத் தருகின்ற பனுவலாக இது விளங்குகிறது. இந்துநாகரிகத்துறையைச் சார்ந்தவனாகிய எனக்கு இந்நூலைப் பதிப்பதற்கான ஆர்வமும், நியாயப்பாடும் இதுபற்றி ஏற்பட்டதேயாகும்.

எண்பத்து நான்கு ஆண்டுகள் கடந்தபின்னர் நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி இந்நூலை அதே வடிவத்தில் மீள்பதிப்புச் செய்கிறேன்.

இப்பணியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் என்னுடன் தோளோடு தோள்நின்ற எமது இந்துக்கற்கைகள்பீட விரிவுரையாள நண்பர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சி. இரமணரராஜா, சம்ஸ்கிருதத்துறையின் மேனாள் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய பிரம்மஸ்ரீ. ச. பத்மநாதன், சைவசித்தாந்தத் துறையின் விரிவுரையாளர் திரு. தி. செல்வமனோகரன் ஆகியோர் என்றும் எனது நன்றியறிதலுக்கு உரியவர்கள்.

**கலாநிதி ச. முகுந்தன்**
தலைவர், இந்துநாகரிகத்துறை
இந்துக் கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அநுபந்தம்

## 1. நல்லூர் கந்தஸ்வாமி கோவில்

இது பறங்கியரினால் இடிக்கப்பெற்றுச் சில காலஞ் சென்ற பின், கிருஷ்ணையா சுப்பையர் என்னும் பிரமணோத்தமரின் முயற்சியினால் அக்கால அரசினரிடம் உத்தரவுபெற்றுக் கோயில் கட்டி மடாலயமாகப் பிரதிஷ்டைசெய்தனர். கிறீஸ்து வருஷம் 1807ம் வருஷம் தைமீ 5ந் திகதி சகல குருத்துவ மரியாதைகளுடன் குருப்பிரதானியாக இவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியும் வேறு ஐந்து குருமார்களை இவருக்குத் துணையாகக் குருத்துவம் நடத்தும்படியும் கவனர் உத்தரவு செய்திருக்கின்றார். பக்தகோடிகளால் நன்கு மதிக்கப்பெற்றுச் சிறப்பாக நித்திய நைமித்தியங்கள் நடைபெறுகின்றன.

## 2. நகுலேஸ்வரம் மாவிட்டபுரம்

நகுலேஸ்வராலயம் கீரிமலை பிர்மஸ்ரீ ச. தியாகராஜக் குருக்களவர்களின் நன்முயற்சியினால் திருப்பணி நிறைவேறி நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

## 3. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்

அக்காலந் தொட்டு பக்தசிரோன்மணிகளினால் நன்கு பாரட்டப் பெற்று, பிரமஸ்ரீ சா. இரத்தினக்குருக்களவர்களின் சிரமம் நோக்காப் பிரயாசையினால் கருங்கற்றிருப்பணியாக வேலைநடந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கைலாஸ நாதசுவாமி தேவஸ்தானம்

வட்டுக்கோட்டை முத்தமிழ் வித்துவானும் வேதாகம சோதிஷ் வைத்ய வித்வானும் தென்கோயிற்புராணம் முதலிய புராணங்களின் ஆக்கியோனும் பல நாடகாசிரியரும் எமது அருந்தந்தையுமாகிய பிரம்மஸ்ரீ நா. சிவசுப்பிரமண்ய சிவாசாரியார் அவர்கள் இயற்றிய "சிவமலை", ''இலங்காமான்மியம்"முதலிய நூல்களில் முன்னாடியே சொல்லியபடி கீரிமலை, கேதீஸ்வரம் முதலிய க்ஷேத்திரங்களைப்போல் இந்தத் தேவாலயமும், வேதாகமபுராண இதிகாசசோதிஷ் வித்வ சிகாமணியும் எமது மாதுலரும் ஆகிய பிரம்மஸ்ரீ க.வே.கார்த்திகேயக்குருக்கள் அவர்கள் தனது ஆத்மலாபத்தின் பொருட்டும் குடும்பசந்ததியாகப் பார்த்துப் பராபரித்து பூசை செய்து ஆத்மலாபம் அடையும்பொருட்டும் சொந்தப்பொருள் கொண்டு திருப்பணி பிரதிஷ்டை முதலியன நடத்தப்பெற்றும் சிறப்பாக நித்திய நைமித்தியங்கள் நடத்தி வருகின்றனர்.

## 5. கேதீஸ்வரம்

இப் பாடல்பெற்ற சிவஸ்தலம் மன்னாருக்குச் சமீபமாகவுள்ளது. இது கொழும்பு வாசரும் வேதாகமபுராண சோதிஷவித்வசிகாமணி யும்ஆகிய பிர்மஸ்ரீ நா. குமாரஸ்வாமிக்குருக்கள் அவர்களின் சொலற்கரிய பிரயாசையினாலும் சொந்தப் பொருளினாலும்கட்டப்பட்டும் கும்பாபிஷேகத்திற்குமுன் அவர் சிவபதஞ்சென்றபடியால் அவர் பௌத்திரர் பிரமஸ்ரீ மு. சோமாஸ்கந்தசிவாசார்யர் அவர்களின் முயற்சியினாற் கும்பாபிஷேகமாகி நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடந்துவருகின்றன.

## 6. முனீஸ்வரம்

ஸ்ரீவடிவாம்பிகா ஸமேத முன்னநாதஸ்வாமி தேவஸ்தானம் சலாபம் டிஸ்றிக்டை சேர்ந்த முனீஸ்வரம் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்ஷேத்திரம் சூர்யகுல ராஜாக்களாகிய ஸ்ரீராமபிரான் முதலிய சக்கிரவர்த்திகளினாலும் பராக்கிரமபாகு முதலிய இங்கை அரசர்களினாலும் நன்கு பரிபாலிக்கப் பெற்றும் சர்வமான்யங்கள் சன்மானிக்கப்பெற்று இருந்தும் பழுதுபட்டுப் பூசை முதலிய குறைந்திருக்குகால் கொழும்பு வாசரும் வேதாகமபுராண சோதிஷவித்வசிகாமணியாகிய பிரமசிறீ நா. குமாரசுவாமிக் குருக்களவர்களால் திருப்பணி பிரதிஷ்டை முதலியன நடாத்தப்பெற்று அவர் பௌத்திரரும் வேதாகமபுராண வித்வசிகாமணியும் ஆரிய திராவிடவித்வானும் ஆகிய பிரமசிறீ மு. சோமாஸ்கந்தசிவாசார்யரவர்களின் தர்ம பரிபாலனத்தின் கீழ் சமயாசாரபேதம் பாராட்டாது சர்வமதத்தவர்களும் வணங்கி இஷ்டசித்திகளக் குறைவின்றியடைந்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# யாழ்ப்பாண வைபவம்

**வெண்பா**

சீரிலங்கை யாட்பாண தேசசரி தத்தீபம்
பாரிலங்க வாசகமாய்ப் பன்னுதற்கு-நேரிலங்கும்
துங்கக் கரிமுகனே தூயோனே அற்புதனே
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

## *1ஆவது, அதிகாரம்.*

கிரேததிரேத துவாபரமென்னுமுதல்யுகமூன்றிலும், இலங்கா புரியை இராக்ஷதராண்டாரென்று, இதிகாச புராணங்கள் கூறு கின்றன. இராவணசங்காரத்தின் பின், இலங்கை அரசாட்சியைத் தசரத ராமனாற்பெற்ற விபீஷணன் கலியுகம் முற்கூற்றில் அரசு செய்தபின் நாராயணமூர்த்தியின் உத்தரவுபெற்று வைகுந்தபதவியில் தேகமுத்தியடைந்தானென்பதும், அவன் நீங்கியபின் வேற்றரசரின் கீழ்க்குடிகளாயிருப்பது நெறியல்லவென்று இராக்கதக் குடிகளாயுள் ளோரனைவரும் இலங்கையை விட்டு வலைசை வாங்கினாரென்பதும் கன்னபரம்பரை.

★ யாழ்ப்பாணத்திற் சம்பவித்தவைகளைக் கூறுவதால் இப்பெயருண்டாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றைக்கு 2400 வருஷங்களுக்குமுன் இவ்விலங்கைநாடு யானை, கரடி, புலி முதலிய விலங்கு சாதிகள் சஞ்சரிக்கும் வனாந் தரமாயிருந்தது. அவ்வனாந்தரமத்தியிற் சிலவேடரேயன்றி வேறொருமானிட சீவனுமிருந்ததில்லை. அக்காலத்தில் வங்கதேசத்திலே க்ஷத்திரியமரபிலே பிறந்து, லாலாதேசத்தை அரசாண்ட சிங்கவாகுவின் குமாரன் விசயனென்பவன் மகா துட்டனாயிருந்தமையினால் அவனைப் பிதா துரத்திவிட, அவன் அங்குமிங்குமலைந்து ஒருவரும் இடங்கொடாததினாற் காசியிற் போயிந்தான். அவ்விடம் இருக்கையிற் சொப்பனத்திற் காசிவிசுவேசர் தரிசனமாகி நீ உன் கவலையை நீக்கி இலங்கை மத்தியிலுள்ள, கதிரைமலையிலே போயிரு. அந்நாடு உனக்குடைய தென்று உத்தரவு கொடுக்கப்பெற்றதனால், அவ்விசய குமாரன் நீலகண்ட சிவாசாரியரென்னும் குருவை அழைக்க, அவர் தமது தேவியாகிய அகிலாண்டவல்லியம்மாளையும், புத்திரர் புத்திரிகளையும் மருமக்களையுஞ் சேர்த்துக்கொண்டு தமது பரிவாரங்களுடன் புறப்பட்டு யாவரும் கதிரைமலையிற் சேர்ந்தார்கள்.

அக்காலத்தில், இலங்கையிற் குடிசனமில்லாமையால் விசய குமாரன் குடியேற்றக் கருதிப் பலமுயற்சிகளைச்செய்தான். இலங்கை, இராக்ஷத நாடாயிருந்ததனால் அங்கு வரமாடடோமென்று கன்னியாகுமரிதொடங்கி, இமயமலைபரியந்தமுள்ள சகலரும் மறுத்துச் சொன்னார்கள். அக்காலம், மகத நாட்டிற் சனங் களிலனேகர் புத்தசமயத்துக்குட்பட்டதினால், மகதராசன் அவர்களை அந்நாட்டைவிட்டுத் துரத்திவிட, அவர்களிற் சிலர் இமயத்துக்கு வடக்கேயும், சிலர் பிரமபுத்திரா நதிக்குக் கிழக்கேயும், பிரமதேசத்தைச் சேர்ந்த சீயம் முதலிய நாடு களிலும் அலைந்து திரிந்தார்கள். அந்தச் செய்தியை விசயரா சனறிந்து அவ்விடஞ்சென்றிருந்த பல குடிகளையழைத்து வந்து எத்திசைகளிலும் குடியேற்றி, நகரப்பிரதிஷ்டை செய்து அரசியற்றவாரம்பித்தான். அந்தப்புத்தர்கள் சிங்களமென்று பெயருள்ள நாட்டிற் குடியேறினதாற் சிங்களரெனப் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார்கள். குடிகளை வசப்படுத்திக்கொள்ளும் நோக்கத்தினால் இராசன் சமயவழிபாட்டைக் குறித்துச் சனங்களுக்கிட்டதைக் கொடுத்து தனது சமயாசாரந்தவறாமல் நடந்துகொண்டான். அரசியற்ற ஆரம்பிக்குமுன்னே தனதரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலுதிக்கிலும் நாலு சிவாலயங்களைக் கட்டுவித்ததுமன்றி நந்தவனங்கள் கூபங்கள் முதலிய யாவற்றையும் ஸ்தாபித்தான். கிழக்குத்திசைக்குத் தம்பலகாமத்திற் கோணேசர் கோவிலை எழும்பியும், மேற்குத்திசைக்கு மாதோட்டத்திலே பழுது பட்டுக்கிடந்த திருக்கேதீச்சுரச் சிவாலயத்தைப் புதுப்பித்தும், தென்றிசையிலே மாத்துறையிற் சந்திரசேகரவீசுரன் கோவிலை எழுப்பியும், வடதிசைக்குக் கீரிமலைச்சாரரில் திருத்தம்பலையென்னும் பதியிலே திருத்தம்பலேசுரன், திருத்தம்பலேஸ்வரியம்மன் கோவில்களையும் தன் சமீபத்திற் கதிரையாண்டவர் கோவிலையுங் கட்டிவித்து அவ்வாலயங் களுக்குப பூசை நடத்தும்படி மேற்குறித்த நீலகண்டாசாரியரின் சந்ததியாரையும் மூன்றாங்குமாரன் வாமதேவாசாரியனென்னுங் காசியிற் பிராமணனையும் அவன் பன்னியாகிய விசாலாட்சி யம்மாளையும் அழைப்பித்து அக்கிரகாரமுதலிய வசதிகளுங் கொடுத்திருத்தி வைத்தான். அக்கோவிலவ்விடத்தே தோன்றிய காரணத்தால் அக்கிராமங் கோவிற்கடவையெனப் பெயர்பெற்றது.

## 2ஆவது, அதிகாரம்

முற்காலத்திலே நகுலமுனிவரென்னு மோரிருஷி அங்குள்ள மலைச்சாரலிலிருந்து தீர்த்தமாடி வந்ததினால் தனக்கிருந்த கீரிமுகமாறி மானிடமுகம் பெற்றதன்மையினால் அத்தல விசேஷத்தையும் தீர்த்த மகிமையையுங் குறித்து வியப்புற்றுத் தவஞ்செய்தற்கேற்ற இடமெனக்கருதி அம்மலையின் குகையிலே வாசஞ்செய்து கொண்டிருந்தார். அம்முனிவர் விசயராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுவித்த பலவாலயங்களிற்றங்கி வழிபட்டு வந்தார். அந்தவிருஷிக்குக் கீரிமுகமாறிய காரணத்தால் அம்மலை கீரிமலையெனப் பெயர்பெற்றது. அதனால்கோவில்களும் நகுலேசுரன்கோவிலென்றும் நகுலாம்பிகை அம்மன் கோவிலென்றும் வழங்கிவந்தன. விசயராசன் திருப்பணியை நிறைவேற்றியபின் தனதிராச்சியம் முழுதுஞ் சுற்றிப்பார்த்துக்கொண்டு கதிரைமலையைச்சேர்ந்தான். அதன்பின் தம்பலகாமமென்னுமிடத்தை இராசதானியாக்கிக்கொண்டு தன் மனைவியையும் இரண்டு மக்களையுந் தள்ளிவிட்டுப் பாண்டிநாட்டுப் பெண்ணொருத்தியை விவாகம்பண்ணிச் சில வருஷமரசியற்றிப் புத்திரசந்தானமில்லாமல் இறந்துவிட்டான்.

அவன் மந்திரி இராச்சியத்தைத் தளம்பவிடாமல் ஒரு வருஷங்காப்பாற்றிய பின்பு விசயராசன் சகோதரனுடைய குமாரன், பாண்டு வசுவென்பவனை அழைத்துவந்து அரசனாக்கினான். பின்பு இவன் குலத்தரசர் தலைமுறை தலைமுறையாக அனேககாலமிவ்விலங்கைநாட்டை அரசாண்டுவந்தார்கள்.

சாலிவாகனசகாப்தம் 358ஆம் வருஷகத்தில் மனுநீதிகண்ட சோழராசன்மகன் குழக்கோட்டு மகாராசன் யாத்திரை பண்ணித் திரிகோணமலையிற் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத்தம்பலகாமத்திற் பழுதுபட்டுக்கிடந்த கோணேசர் கோவிலைப்பழுது பார்ப்பித்து, அக்கிரகார முதலியவைகளனைத்தையுந் திருத்திவித்துக் கொண்டிருந்தான். அக்காலத்திலே கண்டி நாட்டிலிருந்து இலங்கை முழுதையும் அரசாட்சிசெய்த பாண்டுமகாராசன் மணற்றிடல் என்றழைக்கப்பட்ட இந்நாட்டில் வந்தான்.

அப்போ இவ்விடத்திற் குடியிருந்த சிங்களவரிற் சிலர் கீரிமலைக்குச் சமீபமாயிருந்த கரைதுறைகளிற்குடியிருந்த முக்குகரைக்கொண்டு மீன்பிடித்துக் குவித்துக் கண்டிநாடு முதலிய இடங்களுக்குக் கொண்டுபோய் வியாபாரஞ்செய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாயிருந்தது. உசுமன் சேர்ந்தான் என்று பெயரிய முக்குகத்தலைமை வலஞர்கள், தங்கள் வேலையாட்களைக் கொண்டு மீன்பிடித்துக்கொடுத்து வந்தார்கள். சிங்களவர் நிழல் வசதிக்கும் நீர் வசதிக்குமாக அங்குள்ள மலைச்சாரலிருக்குஞ் சிவாலயங்களிற்றங்கிக் கோவிற்பிரகாரங்களில் மீன் காயப்போட்டுத் திருக்கிணறுகளில் தண்ணீரள்ளவுந் தொடங்கினதினாற் பிராமணர் கோவில்களைப்பூட்டி கொண்டப்புறம் போயொதிங்கிவிட்டார்கள், கோவில்களிற் சிலகாலம் பூசை யில்லாமலிருந்தது.

அதை இவ்விடத்திருந்த பாண்டு மகாராசனறிந்து விசாரணை செய்து சிங்களவருக்கு நியாயமான தண்டனைபுரிந்து முக்குகக் குடிகளைத் துரத்திவிட்டான்.

## 3ஆவது, அதிகாரம்

உசுமன்முதலிய வலைஞர்கள் இவ்விடம் விட்டு மட்டக்களப் புக்குப்போய்ப் பானகையிரவி யென்னுமிடத்திலிருந்தார்கள். சிலர் இந்நாட்டின் மறுதுறைகளி லிருந்தார்கள். உசுமன்துறை சேர்ந்தான்களமெனும் பெயர்கள் உசுமன் சேர்தானெனன்பவர்களால் வந்தன. வலித்தூண்டன் முதலிய இடங்களில் முக்குகரிருந்ததில்லை.

பாண்டு மகாராசன் இங்கேயிருக்க அவன் மனைவி குழக்கோட்டு மகாராசன் கோணேசர் கோவிற் றிருப்பணி செய்விக்குஞ் செய்தியைக்கேட்டுத் தங்கள் சேனைகளிற் சிலரையழைத்து நீங்கள் குளக்கோட்டனை இந்நாட்டினின்றுந்துரத்திவிட்டுவாருங்களென்று செலவுகொடுத்தனுப்பச் சேனைகள் தம்பலகாமத்திற்குப்போய் அவ்விடத்திற் குழக்கோட்டரசன் செய்விக்கும் பெரியவேலை களையும் அவனுடன் நின்ற சேனைத்திரள்களையுங் கண்டு பயந்து நடுக்கமுற்று ஒன்றும் பேசாமல் தூதாகவந்தவர்கள் போல் நின்றார்கள். அரசன் அவர்களைப்பார்த்து ஏன் வந்தீர்களென அவர்கள் மகாராசனே இந்தத் திருப்பணிக்குவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளேதேனும் தேவையோவென விசாரித்து வாருங்களென்று அரசியனுப்ப வந்தோமென்றார்கள். அரசன் அவர்களை நோக்கி வேண்டிய சகலவஸ்துக்களுஞ் சம்பூரணமாயிருக்கின்றன. ஒன்றும் வேண்டியதில்லை உங்கள் சுகவதிசயங்களை விசாரித்தேனென்று உங்களிராணிக்கறிவியுங்களென்று சொல்லிச் சேனைக்கு உசிதமான விருந்துகொடுத்து உபசரித்து அனுப்ப அவர்கள் போய் நடந்த செய்திகள் யாவற்றையு மறிவித்தும் விருந்திற் பருமாறிய பதார்த்தங்களின் மதுரத்தையும் வியந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள். அரசி அந்தச்செய்தியைக்கேட்டு யாதொரு பேச்சுமின்றி இருந்தாள்.

குழக்கோட்டு மகாராசன் திருப்பணியை முடித்து, அவ்வாலயப் பணிவிடைக்குங் கோணேசலிங்கத்துக்கும் பூசனைபுரிவிப்பதற்குஞ் செலவுகளுக்காக ஏழு நாட்டு வயல்நிலங்களையுந் தோப்புகளையு மேற்படுத்தி அவைகளிற் பயிரிட்டு வருமானஞ்செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியிருத்தித் தன்னாட்டிற்கு மீண்டான். அந்நாள் முதல் ஆலயப்பணிவிடைகளும் அந்தணர் கிராமங்களும் மடங்களுஞ் சம்பிரமமாக முன்போல நடந்துவந்தன. சில காலத்தின் பின் குழக்கோட்டு மகாராசன் தேகவியோகமடைந்து விட்டான். அதன்பின் மேற்கூறிய ஏழு நாடுகளிலும் பயிர்க்குடிகளாயிருந்த வன்னியர்கள் மிகவும் பெருகினார்கள். பாண்டி நாட்டிலிருந்து பின்னும் ஐம்பத்தொன்பது வன்னியர்கள் வந்து அவர்களுடன் கூடிக்கொண்டார்கள். வருமானமும் குடிகளும் வரவரப்பெருகிக்கொண்டபடியால் அரசாட்சியின்றிப் பலமுறை கலகங்கள் நேரிட்டன. அவ்வேழுநாடுகளும் கோணேச கோவிலுக்குச் செல்வதேயன்றிக் கண்டி நாட்டரசருக்கு யாதொரு நயமுமில்லாமையால் அந்நாட்டரசர்கள் அவற்றைப் பராமுகம் பண்ணிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4ஆவது, அதிகாரம்

அக்காலத்திற் சந்திரவன்னியனும் வேறனேக குறுநிலைமன்னரும் தோன்றிப் பலவாறு கலகஞ்செய்து மரித்துவிட வன்னியர்களனை வரும் ஒத்திணங்கித் தங்கள் சாதியிற்றலமைப்பட்ட ஏழுபேரைத் தெரிந்து அவ்வேழு நாடுகளுக்குந் தலைவராக்கிக் கீழமைந்திருந்தார்கள். அதுமுதல் அத்தலைவரின் சந்ததியாராயிருந்த வன்னியர்களாண்டதனால் வன்னிநாடெனப் பெயர்பெற்றது. சாலிவாகன சகாப்தம் 515ம் வருடத்தில் இலங்கைக்கரசனாயிருந்த அக்கிரபோதிமகாராசன் இவ்வன்னியர்கள் தாங்களும் அரசரென்று இறுமாப்புக்கொண்டதை அறிந்து அவ்வன்னியர்களின் அதிகாரத்தைக் குறைத்துத் தன்னாணையைச் செலுத்தி வந்தான். அது முதல் அவ்வன்னியர்கள் நாட்டதிகாரிகளாய் ஆண்டுவந்தார்கள். சாலிவாகன சகாப்தம் 717ம் வருஷத்தில் விஜயராசனின் சகோதரன் மரபிற்பிறந்த உக்கிரசிங்கனென்னும் அரசன் வடதிசையினின்று வெகுதிரளான சேனையுடன் வந்து போராடிச் சிலகாலமாக இழந்திருந்த இவ்விலங்கையில் அரைவாசியைப்பிடித்துக்கொண்டு கதிரைமலையிலிருந்து அரசாண்டுவந்தான். தென்னாடுகளை வேற்றரசனாண்டுவந்தான்.

இந்த உக்கிரசிங்கராசனுக்குச் சிங்கத்தையொத்த முகமும் மானுடதேகமுமிருந்தது. இவன் நகுலேசர் கோவிலைத் தரிசிக்கும் பொருட்டுவந்து, கீரிமலைச்சாரலிலே முற்காலத்திற் சோழராசன் தான் தீர்த்தமாடித் தங்கியிருக்கக் கட்டுவித்த மாளிகையிலே இறங்கினான். சோழராசன் மாளிகைகட்டுவித்ததினால் அந்த இடம் வளவர்கோன் பள்ளமென வழங்கிவந்தது.

அவனவ்விடமிருக்கத் தொண்டைநாட்டை அரசாண்ட தொண்டைமானென்னும் அரசன் கரணவாய் வெள்ளைப் பரவையென்னுமிடங்களில் நல்லுப்புப்படுஞ் செய்தியைக்கேட்டுத் தன் பரிவாரங்களுடன் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி இவனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்து இந்நாட்டில் விளையுமுப்பிலே தனக்குவேண்டியளவுக்கு வருடந்தோறும் விலைக்குக் கொடுக்கும்படியும் உப்புப்படு மிடத்துக்குச் சமீபமாக மரக்கலங்களைக் கொண்டு வந்தேற்ற வும் மொதுங்கி நிற்கவும் வசதியாகக் கடலிலே நின்றொராறு வெட்டுவித்துக் கொள்ளவும் உத்தரவுகேட்டான். உக்கிர சிங்கமகாராசன் உத்தரவுகொடுக்கத் தொண்டைமானங்கிருந்த சிற்றாற்றை மரக்கலமோடத்தக்க ஆழமாயும் விசாலமாயும் ஒதுக்கிடமாகத்தக்கதாயும் வெட்டுவித்துத் தன்னூருக்கு மீண்டான். அது முதல் அது தொண்டைமானாறென்றழைக்கப்படுகின்றது. உக்கிரசிங்க மகாராசன் தன்சேனைகளோடு கதிரைமலைக்கு வன்னிமார்க்கமாக செல்லுகையில் வன்னியர்கள் ஏழு பேரும் எதிர்கொண்டு வந்து திறைகொடுத்து உத்தரவு பெற்றுக் கொண்டார்கள். அரசன் இராச்சிய மெங்கும் தன்னாணை செல்லவும் தனக்குவரவேண்டிய திறையைக் கோணேசர் கோவிலுக்குக் கொடுக்கவும் முடன்பாடு பண்ணுவித்துக்கொண்டு கதிரைமலையிற் சேர்ந்தான்.

இவைகள்சம்பவித்தஎட்டாம்வருடத்திலேசோழநாட்டரசனாகிய திசையுக்கிரசோழன் மகள் மாரதப்பிரவல்லி என்பவள் குன்மவியாதியினால் மெலிந்தவளாய் அவ்வியாதி வயித்தியரால் நீக்கமுடியாமையால் தீர்த்தயாத்திரை செய்தாலொருவாறு நீங்குமெனக்கருதிக் காவிரிப்பூம்பட்டணத்தினின்று புறப்பட்டு எங்கும் போய்த்தீர்த்தமாடி வருகையிற் சாந்தலிங்கனென்னுமொரு சன்னியாசிகண்டு, உன்வியாதி பண்டிதராற் குணமாகத்தக்கதன்று இப்பொழுதெடுத்த முயற்சியே சுகந்தரத்தக்கது இலங்கையின் வடமுனையிலே கீரிமலையென்றொரு மலையுண்டு. அது சமுத்திர தீரத்திலுள்ளது அங்கே உவர்ச்சலமத்தியிற் சுத்த தீர்த்தமும் மலையருவித்தீர்த்தமும் கலந்தஉத்தம தீர்த்தமொன்றுண்டு. உலகத்திலுள்ள எந்தத்தீர் த்தத்திலும் முக்கியமானது. அதிலே நீ போய் ஸ்னானம்பண்ணிச் சில காலந்தங்கி இருப்பாயாகிற் சுகமடைவாய் என்று சொல்ல அதற்கிசைந்து உடனே திரவியங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்கொண்டு மாருதப்புரவல்லி புறப்பட்டுத் தாதிமாரும் தோழிமாருஞ் சேனை வீரருஞ் சூழ்ந்து வரக் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி நகுலமுனிவரைக்கண்டு பஞ்சாங்க நமஸ்காரஞ்செய்து அவரால் ஆசீர்வாதம் பெற்று அந்தத் தலவிசேஷத்தையும் தீர்த்த மகிமையையும் தான் தீர்த்தமாடினதால் தனக்கிருந்த கீரிமுகமாறி மனுஷமுகம் பெற்றதையும் முனிகூரக்கேட்டு மகாசந்தோஷத்துடன் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனஞ்செய்து அங்கு ஓர் இடத்தில் பாளயம் போட்டுக் கொண்டு சிலகாலம் அவ்விடத்திலிருந்தாள். இப்படிச் சுவாமிதரிசனஞ்செய்து தீர்த்தமாடிவருகையில் அவளுக்கிருந்த குன்மவலியுந் தீர்ந்து குதிரைமுகமும் மாறிற்று. மாறவே மாருதப்பிரவல்லியின் யவ்வன சொரூபத்தைக் கண்டவர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

அக்காலத்திலே உக்கிரசிங்கராசன் நகுலேசர் கோவிலைத்தருசிக்க மூன்றாந்தரம் வந்திறங்கி வளர்வகோன் பள்ளத்திற் பாளயம் போட்டிரிந்தான். இப்படி இருக்குங் காலத்தில் அவன் ஒரு நாள் பரிசனங்களோடு சுவாமிதரிசனம் செய்யப்போனபொழுது அங்குசென்ற மாருதப்பிரவல்லியைக்கண்டு ஆச்சரியமுற்று அவள் பேரழகினால் மயங்கி இவளாரென்று விசாரணை செய்து அவளைத்தான் விவாகஞ்செய்யவேண்டுமென்று தீர்மானித்து மோகசகிதனாய் மீண்டுஞ் சந்நிதியடைந்து தரிசனஞ்செய்து தன்பதியையடைந்து சமயம் வாயாது காத்துக்கொண்டிருந்தனன்.

## 5ஆவது, அதிகாரம்

மாருதப்பிரவல்லி தனக்குக் குதிரைமுகமாறின காரணத்தால் மாவிட்டபுரமெனப் பெயரிட்டுக் கந்தசுவாமி கோவில் கட்டுவிக்கும்பொருட்டு அதற்கு வேண்டிய சகல வஸ்துக்களும் விக்கிரகங்களும் பிராமணரும் அனுப்பிவைக்கும்படி பிதாவாகிய திசை உக்கிரசோழனுக்குச் சகல காரியங்களையும் வரைந்து ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுகம் அனுப்பினாள். அத்திருமுகம் பெற்றவுடனே மகாராசன் மிகவுஞ் சந்தோஷித்து வாசித்தளவில் ஆனந்தபரவசனாய்க் கண்ணீர் ததும்பி மனம்நினைந்து நெக்குருகிக் கசிந்து அக்கடவுளின் கிருபையை இடையறாது துதித்துநின்றனன். அவன் தன் புத்திரிக்கு ஆக வேண்டிய சகல காரியங்களையும் செய்து முடித்துக்கொண்டு இலங்காபுரிக்கு ஒரு பிராமணனை அனுப்பவெண்டுமாகையால் தீக்ஷிதரில் ஒருவரைத் தன்னிடமனுப்பி வைக்கும்படி சிவாலயத் தலைவனுக்குக் கட்டளை அனுப்பி பிராமணர் தோணியேறுவது மகாதோஷ மாயிருக்க அரசனிப்படிக் கட்டளையனுப்பியிருக்கிறானே நானிதற்கென்ன செய்வேனென்று பயந்து தில்லைச்சிவாலயத்திலே மூன்றுநாட் பட்டினிகிடந்தான். அப்பொழுது சொப்பனத்திலே கீரிமலைச்சாரரிலுள்ள புண்ணி தீர்த்தத்தினாலுஞ் சிவாலயமகத்துவத்தினாலும் அப்பூமி மிகச்சிறந்ததெனக் கருதாது பாவமென்றதென்னை பிராமணர் நியமநிட்டை வழுவாதபடிக்கு மரக்கலங்களில் இராத்தங்காமற் பிரயாணஞ்செய்யலாம். காசியிற் பிராமணரும் அங்கேயிருக்கிறார்கள். அதுவுமன்றி நகுலமுனிவனும் அங்கேயிருக்கிறான். அந்நகுலமுனி அத்தல விசேஷத்தைக்கண்டு அவ்விடமிருந்து தவம்பண்ணும்போதே அங்கேபோக யோசனை பண்ணவேண்டியதில்லை யாதோராலோசனையுமின்றி அனுப்பலாமென்று உத்தரவுகிடைத்தது. அப்போது சிவாலயத் தலைவன் சந்தோஷமாய்ப் பெரியமனத்துளாரென்னும் தீக்ஷதரைச் சோழராசன் பதிக்கனுப்பினான். அவ்வரசன் சகலதளபாடங்களையும் விக்கிரகங்களையும் அவர்கையிற் கொடுத்தனுப்பினான். அவர்கைக்கொண்டு காங்கேயன்துறையில் வந்திறங்கினர். கந்தசுவாமி விக்கிரகம் வந்திறங்கினகாரணத்தால் அந்தத்துறைக்குக் காங்கேயன்துறையெனப் பெயராயிற்று.

மாருதப்பிரவல்லி ஒரு நாளிரவில் அந்தத்திருப்பணியைப்பற்றிய ஆலோசனையுடன் சப்ரமஞ்சத்திற் சாய்ந்து விழிப்பாயிருக்குஞ் சமயத்திலே அர்த்தசாமத்தில் உக்கிரமசிங்கமகாராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288401



சேனைகளையும் பாளையக்காவல்களையும் கடந்து பாளை யத்தினுட்புகுந்து அவளையெடுத்துத் தன்பாளயத்திற்குக் கொண்டுபோய்விட்டான். பொழுதுவிடிந்தபின் அவளுடையதாதி மாருக் தோழிமாருஞ் சேனைகளும் அவளைக்காணாமல் மனக்கலக்கமுற்று எங்குந் தேடியுங் காணாது தவித்து நிற்கும்வேளை யில் உக்கிரமசிங்கமகாராசன் பாளையத்திலிருக்கிறாளென்றறிந்து அங்கேபோய் நாங்களென்ன செய்யலாமென்று மனக்கலக்கத்தோடு பணிந்து வந்தனாதிகள் செய்துகூற, அரசன் அவள் என்பட்டத்துத் தேவியானாள் நீங்களிந்தச் சுபசோபனசெய்தியை இவளின் பிராமாதாவுக்குப் போய் அறிவியுங்களென்று வழிச்செலவுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தனுப்பிவிட்டான். அதன்மேல் உக்கிரசிங்கன் கதிரைமலைக்குப்போக யோசித்தபோது மாருதப்பிரவல்லி கந்தசுவாமிகோவிற்றிருப்பணி நிறைவேற்றி முதலாமுற்சவச் சிறப்புக்கண்டாலேயன்றி அவ்விடத்தைவிட்டுப் போகப்பிரியமில்லாமலிருந்ததினாற் பிரயாணத்தை நிறுத்தித் திருப்பணியை நிறைவேற்றி ஆனி உத்திரத்திலன்றைக்குத் துவசாரோகணந்துவங்கி உற்சவத்தை நிறைவேற்றிக்கொண்டு அதன்பின் மாருதப்பிரவல்லியுடனே அவ்விடம்விட்டுப்போனான். மாருதப்பிரவல்லி பாளயம் போட்டிருந்தவிடம் அது முதற்குமாரத்தி பள்ளமெனப் பெயராயிற்று. உக்கிரமசிங்கமகாராசனும் மாருதப்பிரவல்லியும் கதிரைமலையிற் சேர்ந்து விவாகச்சடங்கை நிறைவேற்றித் தெய்வேந்திரபோகத்தையனுபவித்திருந்தார்கள். தில்லையிற் பெண் எல்லைகடவாததாற் பெரியமனத்துளார் விவாகமில்லாதவராய் வந்திருந்தார். அவர் சாம்பசிவ ஐயரின்மகள் வாலாம்பிகையை விவாகஞ்செய்து அப்பெண்ணுக்குத் தில்லைநாயகவல்லி யென்று பெயரைமாற்றிக் கந்தசுவாமிகோயிலின் தென்புறத்திலே அக்கிரகாரத்திலிருந்து கொண்டுகோயிற்பூசை பண்ணிவந்தார். பிராமணக்குடும்பங்களிரண்டும் ஒரு குடும்பமாகி இருதிறக் கோவில்களுக்கும் ஒருவரே விசாரணைத்தலைவரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிரமசிங்கராசன் சிலகாலத்தின்பின் செங்கடக நகரியை இராசதானியாக்கி அங்கிருந்து அரசாண்டு வருங்காலத்தில் மன்மதரூபமுஞ் சர்வராசலட்சணமுடையவனாய்ச் சிங்கவாலுட னொரு குமாரனும் அவனுடனொருபெண்ணும் பிறந்தார்கள். அவ்விருவருக்கும் நரசிங்கராசனென்றுஞ் செண்பகாவதி யென்றும் பெயரிட்டு இருவருக்கும் விவாகத்தையுஞ்செய்து அவ்வாலசிங்கராசனைச் செயதுங்கபரராச பட்டத்துடன் முடியுங் சூட்டி அரசாளவைத்துச் சிலகாலத்தில் உக்கிரமசிங்கராசன் மரணமடைந்தான். செய்துங்கபரராசன் அரசாட்சியை நடத்தினான்.

## 6ஆவது அதிகாரம்

அக்காலத்திலே இரண்டு கண்ணுங் குருடனாகிய கவிவீரராகவ னென்பவன் யாழ்ப்பாண வாலசிங்கமகாராசன் பேரிற் பிரபந்தங்களியற்றிச் செங்கடகநகரிக்குப்போய் ராசசமுகத்தில் யாழ் வாசித்துப் பாடிவருங்காலத்தில் அரசன் மிகச் சந்தோஷப்பட்டு இலங்கையின் வடதிசையிலுள்ள மண்திடல் என்னும் இந்நாட்டை அவனுக்கு உபகாரமாகக்கொடுத்தான். அவனுபகாரம்பெற்ற இந்நாட்டுக்கு யாழ்ப்பாணமெனப்பெயரிட்டு இவ்விடம் வந்து சேர்ந்து வடதிசையிலிருந்து சிலதமிழ்க்குடிகளை அழைப்பித்து அக்காலத்திற் சிங்களவரையும் மற்றுப்பிறரையும் அரசாளக்கருதிக் தமிழ்க்குடிகளையு மங்கிருந்த சிங்களவருடன் குடியேற்றிச் சிலகாலம் அரசாட்சிசெய்து வயோதிகனாயிறந்தான். அப்போது யாழ்ப்பாணஞ் சிலகாலம் அரசனில்லாது தளம்பிக்கொண்டிருக்கையிற் சிங்களவரைத் தமிழ்க்குடிகள் மிகவும் வருந்தினதினால் அவர்கள் சகிக்கமுடியாது தங்கள் நாட்டுக்குப் போய்விட்டார்கள்.

இப்படி இருக்குங்காலத்திற் பொன்பற்றியூர் வேளாளனாகிய பாண்டிமளவனென்னும் பிரபு மதுரைக்குப்போய் அங்கு நின்று புறப்பட்டுச் சோழநாட்டிற்குப் போய்ச் சிலகாலமிருந்து இராச உத்தியொகத்திற்கேற்ற கல்வி கற்றுக்கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசையுக்கிரசோழன் மகன் சிங்கேதுவுக்கு மருமகனும், மேற்கூறிய மாரதப்பிரவல்லிக்கு மகன்முறையுஞ் சூரியவமிசத்தவனாகிய சிங்கையாரியனென்னும் இராசகுமாரனைக்கண்டு யாழ்ப்பாணத்தின் நிலைபரத்தை அறிவித்து இந்நாட்டை அரசுசெய்யும்படி வரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளச் சிங்கையாரியன் மறுக்காது உடன்பட்டுக்கல்வியறிவிலும் புத்திவிவேகத்திலு மெவர்களும் வியந்து கொள்ளத்தக்க உத்தண்ட வீரசிகாமணியுமாகிய புகனேகவாகு என்னும் மந்திரியையுங் காசியிலிருந்துவந்த வேதியர் குலத்துங்கனாகிய கங்காதரக்குருக்களையும் கூட்டிக்கொண்டு மற்றும் பரிவாரங்களுடன் பிரயாணப்பட்டுப் பாண்டிய இராசன் வழிவிட்டனுப்பயாழ்ப்பாணத்தில்வந்திறங்கிநல்லூரிலே அரசிருக்கை ஸ்தாபிக்கக்கருதிச், சோதிடர் சொல்லிய நன்முகூர்த்தத்திலத்திபாரம் போட்டு, நான்குமதிலெழுப்பி வாசலுமொழுங்காக விடுவித்து மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் பூங்காவையும் பூங்காவன நடுவே ஸ்நானமண்டபமும் முப்புடைக்கூபமு முண்டாக்கி அக்கூபத்தில் யமுனைநதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிடச் செய்து நீதிமண்டபம் யானைப்பந்தி குதிரைப்பந்தி சேனாவீரரிருப்பிடமுதலியவனைத்தையுங் கட்டுவித்துத் தன்னுடன் வந்த கங்காதரக்குருக்களும் அவர் பத்தினியாகிய அன்னபூரணியம்மாளும் வாசஞ்செய்தற்கு அக்கிரகாரமுண்டாக்கிக் கீழ்த்திசைக்குப்பாதுகாப்பாக வெய்யிலுகந்த பிள்ளையார் கோவிலையும் மேற்திசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையும் வடதிசைக்குச் சட்டநாதீசுரன்கோவில்களையுங்கட்டுவித்துத்தானும் தனது திலகவதியாரென்னும் பத்தினியுடன் கிரகப்பிரவேசஞ்செய்து ஐம்புலத்தறனொழிக்கு ஏனைமூவகை ஆச்சிரமிகட்கும், நற்றுணையாக வாழ்ந்திருந்தான். சிங்கையாரியமகாராசன் ஒருநாட் புவனேகவாகுவுடனாலோசித்துத் தமிழ்நாட்டரசருக்குத் திருமுகமெழுதித் தமிழ்க்குடிகளையழைப்பிக்க அவர்களுள் ஐந்து குடிமைகளுடன் வந்த பொன்பற்றியூர் வேளாளன் பாண்டியமளவனையும் அவன்தம்பியையும் மைத்துனனாகிய

13952 cc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்பகமளவனையும் தம்பியையும் திருநெல்வெலியிலும் காவிரியூர்ப்புரவலாதி தேவனின் மூத்தகுமாரனாகிய நரசிங்கதேவனையும் மயிலிட்டியிலும், வாவிநகர்வேளாளன் சண்பகமாப்பாணனையும், அவன் ஞாதியாகிய சந்திரசேகரமாப் பாணனையும் கனகராயனென்னுஞ் செட்டியையும் தெல்லிப்பளை யிலுமிருத்தினான். கோவிலூரார் பேராயிரமுடையாரென்னும் வேளாளனை இணுவிலிலிருத்த அவன் அவ்வூர் திருத்தப் படாததினால் அவனவ்வூரைலவிட்டு மேலைக்கிராமத்திற் போயிருந்தான். இராசமுத்திரைகளும் வரிசைகளும் பெற்ற கசசூரவேளாளன் நீலகண்டனையும் அவன்தம்பிமார் நால்வரையும் பச்சிலைப்பள்ளியிலும் சிகரமாநகரவேளாளன் கனகமளவனையும் தம்பிமார் நால்வரையும் புலோலியிலும் கூபநாட்டுவேளாளன் கூபகாவேந்திரன் புண்ணிய பூபாலனென்னு மிருவரைத் தொல்புரத்திலும் புல்லூர் வேளாளன் தேவாராயேந்திரனைக் கோயிலாக்கண்டியிலும் தொண்டைமண்டலத்து மண்ணாடு கொண்ட முதலியென்பவனை இருபாலையிலும் செய்யூர் இருமரபு துய்யதனினாய்க்கனென்னும் வேளாளனை நெடுந்தீவிலும் காஞ்சிபுரம் வல்லவனென்னும் பிரபுவை இரண்டுதுணைப்பிரபுக்களுடன் வெளிநாடென்னும் பல்வராயக்காட்டிலுமிருத்தினான்.

சிங்கையாரியனிப்படியே அந்தப்பிரபுக்களை அவரவர் அடிமை குடிமைகளுடன் அங்கங்கிருத்தியபின் வல்லிமாதாக்க ளென்கிரமசூரனை மேற்பற்றுக்கும் செண்பகமாதாக்களென்னும் சூரவீரியனைக் கீழ்ப்பற்றுக்கும் யோன் மாதாக்களென்னும் விசயபராக்கிரமனைத் தென்பற்றுக்கும் செண்பகமாதாக்கனென்னும் சூரவீரியனைக் கீழ்ப்பற்றுக்கும் யோன் மாதாக்களென்னும் சூரிவீரியனைக் கீழ்ப்பற்றுக்கும் யோன் மாதாக்களென்னும் விசயபராக்கிரமனைத் தென்பற்றுக்கும் அதிகாரிகளாக்கி உத்தண்டவீரசிகாமணியாகிய வீரசிங்கனென்பவனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாதிபதியாக்கி ஓர் சுபதினத்திலே நல்ல முகூர்த்தமிட்டு மகுடாபிஷேகம் நகர்வலம் வந்து சிங்காதனமேறிப் பூலோகதேவ வேந்திரனாகி அரசாண்டுவந்தான். இவ்வரசனுக்கு ஒருகை கூழங்கையாயிருந்ததினால் அவனைக் கூழங்கையாரியனென்னும் விசய கூழங்கைச்சக்கிரவர்த்தி யென்றுஞ் சொல்வார்கள். சிங்கையாரியமகாராசன் இப்படியே அரசாட்சியைக்கைப்பற்றி நடத்திவருகையிற் புறமதில்வேலையையுங் கந்தசுவாமிகோவிலையும் சாலிவாகனசகாப்த்தம் 870-ம் வருஷத்தில் புவனேகபாகு என்னு மந்திரி நிறைவேற்றினான். சிங்கையாரியமகாராசனும் மந்திரியும் கீரிமலைக்குப்போய்த் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனஞ்செய்து அவ்வாலயவிசாரணையும் அரசாட்சிக்குள்ளாக்கிக்கொண்டு கந்தசுவாமிகோவில்வந்து பெரியமனத்துளார்குமாரன் சிதம்பரதீக்ஷிதரின் மகனாகிய சின்னமனத்துளார் விருந்திடவுண்டு இளைபாற்றினார்கள். இவ்விருந்து மிகவுமுசிதமாயிருந்ததால் புவனேகவாகு விருந்திலே பருமாறிய ஒவ்வொருபதார்த்தங்களுக்கும் ஒவ்வொரு பாட்டுச் சொன்னார்.

## 7ஆவது அதிகாரம்

இப்படியே பாட்டுக்களைப்பாடிக் கோவிலைப்பற்றிய ஒழுங்குகள் பண்ணிக்கொண்டு திரும்பினார்கள். காரியங்களிதுவிதமாய் நடந்து வருகையில் ஒருநாளிரவு அரசன் சப்ரமஞ்சத்தில் நித்திரைசெய்யும் பொழுது பரமேஸ்வரமூர்த்தி பார்வதி சமேதராய் எழுந்தருளிவந்து கனவிலே தரிசனையாகி உத்தரவுகொடுத்தபிரகாரம் கைலை விநாயகரின் கோவிலின் பக்கத்திலே கைலாயநாதர் கோவிலையும், கைலாயநாயகியம்மன் கோவிலையும், எவற்றிலும் விசேஷமுறக் கட்டுவித்து மூன்று சபைகளையும், பரிவாரதேவர்களிருப்பிடங்களையும் உக்கிராணசாலை, யாகசாலை, அக்கிரகாரமடம், தேரோடும் வீதி அன்னசத்திரம் கற்றுமதிற்கோபுரம் இவைகளெல்லாவற்றையும் இயற்றுவித்துப் பாண்டிய அரசர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பாளையத்தலைவராயிருத்தி இராமநாதபுரத்தையாண்ட சேதுபதிக்குப் பாசுரமனுப்பிக் கேதாரத்திலே மன்மதன் பூசித்த ஆதாரலிங்கத்தை அழைப்பித்துவைத்துப் பாண்டியராசனைக் கொண்டு பிரதிஷ்டை செய்வித்துத் தன்னுடன்வந்த கங்காதரக் குருக்களைப் பூசைக்கேற்படுத்திக் கைலாயநாதர் திருவடிகளையே தியானித்துக் கொண்டு நல்லூர்க்கைலையில் நெடுங்காலம் அரசாண்டு வயோதிகனானபின் தன்மகன்குலசேகர சிங்கையாரியனுக்கு முடிசூட்டி வைத்துச் சிலகாலத்திற் சிவபதமடைந்தான்.

குலசேகரசிங்கையாரியன் அரசாட்சிமுறைகளைத் திருத்தி குடிகள் பிரியப்படத்தக்கதாய் நடந்து சமாதான அரசாட்சிசெய்து தன்மகன் குலோத்துங்க சிங்கையாரியனுக்கு அரசாட்சியை ஒப்பித்துச் சிலகாலம் நோயினால்வருந்தித் தேகவியோகமானான்.

குலொத்துங்க சிங்கையாரியன் வயல்நிலங்களைத்திருத்துவித்து வருமானங்களை அதிகரிக்கச்செய்து குடிகள் சந்தோஷங் கொள்ளத்தக்கதாய்ச் சமாதான அரசாட்சிசெலுத்தித் தன்மகன் விக்கிரமசிங்கையாரியனுக்கு முடிசூட்டிப் பரமபதமடைந்தான்.

இவன் காலத்திலே சிங்களவருக்குந் தமிழருக்குஞ் சமயாசாரங் களைப் பற்றிப் பெருங்கலகம் உண்டுபட்டதினாற் சிங்களவர் தமிழரைக் காயப்படுத்தியும் இரண்டுபேரைக் கொலைசெய்தும் முரட்டுத்தனங்காட்டி நின்றதையறிந்த விக்கிரமசிங்கையாரியன் அவர்களைப்பிடிப்பித்து விசாரணைசெய்து அக்காலத்துக்குத் தலைவனாய்நின்ற பஞ்சிவண்டா வென்பவனையும் அவனைச்சேர்ந்த அறுபத்தேழு சிங்களவரையுங்கொலைசெய்து பின்னுஞ் சிறைச்சாலையை யடைவித்தான். அதன்பின் கலகமடங்கிச் சில சிங்களக்குடிகளொளித்து இந்நாட்டைவிட்டுப்புறப்படவே, அரசன் தமிழர்மேற்பற்றுள்ளவனாகவும் சிங்களவர்மேற் பற்றிலாதவனாகவுமிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுக்குப்பின் இவன் மகன் வரோதய சிங்கையாரியன் அரசாட்சியை ஒப்புக்கொண்டு மார்க்கவழிபாடுகளைக்குறித்துச் சிலகட்டளைகளை ஏற்படுத்தி இருதிறக்குடிகளையும் அரசாண்டு தன்குமாரன் மார்த்தாண்ட சிங்கையாரியனுக்குப் பட்டத்தைக் கொடுத்துப் பரகதியடைந்தான். இவ்வரசன் கல்வியும் வேளாண்மையும் விருத்தியாகத்தக்க முயற்சிகளைச்செய்து வன்னியர்களால் வந்தகலகங்களைச் சமாதானப்படுத்தித் தயாளகுணமுள்ளவனாய்க் குடிகளைத்தாய்போலக் காப்பாற்றி அரசாண்டுவருங் காலத்திற் சுகவீனத்தால் மரணமடைந்தான். இது செய்தியைக் கேட்டமாத்திரத்தில் துக்கசாகரத்தில் அமிழ்ந்திக் கண்ணீர்விட்டுப் பதறாதார் யாருமில்லை. இருதிறத்துக் குடிகளும் நினைந்து நினைந்து தடுமாறி உழன்றனர்.

## 8ஆவது அதிகாரம்

அவன்பின் அவன்மகன் குணபூஷண சிங்கையாரியன் முடிகூடி அரசியற்றிவந்தான். அவன்பிதாவிலும்அதிதயாளகுணமுள்ளவனாய்க் குடிகளைப்பாரபட்சமின்றி அரசாண்டு, கல்வி, செல்வம், வர்த்தகம் முதலியயாவற்றையும் விருத்திசெய்து பூரணாளுடையனாகித் தன்குமாரன் வீரோதயசிங்கையாரியனுக்குச் சிங்காசனத்தை ஒப்பித்துச் சிலகாலத்தில் தேகவியோகமடைந்தான்.

இவன் காலத்திற் சிங்களக்குடிகளாற் கலகமுண்டாக அக்கலகங்கள் வன்னியராற் றூண்டிவிடப்பட்ட தென்றறிந்து வன்னியர்கள்மேற் படையெடுத்துப்போய் ஏழுவன்னியர்களின் கிருகங்களைக்கொள்ளையடித்து, அவ்வன்னியர்கள் ஒருபோதும் அவ்வித எண்ணங்கொள்ளாதபடி தண்டித்துத் திருப்பினான். அவன் திரும்பியவுடன் சிங்களக்கலகக்காரர் அவன்காலடியில் விழுந்து தங்கள் குற்றங்களைப் பொறுத்தருளல் வேண்டுமென்று வணங்கி நிற்க ஒருவாறு சந்தோஷித்து அக்குற்றங்களை மன்னித்து நன்முகங்காட்டி வேண்டியபுத்திமதிகளை ஊட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் மதுரையிலே, சந்திரசேகரபாண்டியனுடன் சத்துருக்கள் எதிர்த்து யுத்தஞ்செய்து இராச்சியத்தைப் பிடித்துக் கொள்ளப் பாண்டியன் ஒளித்து யாழ்ப்பாணத்துக்கு ஓடிவந்து விரோதயசிங்கையாரியனென்னு மரசனிடம் அடைக்கலம்புகுந்தான். அப்பொழுது வீரோதய சிங்கையாரியன் பாண்டியன் கீழ்ப் பாளையக்காரராயிருந்த சேதுபதி முதலான வீரர்களோடுந் தனசேனைத்திரள்களோடும் மதுரையிற் சென்றுபோராடிச் சத்துருக்களைத் துரத்தி பாண்டியராசனின் அரசாட்சியை நிலைக்கச்செய்து தன்பதியடைந்தான்.

இவன்தான் மறுபடியும் கன்னியரின் கிருகங்களைக் கொள்ளையாடவர இருக்கிறானென்று ஒரு பொய்க்கதையைக் கட்ட வன்னியர்கள் பயந்து கண்டி இராசனிடம் போய்த்தங்களுக்கு உதவி செய்யும்படி கேட்க அதற்கு அவன் யாழ்ப்பாணம் என்முன்னோர் பரிசாகக்கொடுத்த இராச்சியமாயிருப்பதால் அதற்கு விரோதமாய்ப் படையெடுத்து என்குலப்பிதாக்களின் பெயருக்கு அவகீர்த்தி வரச்செய்யமாட்டேனென்று மறுத்துச் சொன்னதினால் அவ்வேழு வன்னியர்களுந் தங்களுக்குள்ள திரவியங்களிற் சில பாகங்களைக் கொண்டுவந்து வீரோதயசிங்கையாரியனைக்கண்டு நன்முகம் பெற்றுத் திரும்பிப்போய்ப் பயமுற்றிருந்தார்கள். வீரோதயசிங்கையாரியன் போசனஞ்செய்து அன்றிரவிற்றானே சப்பிரமங்சத்தில் நித்திரைசெய்கையிலே சடுதியாய் இளவயதில் மரணித்தபடியால், அம்மரணத்தைக்குறித்துப் பலவாறாய்ப்பேசிக்கொண்டனர். அவன்குமாரன் செயவீரசிங்கை யாரியன் சிறுவயதிலேமுடிசூட்டப்பெற்று, அதிவிவேகத்தோடு சாமார்த்தியமாய்ச் சத்துருபயமின்றி இராச்சியபரிபாலனஞ்செய்து குடிகளை இரட்சித்துத் தன்கீர்த்தியை விளக்கிக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9ஆவது அதிகாரம்

அக்காலத்திற் கண்டி நாட்டை அரசாண்ட புவனேகவாகு என்பவன் முத்துச்சலாபத்தைக் குறித்து இவனுடன் பகைத்துத், தன் பராக்கிரம சவுரியத்தினாற் யுத்தஞ்செய்து இவனதிராச்சியத்தைக் கவரவேண்டுமென்று துணிந்து நெருஞ்கினதினால் இவனும் அவனுடன் எதிர்த்து மண்மாரி மழைமாரி பொழிந்தாற்போல் யுத்தஞ்செய்து வெற்றிகொண்டு மிதுன யாழ்க்கொடிதூக்கிச் சாலிவாகன சகாப்தம் 1380-ம் வருஷந்தொடங்கி 1392-ம் வருஷம் வரையில் இலங்கை முழுதையும் ஒருகுடைக்கீழ் அரசாண்டு வந்தான். சகாப்தம் 1392-ம் வருஷத்திலே பராக்கிரமவாகுவென்பவன் பாண்டியராசனைப்பிணைவைத்துச் செயவீரசிங்கையாரியனிடத்தில் இராச்சியத்தைப் பெற்றுக் கொண்டான். இவனும் இவனிற் பின்வந்த வேற்றரசருமொழுங்காய்த் திறைகொடுத்துவந்தார்கள். இவன் நெடுங்காலம் அரசாண்டு தன் மகன் குணவீரசிங்கையாரியனிடத்தில் இராச்சியத்தை ஒப்பித்துப் பரலோகவாழ்வடைந்தான்.

கண்டிதேசத்தரசர் கொடுத்ததிறையைக் கொடாததினாற் குணவீரசிங்கையாரியன் தன் சாமர்த்தியத்தினாற் சில பகுதிகளில், தமிழ்க்குடிகளையிருத்தி அரசாண்டு மதுரையை அரசாண்டநாயக்கர்களுக்குச் சிலபல உதவியையுஞ் செய்தான். இவன் தன்பிதாவிலு மதிவிசேஷமாய் யாவரும் மெய்ச்சிக்கொள்ளத்தக்க தாய் அரசியற்றி வயோதிகனாய்த் தனது மகன் கனகசூரியசிங்கையாரியனுக்குப் பட்டத்தைச்சூட்டிச் சிவபதமடைந்தான்.

இவ்வரசன் சிங்களவருக்கு அதிக இட்டத்தைக்கொடுத்து மேன்மையாக நடத்தினதினால் அவர்கள் அகங்காரங்கொண்டு வன்னியர்களின் உதவிபெற்றுக் கலகஞ்செய்தபோது கனகசூரிய சிங்கையாரியன் இரவிலே தன்மனைவி மக்களோடு வடதேசத்துக்கோடிப்போய்விட, விசயவாகுவென்னுஞ் சிங்களவன் இத்தமிழரின் நடையுடைபாவனைகளை முற்றாய் மாற்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களைப்போலாக்கவேண்டுமென்னு மெண்ணத்தினால் இவர்களுக்கெல்லாந் தானே அரசனெனத்தலைப்பட்டுப் பதினேழுவருஷகால மரசியற்றியுங்கீழமையாதிருந்தார்கள்.

கனகசூரிய சிங்கையாரியன் தன்குமாரராகிய பரராச சேகரனையும், செகராசசேகரனையும் திருக்கோவிலூரில் இராசகுடும்பத்தவர்கள்பாற் கல்வி கற்கவைத்து யாத்திரா தரினஞ்செய்யும்படி மனைவியுடன் காசிபரியந்தமுள்ள திருத்தலங்கடோறும் போய்த்திரும்பிக் கோகன்ன சிவாலயத்திற் சென்றுசுவாமிதரிசனங்செய்து அங்கு சிலவருடங்களாய்ச் சிவராத்திரி விரதமனுட்டித்து வருங்காலத்தில் ஒருநாள் சுவாமி கனவிலே தரிசனமாகிச் சொல்லியவண்ணம் மதுரைக்குப்போக நினைத்து விரதோத்தியாபனக் கிரியைகளைச் செய்துமுடித்துக்கொண்டு திருக்கோவிலூருக்குப்போய் அங்கே தன்பிள்ளைகள் வளர்ந்து போர்சாமர்த்தியத்திலுங் கல்விப்பயிற்சியிலுஞ் சரீரவழகிலும் அதிகரித்திருப்பக்கண்டு அளவற்ற சந்தோஷமுடையவனானான். பிதாவைக் கண்டபோதே பிள்ளைகளின் முகங்கள் சூரியனைக்கண்ட செந்தாமரைப் புஷ்பங்கள்போலாயின. பிள்ளைகளிருவரும் சத்துருவைச் செயிக்கவும், இராச்சியத்தை மீட்டுக்கொள்ளவும் செய்தபிரயத்தனங்களைக் கண்டபிதா மிகுந்த சந்தோஷத் தோடு முத்தமிட்டு அங்குள்ள இராசகுடும்பத்தாருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்து உத்தரவு பெற்றுக்கொண்டு பிள்ளைகளையும் மனைவியையுங் கொண்டு மதுரைக்குப்போய்ச் சேர்ந்தான். அங்கு சென்றவுடனே அத்தேசத்தைப் பகுதி பகுதியாயாண்ட சிற்றரசர்களெல்லோரும் தங்கள் சேனைகளையும் படைக்கலங்களையுங் கொடுக்கத் தத்துவம் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து கோட்டைக்குள் மேற்குவாயில் வழியாய் நுழைந்தான்.

விசயவாகு காத்திராதவேளையிற் கனகசூரிய சிங்கை யாரியன் நுழைந்தபோதிலும் அவன்சடுதியாய்ச் சேனைகளைச் சேர்த்துக்கொண்டு அஞ்சாநெஞ்சனாய் அணி அணியாய்வகுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கச் செகராசசேகரனும் பரராசசேகரனும் விசயவாகுவின் துணிவையும் அவன் செய்யும் வீரத்தையுங்கண்டு வாட்படையுடனே போர்முனையிற் சிங்கம்போலப்பாய்ந்து சேனைகளையும் அவனையும் வாளுக்கிரையாக்கினான். அதன்பின் பரராசசேகரன் தன்பிதா அரசியற்றவும் தான் தேசவிசாரணை செய்யவும் முயன்று, விசயவாகுவின் கலகத்துக்குடன்பட்டு நின்றசிங்களவரின் அநேகரைப்பிடித்துக் கொலைசெய்வித்தான். அநேகசிங்களக்குடிகள் தங்கள் குடும்பங்களோடு கண்டிநாட்டிற்போய்க் குடியேறின படியால், எஞ்சி நின்ற சிங்களக்குடிகள் தமிழருக்கு மிகவும் பயந்து நடந்தார்கள். பரராசசேகரன் சோழராசா வம்ஷத்திலுள்ள இராசலட்சுமியம்மாளென்னும் பெண்ணை விவாகஞ்செய்ததாற் பிதாவாகிய கனகசூரிய சிங்கையாரியன் அவனையே இராச்சிய பரிபாலனங் செய்யும்படி முடிசூட்டிச் சிலகாலம் ஆறியிருந்து பரமபதமடைந்தான்.

## 10ஆவது அதிகாரம்

பரராசசேகரன் பொன்பற்றியூர் வெள்ளாளமரபின் முடிதொட்ட வேளாளனென்னும் பாண்டிமளவன் குலத்திற்பிறந்த அரசகேசரியின் மகள் வள்ளியம்மையை இரண்டாம் மனைவியாகவும், மணவக்குடியிலிருந்துவந்த மங்கத்தம்மாளென்பவளை வைப்புப் பெண்ணாகவும் வைத்திருந்தான். பரராசசேகரனுக்குப் பட்டத்துத் தேவியாகிய இராசலட்சுமியம்மாள் சிங்கவாகு பண்டாரம் என்னுமிரண்டு பிள்ளைகளையும் இரண்டாந் தேவியாகிய வள்ளியம்மையென்பவள் பரநிருபசிங்கம் முதலிய நாலுபிள்ளைகளையும், வைப்புப்பெண்ணாகிய மங்கத்தம்மாளென்பவள் சங்கிலி என்னும் குமாரனையும் பெற்று, இராசகுடும்பம் வரவர அதிகமாய்ப்பெருகப் பரராசசேகரன் அதிவிவேகத்தோடு அரசாட்சி செலுத்திவந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செகராசசேகரன் கல்வியறிவிற் சிறந்தவனாய் வடநாட்டிலுந் தென்நாட்டிலுமிருந்து கொண்டு சகலசாஸ்திரிரங்களையும் பிரபலப்படுத்தும்பொருட்டு வித்வான்கள் பலரைச்சேர்த்துச் சங்கங்கூட்டிச் சிலநூல்களைச் செய்வித்துத்தானுஞ் செகராசசேகர மென்னுஞ்சோதிடமுதலிய பலநூல்களையுஞ் செய்தான். பரநிருபசிங்கத்தின் மைத்துனனும், பரராசசேகரன் மருமகனுமாகிய அரசசேகரியென்பவன் இரகுவமிசமென்னு நூலை வடமொழியிலிருந்து புராணநடையாகப் பாடிப் புண்ணிய பூமியாகிய திருவாரூரிற் சென்று அங்குள்ள கல்விமான்கள் சமுத்தில் அரங்கேற்றிப் பெருங் கீர்த்தியடைந்தான். இவ்வாறே யாழ்ப்பாணம் கல்வியறிவிற்சிறந்து விளங்கிற்று. பரராசசேகரனுந் தம்பியும் சிங்கையாரியப்பட்டத்தைச் சிங்கையெனச்சுருக்கித் தங்கள் பெயர்களின் முன்வைத்துச்'சிங்கைப்பரராசசேகரன், சிங்கைச்செகராசசேகரன் என்றெழுதி வந்தார்கள். செகராசசேகரன் பாண்டிநாடு திருவாவடுதுறை முதலிய ஆதீனங்களிலுள்ள சாஸ்திரங்களனைத்தையுமழைப்பித்து எழுதுவிக்கும்பொருட்டு அடிக்கடி சேதுவுக்குப் போக்குவரவு செய்துகொண்டிருந்தான். இராசகுமாரர் கல்வியிலும் படைப்பயிற்சியிலும் தேகவளர்ச்சியிலும் நாளுக்கு நாள் அதிகரித்து உயர்குணம் முதலிய யாவற்றிலுஞ் சிறப்புற்றிருந்தார்கள். அவர்களுக்குட் சங்கிலி என்பவன் கபட சிந்தனையுந் துர்க்குணமுங் கடுவிவேகமும் துஷ்ட நடையுமுள்ளவனாயிருந்தான்.

## 11ஆவது அதிகாரம்

இப்படியிருக்கும் நாளில் ஒருநாள் அகத்தியமுனிவரின் பௌத்திரருஞ் சித்தமுனிவரின் புத்திரருமாகிய சுபதிட்டமுனிவர் பரராசசேகர மகாராசனைக்காணும்படிவர, அரசன் அவ்விருஷிக்குத் தான்செய்யவெண்டிய ஆசாரவுபசாரங்கள் அனைத்தையுஞ்செய்து ஆசனத்திருத்தித் தேவரீர் என்பிதாவுக்கு வருங்காலசம்பவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்திருந்தும் அவைகள் அடியேனுக்குப்புலப்படாமையால், அவைகளையும் இனிமேலிவ்வரசாட்சிக்கு வருஞ்சம்பவங்களையுந் தெரிவிக்கவேண்டுமென்று அஞ்சலிசெய்து நின்றான். சுபதிட்டமுனிவர் அரசனைநோக்கி உன் அரசாட்சி இன்னும்சிலகாலம் சிறப்பாய் நடந்துவரும், முன்முடி சூட்டிய முகூர்த்தந் தப்பிப்போனதினால் உன்னிற்பின் முடியைச் சூட்டு தற்குப்பிள்ளைகளில்லை, என்றுசொல்ல அரசன் பட்டத்துத்தேவிபெற்றபிள்ளைகளும், இரண்டாந் தேவிபெற்ற பிள்ளைகளும் இருக்கப் பிள்ளையில்லையென்ற தென்னையென, ஓ அரசனே இத்தனைபிள்ளையுண்டென்பது மேய்யே அவர்களுள் பட்டத்துத்தேவிபெற்ற மூத்தகுமாரன் விஷகடியினாலிறப்பான். இளையகுமாரன் வாளினால் வெட்டுண்டிறப்பான். உன் இரண்டாந்தேவியின் மூத்தகுமாரன் அரசியற்றி வருங்காலத்தில் உன்வைப்புப்பெண்ணின் மகன் அவனை வாய்ப்பேச்சினால் மயக்கி, அரசாட்சியைக் கவர்ந்துகொண்டு கொடுங்கோலரசு செலுத்துவதைக் குடிகள் தாங்கமாட்டாது பொறாமைகொள்வதினாலும் இரண்டாந்தேவியின் குமாரனைவெறுத்துப் பகைகொள்வதினாலும் இராச்சியம் அந்நியர்கைக்கீழாகுமென்றார். அரசன் இராச்சியம் எப்பொழுது மிளுமென்று கேட்க, இராச்சியம் முதற்பறங்கிக்காரர் கையிலகப்படும். அவர்கள் சிவாலயங்களை இடித்துத்தள்ளிக் கிறீஸ்துவசமயத்தைப் பரப்பும்படி குடிகளை நெருக்கி நாற்பது வருடகாலம் அரசாண்டபின், உலாந்தேஸ்மன்னர் பறங்கிக்காரரை உபாயமாகப்பிடித்துக் கத்தோலிக்கு வேதத்தைப்பரப்பும்படி தஞ்சமயகோவில்களைக் கட்டுவித்து சமய காரியங்களில் நெருக்கிடை பண்ணி அநேகவரிகளை வைத்துக் குடிகளைவருத்தி நூற்றிருபது வருடத்துக்குமேற்பட அரசாட்சி செய்வார். அப்பால் இங்கிலீஷ்மன்னர்கள் அவரிடத்தில் இராச்சியத்தைப்பெற்றுச் சமயகாரியங்களிற் பலவந்தஞ்செய்யாமல் எவர்களுந் தங்களிஷ்டப்படி சிவலாயச்சேவை முதலியவற்றையுஞ் செய்து முடிக்கத்தடைசெய்யாது நீதியாய் முற்கூற்றில் அரசாண்டு பிற்கூற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவிஷயங்களில் அநீதியாய் அரசுசெலுத்துவாரென்றும் தம் அரசாட்சியை இழந்துபோகுமுன்னே சிங்கையாரிய மகாராசன் கட்டுவித்த கோவிற்றிருப்பணிகளும் விசயராசன்செய்த திருப்பணிகளும் நிறைவேற்றமாகுமென்றும், அவ்வாலயங்களிலே அநேகர் புகழைநாட்டிக்கொள்வதற்காகக் கட்டத்தொடங்கி நிலையந்தவறிப்போவார்களென்றும் அவ்வாலயங்களில் வடமதில் வாயிற்பாதுகாப்பாய் நின்ற சிவாலயமொன்று மாத்திரம் சிவகடாட்சம்பெற்ற ஒருவனால் முதல் முதல் நிறைவேறுமென்றும் மற்ற ஆலயங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நிறைவேற்றமாகுமென்றும், எல்லாவாலயங்களிலும் அதிவிசேஷமான கைலாயநாதர் கோவிலும் கைலைநாயகியம்மன் கோவிலும், கைலைவிநாயகர் கோவிலும் முன்னிருந்தபடி கட்டியெழும்புதற்கு கைலைநாதராற் பூரணகடாட்சம் பெற்றவர்களே முயல்வார்களென்றும் அப்பொழுது அவர்களிடத்தில் வெளிப்பட்டுவரும் வாலசிங்கமென்பவன்கையில் இலங்கை அரசாட்சியை ஒப்பித்துவிட்டுத் தங்கள் நாட்டுக்குப்போவார்களென்றும் கேதாபுரியை அரசாளும் பூலோகசிங்க சக்கிரவர்த்தியின் மகன் ஆரிய சிங்கசக்கிரவர்த்தி கன்னியாகுமரி தொடங்கி இமயமலைபரியந்தமுள்ள ஐம்பத்தாறு தேசங்களையும் ஒரு குடைக்கீழ் அரசாளுவானென்றும், உன்சந்ததியாருக்குள் இனி ஒருபோதும் அரசாட்சி வருவதில்லை யென்றுஞ் சொல்லிச் சுபதிட்டமுனி எழுந்துபோனார்.

## 12ஆவது அதிகாரம்

இப்படி உறுதிவாக்காக இருஷி சொன்னவைகளை நம்பியும் நம்பாமலுமிருக்கச்,சிலகாலத்தில் மூத்தகுமாரன் சடுதிமரணமடையத், தன் இளையகுமாரனாகிய பண்டாரமென்பவனுக்குப் பட்டஞ்சூட்டிவைத்துத் தான்யாத்திராதரிசனஞ்செய்யும்படி பரிவாரங்களுடனே கும்பகோணத்திற்குச் செல்ல, அங்கு சோழதேசத்தரசன் பட்டத்துத்தேவியோடு வந்திருக்கக்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288401

சந்தோஷங் கொண்டாடிக்கொண்டிருந்தான். இராசாவின் மூத்தகுமாரனைச் சங்கிலி நஞ்சூட்டிக்கொன்றானென்பது ஒருவருக்குந் தெரியாமற்போயிற்று, அங்குசங்கிலி செய்த குழப்பத்தினால் அவனையும் பரராசசேகரனையும் பரிவாரங்களையும் சோழராசன் பிடித்துச் சிறையில்வைக்கச் சேனைகளுடன் பின்னாகப்போன பரநிருபசிங்கம் அதைக்கேள்விப்பட்டு அட்டகாசங்செய்து யுத்தஞ்செய்கையிற் சடுதிமரணமடையத்தக்க மூன்று காயங்கள் பட்டும் அதைக் கவனியாது வீராவேஷங் கொண்டாடிக்கொண்டிருந்தான். இராசாவின் மூத்த குமாரனைச் சஞ்கிலி நஞ்சூட்டிக்கொன்றானென்பது ஒருவருக்குந் தெரியாமற்போயிற்று, அங்கு சங்கிலி செய்த குழப்பத்தினால் அவனையும் பரராசசேகரனையும் பரிவாரங்களையும் சோழராசன் பிடித்துச் சிறையில் வைக்கச் சேனைகளுடன் பின்னாகப்போன பரநிருபசிங்கம் அதைக்கேள்விப்பட்டு அட்டகாசஞ்செய்து யுத்தஞ்செய்கையிற் சடுதி மரணமடையத்தக்க மூன்று காயங்கள் பட்டும் அதைக் கவனியாது வீராவேஷங்கொண்டு போராடிச் சோழராசனைச் சிறையிலிட்டு அவன்சேனைகளைத் தன்வசப்படுத்திக்கொண்டு தகப்பன் முதலிய சகலரையுஞ் சிறைச்சாலையினின்று நீக்கி மூன்று மாதமங்கிருந்து காயங்களையுமாற்றினான். அப்பொழுது சோழராசன் தன் இராச்சியத்தைத் தான் திறைந்து ஆளுகிறேனென்று கேட்டுக்கொள்ள அதற்கேற்ற பிணை வாங்கிக் கொண்டு இராச்சியத்தை ஒப்பித்துவிட்டு யாழ்ப்பாணத்திற்குத் திரும்பினான். யாழ்ப்பாணம் வந்தவுடன் பரராசசேகரன் பரநிருபசிங்கத்தை யழைத்துக் கனவரிசைகள்கொடுத்து, மிகவும் கனப்படுத்திக் கள்ளியங்காடு, அச்சுவேலி, சண்டிலிப்பாய், அராலி, உடுப்பிட்டி, மல்லாகம், கச்சாய் முதலிய ஏழு கிராமங்களையுஞ் சொந்தமாகச் செப்புத்தகட்டினாற் கட்டயமெழுதிக்கொடுத்து அரசாட்சியின் இரண்டாமதிகாரமுடையவனாகவுமாக்கினான். அது சங்கிலிக்கு மனவருத்தமாயிருந்தும் வெளிக்குக் காட்டாமலடக்கிக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியிருக்குங்காலத்தில் கண்டிராசன் மனைவிக்கிருந்த வயிற்றுவலி அங்குள்ள பண்டிதரால் நீக்கமுடியமைகண்டு அவ்வரசன் பரராசசேகரனுக்குப் பாசுரமனுப்ப பரராசசேகரன் பரநிருபசிங்கத்தை நோக்கி உத்தரவு செய்யப் பரநிருபசிங்கம் போயவ்வியாதியை ஒரே ஔஷதத்தினால் மாற்றி வரவேண்டுமென்னும் பேராசையினால் தன்சாமர்த்தியத்தைக்காட்டி அந்நோயை நீக்க அரசன் தான்செய்ய வேண்டிய உபகாரமனைத்தையும் செய்து அனுப்பி வைத்தான். ஒருநாள் பண்டாரமென்னும் இளவரசன் நந்தவனத்திற் சென்று வேட்டையாடிவருகையிற் சங்கிலியென்பவன் மறைவில் நின்று வாளினால்வெட்டிக்கொலைசெய்து இராச்சியந்தன்னுடையதென்று முன்னிற்கப் பரராசசேகரன் தன்னுயிரையும் சிதைப்பானென்ற பயத்தினால் ஒன்றும் பேசாமல் மவுனமாய் ஒதுங்கிவிட்டுப் பரநிருபசிங்கம் இவனுக்கு இராச்சியம் எப்படிக்கிடைக்குமென்று சொல்லித் தன்பரிசனங்களோடு யுத்தத்திற்கு வெளிப்பட்டான். அது கண்டு சங்கிலி பரநிருபனிடத்திற்குப் போயண்ணாவே நாங்களிருவரும் சரிவந்த பங்குக்காரர்களாயிருந்து கொண்டு ஒருவரையொருவர் வதைத்தக்கொல்லும் பட்சத்தில் வன்னியர்களிராச்சியத்தைக் கவர்ந்துகொள்ளுவாராகையால் இப்போதைக்கு நான் இராசாவாகவும் நீர் மந்திரியாகவுமிருந்து எங்கள் பிதாவினால் உமக்குக்கிடைத்த அதிகாரத்தை உமது மகன் பரராசசிங்கனுக்குக் கொடுத்து வேறு ஒழுங்குகள் பண்ணும் வரையில் இராச்சியவருமானங்களை இருவரும் பகிர்ந்துகொண்டு ஒத்திருந்தால் எவ்வளவோ காரியங்கள் செய்து மடிக்கலாமேயென்று சொல்லி வாய்ப்பேச்சினால் மயக்கப் பரநிருபசிங்கன் இசைந்து மந்திரியுத்தியோகத்திற்கு ஏற்பட்டான், சிலகாலத்துக்குச் சங்கிலி தன்சேனைகளை வசப்படுத்திக்கொண்டு பரநிருபசிங்கத்துக்குக் கொடுத்து வந்தவருமானப் பங்கையும் தேசவதிகாரத்தலைமையையும் நிறுத்தி மந்திரி உத்தியோகச் சம்பளத்தை மாத்திரங் கொடுத்துப் பரநிருபசிங்கம் சோழராசனுக்குப் பாசுரமெழுதி இன்று முதலாகத் திறைகொடுக்கவேண்டாமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைசெய்தான். அந்த நாட்களிற் பறங்கிக்காறர் வியாபாரஞ் செய்வதற்கு வரத்துப்போக்காயிருக்கையில் அவர்கள் செய்த உபதேசத்தினாற் சில எளிய சனங்கள் அவர்கள் மயக்கத்தினாற் சார்ந்திருக்கிறார்களென்பதைச் சங்கிலிராசன் கேள்விப்பட்டு ஆண், பெண், குழந்தையென்னும் பேதம் பாராமல் வெட்டுவித்ததுமன்றி அங்கிருந்த புத்தசமயக்கோவில்களையும்மிடிப்பித்துச் சிங்களக் குடிகளையும் முழுதாகத் துரத்திவிட அவர்கள் போய்க்கண்டி நாட்டிலும் வன்னிக்காடுகளிலும் ஒதுங்கி விட்டார்கள். அதுமுதல் யாழ்ப்பாணத்தில் சிங்களவரிருந்ததில்லை. முன்விசய வாகுவின் கீழ்போர்ச் சேவகராயிருந்த யாவுகச்சேனையிலே கொலைக்கும் தண்டனைக்கும் தப்பியிருந்த சிலபாவுகக்குடிகள் சாவாங்கோட்டையிலும் சாவுகச்சேரியிலும் இருக்கக்கண்டு அவர்களையுந் துரத்திவிட்டான்.

## 13ஆவது அதிகாரம்

அக்காலத்தில் பத்தொன்பது வன்னியர்கள் தென்னாட்டிலிருந்து மரக்கலமேறிவருகையில் நெடுந்தீவுக்கடலிலமிழ்ந்திப்போக வேறு மரக்கலங்களில் அதிகதிரவியத்தோடு வந்திறங்கி அவர்கள் மனைவியரும் கரைப்பாட்டு வன்னியனும் அவன் மனைவி யம்மைச்சிநர ச்சியாரும் கந்தரோடைக்குறிச்சியில் வீடுகட்டிக் கொண்டிருந்து தங்கள் வன்னியர்கள் வரும்போது கூட்டிக்கொண்டு வன்னிநாட்டுக்குப் போகலாமென்றிருக்க அவ்வன்னியர்கள் நெடுங்காலமாய் வரக்காணாமையால் வன்னிச்சிகளாங்காங்கே வீடுகட்டிக்கொண்டு தங்கள் தலைவரின் வரவை எதிர்பார்த்து வேலைக்காரரின் உதவிபெற்றிருந்தார்கள். அப்போது கரைப்பிட்டிவன்னியன் தன் கீழ்ச்சேவகராயிருந்த அறுபதுகத்திக்காரர் நம்பிகளுள் திலநம்பியின் மகளைக் கற்பழித்ததினால் அவள் தகப்பன் மறுநாள் வன்னியன் தெய்வவழிபாடு செய்துகொண்டு நிற்கையிற் கொலைசெய்துவிட அவன்மனைவி அம்மைச்சிநாச்சியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல்வெளியிலோடித்திரிந்து தான் எங்கேபோகலாமென்று அறியாதவளாய், மயங்கித்தற்கொலை செய்திறந்தாள். நம்பி தலைவனும் இராசவிசாரணைக்குள்ளாகிக் கொலையுண்டிறக்க, அவ்வன்னியன் கையிலிருந்த திரவியங்களெல்லாஞ் சங்கிலி இராசனுக்காயின. மற்ற நம்பிகள் சீவனத்துக்கு வழியில்லாததினாற் சாணாகக்கும்பமென்னும் அயற்கிராமத்திருந்த சாணாகருக்குப் பணிவிடைக்காரராகிப் பனையேறுந்தொழில் பயின்று, பின் அத்தொழிலைச்சொந்தமாக்கிக்கொண்டனர். இவர்கள் தங்கள் குலத்தைவிட்டு நளுவினதால் அவர்களின் குலம் நளுவரென்றாய், இக்காலத்தில் நளவரென்றாயிற்று.

இராமநாதபுரத்திலிருந்து சிலமறவர் வந்து, மறவன்புலவிற் குடியிருந்து, உள்நாடுகளிற் பெருங்களவு நடத்தினதினால் அவர்களில் சிலரைச்சங்கிலிராசன்பிடித்துக்கொலை செய்விக்கமிச்சமானகுடிகள் பன்றியந்தாள் என்னுங்காட்டிற் போய்க்குடியிருந்தார்கள். அந்நாட்களில் வடமராட்சிப் பகுதிகளிலிருந்த குடிசனங்களுக்குள்ளே ஓர் பெருங் கலகமுண்டுபட அங்கலகத்தைச் சங்கிலிராசன் அவ்விடத்திற்குப்போய் அடக்கிவருகையில், இருபாலை எல்லை சமீபித்தவுடனே வாத்தியத்தொனியை நிலைநிறுத்த இராசன் நிறுத்தினதற்குக்காரணமென்னென்று விசாரிக்க, இருபாலை பரநிருபசிங்கத்துக்குரிய இடமாயிருப்பதால் உத்தரவின்றித் தொனிசெய்யப் பயந்துவிட்டோமென்றார்கள். அதனாற் சங்கிலி இராசன் பரநிருபசிங்கத்துக்குரிய கள்ளியங்காடு முதலிய எழுகிராமங்களையுங் கவர்ந்துகொள்ள நினைத்துஞ் செப்புப்பட்டயம் முடி, செங்கோல் முதலியவை அவன்கையிலிருக்கத் தான் அதிகாரஞ்செய்துவந்தமையாலும், வேறுமுடிதேடிச் சூடிக்கொண்டாற் கலகம்நேரிடுமென்பதினாலும் பயந்து விடுவித்தனன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14ஆவது அதிகாரம்

வன்னியன் அவ்வூராருடன் கொண்டாடித்திரிவதைச் சங்கிலி இராசனறிந்து தான் நிறுத்தி வைத்த வருமானபங்கைப் பரநிருபசிங்கத்துக்கும், கிராம அதிகாரத்தைப் பரராசசிங்கத்துக்கும் கொடுக்கச்சம் மதித்து சமாதானப்படுத்திக்கொண்டு, பரநிருபசிங்கத்துக்கும் மகனுக்குமுள்ள இராசநாமங்களை மாற்றி வேறு பட்டத்தைச் சூட்டிவைக்க வேண்டுமென்று ஆலோசித்து வடதிசைவேளாளரின் முதலிப்பட்டத்தை அவர்கள் பெயரிநிறுத்தியிற் சேர்த்துப் பரநிருபசிங்கமுதலி பரராசசிங்கமுதலி எனத்தான் எழுதிவைத்தக் கொண்டதுமல்லாமல், ஒருநாள் பரராசசிங்கத்தை அழைத்து உன்பிதாவுக்கு முனக்குஞ் சகலகிராமங்களும் மேலதிகாரங்களும் கிடைத்திருக்கின்றது உங்களிற்பின் உங்கள் சந்ததியாருக்கும் தலைமுறை தலைமுறையாக இவ்வதிகாரம் நிலையாக நிற்குமாகையால் உங்கள் சந்ததியாருக்கும் ஒரு பட்டஞ்சூட்டிவைக்க விரும்புகிறேனென்றான். அதென்னவென்று கேட்க மடப்பம்ஐஙஞூறு கிராமத்திற்குத் தலைமைபெற்றது. அளித்தல், காத்தல்ஆகவே மடப்பத்தை அளிப்பது மடப்பள்ளியென்பதாமென்றான். அதைப்பரராசசிங்கன் தன்பிதாவுக்கு அறிவிக்க பிதா அவன் எப்படிப்பிதற்றினாலும் பிதற்றட்டும் அவரவரிருந்து அறியலாம் உன்னலுவலைப்பாரென்றான். அதன்பின் சங்கிலி இராசன் சேனைகளையும் ஆயுதங்களையும் வரவரஅதிகமாகச் சேர்த்துக்கொண்டிருக்கும் நிலைவரத்தைப் பரராசசேகரன்கண்டு, தன்னிடத்திலிருந்த திரவியங்களை யானைகளிலேற்றி இராவிராவாய்ப் பிரயாணஞ்செய்து வன்னிநாட்டையடைந்து தங்கள் முன்னோர் திரவியஞ்சேமித்து வைத்த குகையிலே தானும் முடிசெங்கோல் முதலிய யாவற்றையுஞ்சேமித்து உத்மத்த வயிரவனைக் காவலாக வைத்துத் தன் மாளிகையில் வந்திருக்குங்காலத்தில் ஒருவரோடொருவர் வெளிக்குச்சந்தோஷமாயும், உள்ளெண்ணத்தில் ஒருவரையொருவர் சதிப்பவர்களாயுமிருந்தார்கள். சங்கிலியின்கொடுமை வரவர அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15ஆவது அதிகாரம்

மன்னாரிற் கிறீஸ்துவ சமயத்திற் சேர்ந்த சனங்களைச் சங்கிலி இராசன் வெட்டுவித்தபடியாற் சவேரியானென்னுங் கிறீஸ்துவக் குரு பறங்கிக்காரரை யாழ்ப்பாணத்திலூடாடப் பண்ணவும் தன் சமயத்தைப்பரப்பவும் அவாவுள்ளவனாயிருக்கையிற் பரநிருபசிங்கமுஞ் சங்கிலியும் பகையாயிருப்பதையறிந்து எழுந்து மூலமாய்க் கொண்டாடிக்கொள்ள, அவன் இராச்சிய அதிகாரந்தனக்குளினிமேல் ஒருபோதிலும் வரமாட்டாதென்றுகண்டு இராச்சியத்தைப் பறித்து அந்நிய இராசனுக்குக் கொடுக்க எண்ணங்கொண்டிருந்தான். சங்கிலி இராசன் தன் மந்திரிமாருள் ஒருவனாகிய அப்பா என்பவன் மகள் மிகவுஞ்சவுந்தரியாயிருந்ததினால் அவள்பேரில் மோகங்கொண்டு கற்பழிக்கத்துணிய அவளின் பிதா பரநிருபசிங்கமிடத்தில் வந்து தன் மானத்தைக் காப்பாற்றித்தரவேண்டுமென்று அழ, அதற்குப் பரநிருபசிங்கம் பயப்படாதே நான் காப்பாற்றித்தருவேனென்று திடஞ்சொல்லி உடனே ஒரு காகிதமெழுதி ஊர்காவற்றுறையில் காக்கைவன்னியன் வந்திறங்கி நிற்கிறான் அவனிடத்திற் கொண்டுபோய்க்கொடு வென்றுசொல்லக் கொண்டுபோய்க்கொடுத்த மாத்திரத்தில் அவன் வாசித்துப்பார்த்துக்கொண்டு நீ உன்மகளைப் பரநிருபசிங்கம் வீட்டில் அடைக்கலமாகவைத்துவிட்டு உன் அலுவலைப்பார் நான் சற்றிடம்போய்வந்து எல்லாம் பார்த்தக்கொள்வேனென்று சொல்லிப் பரநிருபசிங்கத்துக்குப்பதிலோலையும்எழுதிக்கொடுத்தனுப்பிவிட்டு தரங்கம் பாடிக்குப்போய்ப் பறங்கிக்காரரைக்கண்டு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களைப் பிடித்துத்தருவேன் வாருங்களென்று நம்பும்படி சத்தியம்பண்ணிக் கொடுக்கப் பறங்கிக்காரர் வியாபாரஞ்செய்பவர்களைப்போற் பண்ணைத்துறையில் வந்திறங்கிச் சங்கிலி இராசனிடத்திற்குப்போய்த் தங்களுக்கு யாழ்ப்பாணத்தில் வியாபாரஞ்செய்ய உத்தரவுதரவேண்டுமென்று கேட்கச், சங்கிலி இராசன் சம்மதியாது மறுக்கப் பரநிருபசிங்கமும் மந்திமாரும் ஒருமித்து நின்று இப்படிப்பட்ட வியாபாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டுக்கு அவசியந்தேவையென்று மேன்மேலுஞ் சொல்லச், சங்கிலி இராசன் ஒருவாறுடன்பட்டுப் பறங்கிக்காரரை நோக்கி! நீங்கள் பகற்காலத்தன்றி இராக்காலத்தில் உள்ளூருக்குள் நில்லாமல் உங்கள்தோணிகளில்தங்கி வியாபாரஞ்செய்து கொள்ளுங்கள், என்று உத்தரவுகொடுக்கப் பெற்றதினால் அவர்கள் அவ்வாறு சிலகாலம் வியாபாரத்தை நடாத்தி அப்பாற்சங்கிலி இராசனுக்கு விலையுயர்ந்த நவரத்தினங்களையும், பட்டுப்புடைவைகளையும், வேறு நூதனசாமான்களையும் கொடுத்து நன்முகம் பெற்றுக்கொண்டு மகாராசனே நாங்கள் தோணிகளிலிருந்து சமயல், போசனம், நித்திரை முதலியவற்றைச் செய்வது மிகவருந்தமாகையாற் கடலோரத்தில் தங்கியிருக்கவும், வியாபாரப்பொருள்கள் வைத்துக்கொள்ளவும் ஒரு வீடுகட்டும்பொருட்டு உத்தரவு தந்துதவவேண்டுமென்று கேட்கச் சங்கிலி இராசன் மனமிரங்கிக்கொண்டு கடலோரத்தில் ஒருசிறுவீடுகட்டிக்கொள்ளுங்களென்று உத்தரவுகொடுத்தான். அவ்வுத்தரவைச் சாட்டாகக்கொண்டு பறங்கிகள் மண்ணினால் ஒரு பெருங்கோட்டையைக் கட்டி அதிலே சேனைகளையும் ஆயுதங்களையும் நிறைத்து வைத்திருந்தார்கள். அவ்விடம் பெருங்காடாயிருந்ததினால் மனிதர்போக்குவரவு மிகக்குறைவாயிருந்தது. அதனாற் சங்கிலி இராசனுக்கு அச்செய்திகள் ஒன்றுந்தெரியாமற்போயிற்று.

## 16ஆவது அதிகாரம்

சிலகாலத்தின்பின் சங்கிலி இராசன் அந்நாட்டிற்சென்று வேட்டையாடி அங்குமிங்குமலைந்து வருகையிற் கோட்டைகொத்தளங்கள் கொடிகள்சேனைகள் ஆயுதங்கள் முதலியயாவுமிருப்பக்கண்டு, நீங்கள் இவ்வாறு செய்தற்பொருட்டு உத்தரவுகொடுத்ததாரென்றான், நீர்தான் என்றார்கள். இவன் அதிககோபங்கொண்டு கோட்டை முதலியவற்றை இடித்துத்தள்ளக்கருதிப் பறங்கிகளோடு முரட்டுத்தனஞ்செய்தும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இடங்கொடாது மனவலிமையோடு நின்றதினால் யுத்தமுண்டாகவேதுவாயிற்று. அப்பொழுது யுத்தம் நடத்துதற்கு நல்லூரிலே வீரமாகாளியம்மன் கோவிலுக்கு முன்னாயிருந்த வெளியைப் போர்க்களமாக நியமித்துக் கொண்டுகுறித்த நாளிலே பறங்கிகள் துப்பாக்கி முதலியவற்றோடு அணி அணியாகவும் தமிழர் வாள் முதலிய படைக்கலங்களோடு அணி அணியாகவும் நின்று யுத்தஞ்செய்தார்கள். இருதிறத்துப்படை ஒழுங்கும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருந்ததினாற் சரியான யுத்தம் நடக்கவில்லை. பறங்கிகள் ஒருதுப்பாக்கியை நீட்டி இலக்குப்பிடிக்க, மற்றொருவன் பற்றுவாய்க்கு நெருப்பு வைக்கச், சிலமுறைகளில் வெடிதீர்ந்து சனங்களைச்சேதப்படுத்தியும், சிலமுறைகளில் வெடிதீராதிருக்கத் தமிழர் வாள்முதலியவற்றால் அஞ்சாமற் பறங்கிச்சேனைகளை வெட்டியும், இளைத்துப்போகச் சங்கிலியம் அவனுக்குத் துணைவீரராயிருந்த நாநூறு பராக்கிரமசாலிகளும் உள்ளணியாய்ப்பாய்ந்து கடும்போர்செய்ய ஏழா நாட்போரிலே பறங்கிகள் இனி என்னசெய்வோம், சங்கிலி இராசன்கையில் அகப்படுவதன்றி வேறு கதியில்லையென்று மனந்தளாந்து நிற்குஞ்சமயத்திற் தரங்கம்பாடியினின்று தங்களுக்குத் துணைச்சேனை வந்ததைக்கண்டு மனத்தைரியங்கொண்டு, மறுபடியுஞ் சண்டைசெய்யத்தொடங்கியும் துப்பாக்கிகள் நெருப்புப்பற்றாது தாமதப்பட்டதினாற், பறங்கிகளும் வாட்படைகொண்டு போர்செய்தார்கள். இருதிறத்துச் சேனைகளும் விறுவிறுப்போடு போர்செய்கையிற் சில பறங்கிகள் ஒதுங்கி மறைவினின்று துப்பாக்கிகளாற் சுடத்தமிழர்கவண்கல் முதலியவற்றால் அவ்வுபாயத்தை நீக்கினர். இவ்வாறு ஒன்பது நாளும் போர்செய்து பத்தாநாள் சங்கிலிராசன் பரநிருபசிங்கத்தையும், மந்திரிமாரையும் பார்த்து நீங்கள் ஒரு முயற்சியும் செய்யாதிருப்ப தென்னையென அதற்குப் பரநிருபசிங்கம் நாங்கள் பயின்றிராத புதுப்போராயிருப்பதினால் எங்கள் சாமர்த்தியமிதிலே செல்லாதென்றான். அரசன் சிரித்து நானும் உங்களைப்போலவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குமுன் இவ்விதபோரைக்கண்டிலேன், நான்செய்யுமாதிரியாய் நீங்களுஞ்செய்யுங்களென்று சொல்லிப் பறங்கிச்சேனையின் நடுவே, மான்கூட்டத்திற் புலிபாய்ந்தாற்போலப் பாய்ந்து ஆயிரத்தெழுநூறு பேருக்குமேற்படவெட்டினான். அன்றுபோய் மற்றநாளாகிய பதினொராநாள் இருந்திறத்துச்சேனைகளும் எதிர்த்து யுத்தஞ்செய்யத் தமிழ்ச்சேனைகள் இளைத்துப்போனதைக்கண்டு சங்கிலி இராசன் துணைவீரருடன் யானைக்கூட்டத்திற் சிங்கம்பாய்ந்தாற்போலப் பறங்கிச்சேனைக்குட்புகுந்து இரண்டாயிரத்துநாநூறு சனங்களையுஞ் சேனைத்தலைவனையும்வெட்ட நின்ற பறங்கிகள் முறிந்து கெட்டோடினார்கள். தமிழ் சேனைகள் துரத்திக்கொண்டுபோக மேற்குத்திசையை நோக்கிக் காட்டுக்குட் சென்று, கோட்டைக்குட்புகச் சங்கிலி இராசன் சகலரையும் வெட்டியெறிந்து கோட்டையுமிடித்துப்பரவி அங்குள்ள திரவியங்களையும் எடுத்துக்கொண்டு தனது அரண்மனைக்குத்திரும்பினான். சேனைகள் போர்வெற்றியின் சந்தோஷத்தினால் மது உண்டு வெறியினால் மயங்கி ஒருவரை ஒருவர் அடிக்கவும் வையவுந் தலைப்பட்டதினாற் பெருங்கலகமுண்டாக அதை அடக்கி வரும்படி மந்திரியிலொருவனை அனுப்பியும் அடங்காததினால் அரசன் மிகுந்தகோபத்தோடு சென்று அங்கு சமைத்தபோசனங்களெல்லாவற்றையுஞ் சேனைத்தலைவனுமில்லாதிருக்க வெட்டிப்புதைப்பித்ததினாற் சேனைகள் ஆறாதவருத்தத்தை அடைந்தார்கள். சேனைத்தலைவன் தனது நித்தியகடனை முடித்தற்பொருட்டு வீரமாகாளியம்மன் கோவிவில் தங்கிநின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17ஆவது அதிகாரம்

பறங்கிகள் போரில் இறந்ததையும், தோற்றோடினதையும் தாங்கள் அந்தரங்கத்தில் செய்த உதவிகள் வாயாமற்போனதையுங் குறித்துப் பரநிருபசிங்கம் விசனமடைந்து, பறங்கிகளுக்காக வெளிவெளியாகநின்று உதவிசெய்யவேண்டுமெனக் கருதிக் காக்கைவன்னியனை தனக்கு உதவிசெய்யும்படி ஓலையெழுதி யனுப்பினான். வன்னியன்கையில் ஓலைசேரமுன் பறங்கிகள் ஊர்காவற்றுறைக்குப்போய் வன்னியனைப்பிடித்து உன்னைநம்பிப் போரில் ஏற்பட்டுப் பதினாலாயிரத்துக்கு மேற்பட்ட சனங் களை இறக்கம்கொடுத்தோமென்றார்கள். நீ எங்களை அழைத்துவந்து ஒரு உதவியுங் செய்யாததினால் எங்களுக்கு அதிக நட்டங்கள் வந்திருக்கின்றது. இந்த மோசஞ்செய்ததினால் உன்னைக்கொலைசெய்வதே எங்கள் தீர்மானமென்று நெருங்கிய சமயத்திற் பரநிருபசிங்கம் எழுதிய ஓலையும் வந்துசேர்ந்தது. அதைவாசித்தபொழுது பறங்கிகள் சந்தோஷங்கொள்ளக், காக்கைவன்னியன் பரநிருபசிங்கம் எழுதியவைகளுக்கு உடன்பட்டுப் பறங்கிகளை மறுபடியும் போர்செய்தற்பொருட்டு அணிவகுத்துக் காலமேவரும்படி சொல்லி அன்றிரவில் நல்லூருக்குப்போய் பரநிருபசிங்கத்தைக் கண்டு ஆலோசனை செய்து அங்கு ஓர் இடத்தில் மறைந்திருந்தான். மறுநாட்காலையில் வன்னியன் சொற்படி, பறங்கிகள் அணிவகுத்துவந்து மேற்குவாசலை வளைத்துக்கொள்ளச் சங்கிலி இராசன் இதையறிந்து சேனைகளைத்திரட்டி மேற்குவாசற்புறத்தே அணியணியாய்த் துணைவீரருடன் தைரியங்கொண்டுநின்றான். அப்பொழுது காக்கை வன்னியன், சேனைகளுக்குள் நுழைந்து சமீபத்தினிற்கப் பரநிருபசிங்கமவனோடு யோசித்தபடியே வாய்ச்சாமர்த்தியமுள்ள ஒருவன் போர்க்கரியத்தின் அந்தரங்கஞ் சொல்லும்படி உம்மை இன்னவிடத்தில் தேடிக்கொண்டு நிற்கிறான் என்று வேறொருவனைச் சேனாபதியிடமனுப்பிச் சொல்லுவிக்கச் சேனாபதி அதையறிந்து வரும்படி உடனே ஆவலுடன்சொல்ல, அங்குநின்றவன் தன் வாய்ச்சாதுரியத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதைக் கவரத்தக்கபேச்சுகள் வருவித்துப்பேசித் தடுத்துநிற்குஞ் சமயத்தையறிந்து, வன்னியன்தன் உடுப்பைமாற்றிச் சுயகோலத்தோடு வெளிப்பட்டான். அரசன் அவனைக்கண்டு எதிர்கொண்டோடி என்மேல் தயைகூர்ந்து உதவிசெய்வதற்கு இப்பொழுதுதான் வந்தாயோவென்று சொல்லிக் கட்டிமுத்தமிட இவனுங்கட்டி முத்தமிடுபவன்போற் பிடித்தபிடிவிடாமற் பிடித்துக்கொண்டான். இருவரும் ஒருவரோடொருவர் சேர்ந்து விழுந்துபுரண்டு நிற்குஞ்சமயத்திற் பறங்கிச்சேனைகள் கிட்டிவந்ததினாற், சேனாதிபதி இல்லாதிருந்துந் தமிழ் சேனைகள் தங்கள் ஆயுதங்களோடு யுத்தத்திற்குச் செல்லப் பரநிருபசிங்கம் அவர்களை நோக்கி சேனாபதி உத்தரவின்றி ஒருவரும் ஆயுதந்தொடப்படாதென்று தடுக்கச் சேனைகள் எங்களுக்கு ஆயுதமெடுக்க உத்தரவில்லையேயென்று பரிதபித்து ஓலமிட்டுக்கொண்டு, அரசனையும் வன்னியனையும் அந்தநிலையில் விட்டுப்பிரிந்து ஓடிப்போனார்கள். பறங்கிகள் சங்கிலி இராசனைப்பிடித்து யாதொருதடையுமின்றி விலங்கிட்டுச், சேனாபதியை வாளினாற் கொலையுஞ் செய்து, கோட்டையையும் ஒப்புக்கொண்டார்கள்.

## 18ஆவது அதிகாரம்

உடனே பரராசசேகரன் வன்னிக்காட்டுக்கு ஒழித்தோடிப்போகப் பறங்கிகள் அவ்வரசனைப்பிடித்துத் தருபவர்களுக்கு ரூபா 25000 உபகாரமாய்க் கொடுத்துவிடுகிறோமென்று பறைசாற்றுவிக்கச், சங்கிலி இராசனின் மந்திரியாகிய பிராமணனொருவன் அரசன்போன குறிப்பையறிந்து, இளநீரும் எலுமிச்சம்பழமுங் கொண்டு, வன்னிக்காட்டிற்சென்று எங்குந்தேடியுங்காணாது வருகையில் அரசன் எதிர்கொள்ள உபசாரவார்த்தைசொல்லிப் பிராமணன் வாளினால் இளநீரைத்திறந்து எலுமிச்சம்பழத்தை அறுத்துப்பிழிந்து கொடுத்தான். அவன் குனிந்துநின்று ஆயாசத்தோடு குடிக்கச் சண்டாளப்பிராமணன் அவன் சிரசைக்கொய்துவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறங்கிகள் கையிற்கொடுக்கப், பறங்கிகள் அரசனைப்பிடித்துத் தருபவர்களுக்குபகாரங் கொடுப்போமென்று கூறியிருக்க, நீ அரசனைக் கொன்றதுமன்றி அவனுக்குச்செய்த நன்றியையும் அழித்ததினால் உன்னையும் அப்படியே செய்யவேண்டுமென்று கொலைசெய்தார்கள்.

பறங்கி இராசன், சங்கிலி இராசனை நீதாசனத்தின்கண் நிறுத்தி விழங்கியபொழுது, அவன் முடிசூட்டி அரசுசெய்யாததினாலும் பிதா உயிருடனிருக்கப் பிதாவின் சம்மதத்துக்கு விரோதமாய்க் கலகத்தை உண்டாக்கினதினாலும், முடிக்குரிய இராசகுமாரனை அநியாயமாய்க் கொலைசெய்த பாதகத்தினாலும் நீதிதவறி அநேககொடுமைகளைச் செய்ததினாலும் அவனைக்கொலைசெய்யும்படி உத்தரவுசெய்தான். இதுசெய்தியைக் கேட்டவுடனே அவன்மனைவி தற்கொலை புரிந்திறக்கப் பிள்ளைகளைத் தரங்கம்பாடிக்கு அனுப்பிக் காக்கை வன்னியனுக்குச் சகல உபகாரங்களுஞ் செய்தனுப்பினான்.

பறங்கிகள் இராச்சியத்தை ஒப்புக்கொண்டு நல்லூரிலிருந்தார்கள். காலயுத்தி வருஷம் ஆனி மாதம் யாழ்ப்பாணம் பறங்கி அரசாட்சிக் குள்ளாயிற்று. பறங்கிகள் நல்லூரிலிருந்துகொண்டு புறக்கோட்டைமதிலை இடிப்பித்துக் கற்களைக்கொண்டுபோய் இடிபட்டிருந்த தங்கள் கோட்டையை மறுபடி கற்கோட்டை யாகக் கட்டி, அதன்கீழ்ப்புறத்தில் வீடுகளையும் அரசாட்சிமண்ட பங்களையும் கட்டுவித்துச் சுற்றுப்புறங்களிற் காடுகளையும் வெட்டுவித்துச் சமீபத்திற்பிரசைகள் குடியிருக்கவசதியும் பண்ணினார்கள். பரநிருபசிங்கந் தங்களுக்குஅரசாட்சிகிடைக்கும்படி செய்த உதவிக்காக அவனுக்குள் ஏழுகிராமங்களுடன் நல்லூர், மாதகல் என்னும் இரண்டு கிராமங்களையும் பெருந்தொகையான திரவியங்களையும் முன்னிருந்தபடி மந்திரி உத்தியோகத்தையும், பரராசசிங்கத்துக்குக் கிராம அதிகாரத்தையுங் கொடுத்து இருவரையுங் கனப்படுத்தி வந்தார்கள். அவர்களாற் பறங்கிகளின் அரசாட்சி பெலத்துக்கொள்ளச் சமயகாரியங்களிற் கையிட்டுச் சிவாலயங்களை இடித்துக் கிறீஸ்துசமயத்தைப் பரப்பத்துணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரிலும் கீரிமலையிலும் உள்ள சிலதலங்கள் மாத்திரம் பரநிருபசிங்கமிருக்கிறவரைக்கும் வழங்கிவந்தபடி வழங்கலாமென்று உத்தரவுசெய்தார்கள். அவர்கள் அரசாட்சி தொடங்கி ஒன்பதாம் வருஷத்திற் பரநிருபசிங்கம் இறக்க, அவனுக்குச் சைவசமயப்படி சடங்குகள் செய்யப்பட்டது.

## 19ஆவது அதிகாரம்

பரராசசிங்கத்தை அரசாட்சி ஆலோசனைத்தலைவனாக்கிச் சங்கிலி இராசன் எழுதிவைத்தபடியே அவனுக்குப் பரராசசிங்கமுதலி என்றும், அவன் குலத்துக்கு மடப்பளியென்றும் பட்டஞ்சூட்டிப், பிதாவை நடத்தினதுபோற் கனப்படுத்தி வந்தார்கள். பரராசசிங்கமுதலிக்கு மரணகாலங்கிட்டினபோது தன் குமாரர் எழுபேரையும் வரவழைத்து ஆஸ்திகளைப்பங்கிட்டுக் கொடுத்தான். நல்லூரையும் பங்கிட்டுக்கொடுத்தான். நல்லூரையுங் கள்ளியங்காட்டையும் அளகாண்மைவல்லமுதலிக்குக் கொடுத்து, நல்லூரில் தன்மாளிகையில் இருத்தினான். தனபாலசிங்கமுதலிக்கு மல்லாகத்தையும் வெற்றிவேலாயுதமுதலிக்குச் சண்டிலிப்பாயையும், விசயதெய்வேந்திர முதலிக்கு அராலியையும், திடவீரசிங்கமுதலிக்கு அச்சுவேலியையும், சந்திரசேகரமாப்பாணமுதலிக்கு உடுப்பிட்டியையும், இராசரத்தின முதலிக்குக் கச்சாயையுங் கொடுத்தான். இதுவல்லாமல் வேதவல்லியென்னுங் குமாரத்திக்கு வேளாளர் குலத்திலே விவாகஞ்செய்வித்து மாதகலைக்கொடுத்தான்.

பரராசசிங்கமுதலி காலஞ்சென்றபின் பறங்கிக்காரர்கள் சிவாலயங்கள் எல்லாவற்றையுமிடிப்பார்களென்றெண்ணி நகுலேசுரர்கோவிலிலிருந்த பரசுபாணிஐயர் அக்கோவிற் சாமான்கள் விக்கிரகங்கள் முதலியவற்றைக் கிணறுகளிற்போட்டு மூடிவைக்கக் கந்தசுவாமிகோவிற் பணிவிடைக்காரனாயிருந்த பண்டாரம் என்பவன் அங்குள்ள ஆலயங்களின் சம்பவங்களையும் ஒழுங்கு திட்டங்களையுஞ் செப்புப்பட்டயத்தில் எழுதிக்கொண்டு மட்டக்

13952 cc



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களப்புக்குச்சென்றான். பரராசசிங்கமுதலி மரணமடைந்தவுடன் கங்காதரஐயரின் வம்மிசத்துப் பிராமணக்குடிகள் நல்லூரினின்றும் நீங்கி நீர்வேலியிலும் வடமராட்சிப்பகுதிகளிலுமிருந்தார்கள். அக்காலத்திற் பறங்கிகள் தமிழ் இராசாக்களைப்போல் மாதாக்கர்களை வைக்கக்கருதி இராசரத்தினமுதலியின் குமாரன் சேனாதிராயமுதலியைக் கீழ்ப்பற்றுக்கும், விசயதெய்வேந்திர முதலியைமேல்பற்றுக்கும் அழகாண்மை வல்லமைமுதலியின் குமாரன் இராசவல்லமுதலியைத் தென்பற்றுக்கும், திடவீரசிங்கமுதலியின் குமாரன் குமாரசூரியமுதலியை வடபற்றுக்கும், மாதாக்கர்களாக நியமனஞ்செய்து அரசியற்றிவருநாளில், காரைக்காலிலிருந்து பல உயர்குலவேளாளக்குடிகள் வந்து வட்டுக்கோட்டையிலுங் காரைதீவுமுதலிய தீவுகளிலும் குடியேறினார்கள்.

சாவி-வாகன சகாப்தம் 1428-ம் வருஷமாகிய பரிதாபிவருஷத்தில் இலங்கையை அரசாண்ட தருமபராக்கிரமவாகு மகாராசனிடத்திற் பறங்கிகள் முதல் முதல் உத்தரவுபெற்றுக்கொண்டு போக்குவரவுபண்ணத்தொடங்கினார்கள். கரவருஷம் ஆடிமாதம் சவரியான் முதலிய பறங்கிக்காரர்களால் வேதத்திற்சேர்ந்த சனங்களைச் சங்கிலி இராசன் சகாப்தம் 1466-ம் வருஷமாகிய சோபகிருது வருஷம் வைகாசிமாதம் கொலைசெய்வித்தான். சகாப்தம் 1503-ம் வருஷமாகிய விக்கிரம வருஷத்திற் சவரியான் முதலிய பறங்கிகள் பரநிருபசிங்கத்தின் வழியாய்ச் சங்கிலி இராசனுடன் கொண்டாட்டமாய் அடுத்தவருஷம் தை மாசம் வீடுகட்ட உத்தரவு பெற்றார்கள்.

உலாந்தேசர் இலங்கையையடைந்து கண்டியில் விமலதருமராசனுடன் சகாப்தம் 1526-ம் வருஷமாகிய சோபகிருதுவருடம் சிநேகங்கொண்டு உமக்குப்படைத்துணையாவோமென்று சொல்ல அவன் அவர்களை அழைத்துத் தன்னுடன் வைத்துக்கொள்ள முன்கண்டியிலிருந்து துரத்தப்பட்ட இராசகுமாரத்தியைப் பறங்கிகள் மன்னாரில் வைத்துவளர்த்து அவளுக்கு தொன்கத்தறீனாள் என்று பெயருமிட்டு அடுத்தவருஷங்களில் கண்டி அரசாட்சியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக்கொடுக்க ஆரம்பித்தபோது, விமலதருமராசன் உலாந் தேசரைத் துணையாகக்கொண்டு பறங்கிகளைத்துரத்தித் தொன்கத்தறீனாளையும் விவாகஞ்செய்தான். கீலக வருஷத்தில் உலாந்தாக் கப்பற்சேனாபதியுஞ் சேனைகளிற்பலரும் மதுவெறியினால்மயங்கி விமலதருமராசனை நிந்தனைசெய்து மூர்க்கமாய்நின்றதினால், அவன் அவர்களிற்சிலரைக் கொலைசெய்விக்க உலாந்தேசர் அவ்விடம்விட்டுக் கொழும்புக்குச் சென்று கோட்டைகட்ட ஆரம்பித்தபொழுது, பறங்கிகள் தடைசெய்ததினால் அவ்விடத்தினின்று நீங்கி இலங்கையின் வடதிசையில் வந்திருந்து சகாப்தம் 1533-ம் வருடமாகிய சாதாரணவருடம் தென்மார்க்கமாய்க் கப்பலேறிவந்து இலங்கையிலுள்ள அரசருடன் கொண்டாடிப்படைத்துணை வருகிறோமென்றுசொல்லியும், அவர்கள் அதற்குடன்படாமையால் தங்கள் தேசத்திற்குப் போய்விட்டார்கள்.

## 20ஆவது அதிகாரம்

இவ்வாறிருக்கப் பறங்கிகள் சகாப்தம் 1538-ம் வருடமாகிய ராக்ஷதவருடத்தில் யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டத் தொடங்கினர். மூன்றுவருடத்தின்பின் திருக்கோணாமலையிலும், மட்டக்களப்பிலுங் கோட்டைக்களைக்கட்டினார்கள். யாழ்ப்பாணக் கோட்டை சகாப்தம் 1546-ம் வருடமாகிய ருதிரோற்காரி வருடத்திற் கட்டப்பட்டுமுடிந்தது. அடுத்தவருடங்களிலே உலாந்தேசர் திருகோணாமலை மட்டக்களப்பு, நீர்கொழும்பு முதலிய இடங்களைப்பிடித்து நீர்கொழும்பைப் பறிகொடுத்தார்கள். யாழ்ப்பாணத்துத் தேசாதிபதியாகிய அந்தோனிமீறால் என்பவன் மன்னாரிலிருந்து கொழும்புக்குப் போனபொழுது சகாப்தம் 1556-ம் வருடமாகிய ஸ்ரீமுகவருடம் உலாந்தேசர் பிடித்துச் சிறைச்சாலையையடைவித்தார்கள்.சகாப்தம் 1580-ம் வருடமாகிய ஏவிளம்பி வருடம் மாசிமாதம் ஆறாந்தேதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாந்தேசர் மன்னாரைப்பிடித்துக்கொண்டு பங்குனி மாதம் தொடங்கி யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்துவரச்சேனைகளை நிறுத்தி, அந்தமாதக்கடைசியில் ஊர்வாகற்றுறைக்கோட்டையைப்பிடித்து அதன்வழியாய்க் காரைதீவிலிறங்கினர். அங்கே சிலகாலத்துக்குமுன் உலகுகாவலமுதலி என்னும் உயர்குலவேளாளன் ஒருவன் சோழதேசத்திலே விதித்த இராசதண்டனைக்குப் பயந்தோடிவந்து காரைதீவிலே களபூமி என்னுமிடத்திற் பெருஞ் செல்வனாயிருந்தான். அவன் அவர்களுக்குச் சகலவசதிகளுங்கொடுத்து அனுசரிக்க, அவர்கள் அவனிடத்தில் இராச்சிய வளமைகளைக்கேட்டு விசாரித்துக்கொண்டு, யாழ்ப்பாணக்கோட்டையைப் பிடிப்பதற்கு உபாயங்கேட்க, அவன் நான் சொல்லுந்தினத்தில் நீங்கள் வருவீர்களாகில் வசதியாய்க்கொண்டுபோய்விடுவேன் என்றான். அதற்குச் சம்மதித்துச் சேனைகளைத்திட்டம் பண்ணி மூன்றரைமாதக்காலங் காத்திருந்தும் வசதி வாயாதிருக்க ஒருநாள் இரவில் பறங்கிகள் நடனசங்கீதவினோதராயிருக்குஞ் சமயத்தில், உலகுகாவலமுதலி வழிகாட்ட உலாந்தேசர், திறந்திருந்த கள்ளவாயில்வழியாய் நுழைந்து கோட்டைக்குட்சென்று, பறங்கிகளை இராவிராவாய்வெட்டியுஞ் கட்டுங்கொன்றுவிடப் பறங்கிப்பிணங்கள் கடலிலுங் கரையிலுங் கிடப்ப உலாந்ததேசர் களிப்புக்கொண்டாடுவதைக் கண்டு சகலருந்திகைப்படைந்தார்கள். சகாப்தம் **1581**-ம் வருஷமாகிய விளம்பிவருடம் ஆனி மாதம் ஓம்பதாந்தேதியிலன்று யாழ்ப்பாணம் உலாந்தேசர் அரசாட்சியின் கீழாயிற்று. அந்நாளையில் புரோடெஸ்டாண்டுக்கிறீஸ்துமதம் யாழ்ப்பாணத்துட் பரவலாயிற்று. பறங்கி அரசுபோயும் அவர் பாஷைச்சொற்களாகிய அலவாங்கு தோம்பு கதிரை முதலியன இன்னும் வழங்கிவருகின்றன. இவ்விதசொற்கள் அரிதாய்த்தென்னிந்தியாவிலுஞ் சில பகுதிகளில் வழங்கிவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21ஆவது அதிகாரம்

கைலாயவன்னியன்சகோதரியை விவாகஞ் செய்திருந்த பூதத்தம்பி, மனுவலந்திராசி என்பவர்கள் உலாந்தேச அரசாட்சியாருக்கர சிறைவிகித்த முதுலிமாரானார்கள் அத்தேசாதிபதி அந்திராசிக்கு அதிக நண்பனாயும் தேசாதிபதியின் தம்பி பூதத்தம்பிக்கு அதிக நண்பனாயுமிருந்தார்கள். ஒருநாள் பூதத்தம்பி அந்திராசியைத்தன் வீட்டுக்கு அழைத்து விருந்திட அவன் பூதத்தம்பி மனைவியின் பேரழகினால் மயங்கிமிகுந்த விகாரத்தோடு வீட்டிற்குச்சென்று, ஒரு தூது அனுப்பி நீர் என்னுடன் இணங்கிச் சிநேகமாயிருக்கச் சம்மதித்தால் உமக்குவேண்டிய திரவியங்களும் மற்றும் எவ்வித பொருள்களுந்தருவேன் என்றுகேட்பிக்க, அவள் அந்திராசியைவைது தூதுவந்தவனை துடைப்பத்தாலடித்துத் துரத்திவிட்டாள். இதுகாரியத்தினால் இருவருக்கும் பகைநேரிட்டிருக்குங்காலத்தில் ஒருநாள் அந்திராசி அரசாட்சியாரின் வேலைக்கு மரங்கள் அழைப் பிக்கக் கச்சாய்த்துறைக்குக் கட்டளையனுப்ப வேண்டுமென்று வெள்ளைக்கடுதாசியிற் கையொப்பமிடுவித்து, அதிலே கோட்டை பிடிக்க இன்ன இன்ன உதவிசெய்வேனென்று பறங்கிக்காரர்க்குப் பூதத்தம்பி எழுதிக்கொடுத்தனுப்பக், கொண்டுபோனவிடத்திற் கண்டுபறித்தேனென்று அந்திராசி தேசாதிபதிகையிற் கொடுக்கத் தேசாதிபதி அதைப் பொய்க்குற்றச்சாட்டென்றறிந்தும் அந்திராசியின் வேண்டுதலுக்காகப் பூதத்தம்பியைக் கொலைசெய்வித்தான்.

அவ்வேளையில் தேசாதிபதியின் தம்பி ஊர்காவற்றுறையிற் கடற்கோட்டை கட்டுவித்துக்கொண்டு அங்கிருந்தமையாற்றன் சினேகனுக்கு உற்றவிடத்துதவி செய்யக்கூடாதவனாயிருந்தான். அதைக்குறித்துப்பூதத்தம்பியின்மைத்துனனாகிய கைலாயவன்னியன் கொழும்பேறி வழக்குப்பேசினபோது தேசாதிபதியையும் அந்திராசியையும் அங்குவரும்படி கட்டளைவர இருவரும் புறப்பட்டுப்போகும்பொழுது தேசாதிபதி கடலில்விழுந்தும் அந்திராசி ஆனை இடறியுமிறந்தார்கள். அவ்வருடத்தில் வெள்ளப்பெருக்கினால் ஊர்காவற்றுறையில் அநேக மனிதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருகங்களும் இறந்துபோயின. உலாந்தேசர் உலகுகாவலமுதலிக்குச் சகலதிரவியங்களையுங்கொடுத்து மரபாலுயர்ந்த முதலியின் சகோதரியையும் விவாகஞ்செய்வித்தனர். அவனுக்கு வாயிலுத்தி யோகமும் முதலிக்கு முன்னிருந்தபடி திரவியச்சாலைத் தலைமையையுங்கொடுத்தார்கள். உலகுகாவலமுதலி இறந்தபின் அவன் மகன் இராயதுங்கமுதலிக்கு முதலியின் குமாரத்திகள் ஏழுபேரில் ஒருத்தியை விவாகஞ்செய்வித்துப் பூலோககைலாசமுதலிக்குத் திரவியசாலைத் தலைமையையுங்கொடுத்து, வேறுசில தத்துவங் களைங்கொடுத்தனர்.

அக்காலத்திலே சந்தச்சாய்பு என்பவனால் மகமதுமார்க்கத்திற் சேர்ந்து தமிழ் பேசுஞ்சோனகக்குடிகள், காயிலிப்பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வந்து தென்மிருசுவில் என்னுமூரிலே குடியிருந்து சாவுகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில் என்னுமிடங்களில் உள்ள சந்தைகளில் வியாபாரஞ்செய்துகொண்டு, தாங்கள் குடியிருந்த மிருசுவிலுக்கு உசனென்னும் பெயருமிட்டனர். சிலகாலம் அவ்விடமிருந்து அங்கு வசதியில்லாமையினால் நல்லூரிலே கந்தசுவாமி கோவில்கட்ட இருக்குமிடத்தில் வந்து குடியேறினார்கள். சோனகரை அவ்விடமிருக்கவிட்டாற் கந்தசுவாமிகோவில்கட்டத் தடையாயிருக்குமென்று நினைத்துத் தமிழர் கூடி அவர்களைத்துரத்தத் தெண்டித்தும் முடியாதிருக்க, அந்நிலங்களுக்கு அதிகவிலை தருகிறோமென்று கேட்டதற்குஞ் சோனகர் சம்மதிக்கவில்லை. ஒன்றுக்குமிடங்கொடாததினால் தமிழர் கோபங்கொண்டு சோனகரின் கிணறுகளிற் பன்றி இறைச்சிகளைப்போடும்படி தங்கள் சிறைகளுக்குக் கட்டளையிட, அவர்கள் அவ்வாறு செய்துமுடித்தனர். அது கண்ட மாத்திரத்திலே சோனகர் அழுதுபுலம்பிப் பசிபட்டினியாய்க்கிடந்து ஆற்றாமற் கடைசியில் தங்கள் மதாசார வழிபாடுகளைக்குறித்து எக்காலத்திலுந் தடைசெய்யாதிருக்கவேண்டுமென்று தமிழரிடத்திலே உடன் படிக்கை செய்வித்துக்கொடுத்த விலையையும் பெற்றுக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாய்த்துறைக்குக் கீழ்ப்புறமாய்க் குடியேறினார்கள். நாவாய்த் துறை நாவாந்துறையென வழங்கிவருகின்றது.

## 22ஆவது அதிகாரம்

அக்காலத்திலே உத்தரகோசமங்கையிலே ஒரு பெருங்கலகமுண்டு பட்டதினால் அதற்குப்பயந்து பலவேளாளக்குடிகளுஞ் சிலவிட்டுணுசமயம் சிவசமயப்பிராமணக்குடிகளும் அங்கிருந்து வந்து காரைதீவு வட்டுக்கோட்டை முதலிய இடங்களிற் குடியிருந்தனர். சோழமண்டலத்தினின்னு சில பட்குடிகள் வேளாளரின் கீழ்ப்பயிர்க்குடிகளாயிருந்து பிழைக்கலாமென்றெண்ணி வந்தும் அப்படிப்பிழைக்க இடங்காணாததினாற் சிலர் திரும்பினர், சிலர் சான்றாரைப்போற் பனையேறுந்தொழிலைப் பயின்றார்கள். சிலருக்குப் பிழைப்புக்குறைந்ததினாற் துரைமார்வீடுகளிற் பணிவிடைகளுக்கு ஏற்பட்டும் சிலர் வலைவீசியும் பிழைத்தார்கள், சிலர் வேளாளருக்கு அடிமைகளாக எழுதிக்கொடுத்தார்கள், முன்னாட்களிற் சில வறியகுடிகள் தங்களைக் கோவில்களுக்கு அடிமைகளாக எழுதிக்கொடுத்ததினாற் கோவிலாலென்றழைக்கப்பட்டுப்பின் கோவியரெனப் பெயர்பெற்றார்கள்.

பறங்கிகள் அரசாட்சியைக் கைப்பற்றியபின் இடிபட்ட கோவில்களின் எசமான்கள் கோவிலரைப்பிறருக்கு விற்பனவு பண்ணினார்கள். பிற்காலத்தில் வடகரையிலிருந்து சிலசிறைகள் வடசிறைக்கோவியம் என்னும் பெயரால் விலைப்பட்டனர். இப்படியே சிறைவிற்பனவு கொள்வனவு வரவர அதிகப்படவே அரசாட்சியார் அவற்றைத் தங்கள் அதிகாரத்துக்குக் கீழாக்கித் தங்களுக்கு வருமானத்தை உண்டாக்கிக்கொண்டனர். உலாந்தேசு மன்னர் கிறீஸ்துவமத்தைப் பரப்ப நினைத்து யாழ்ப்பாணத்தை முப்பத்திரண்டு கோட்டங்களாகவகுத்து ஒவ்வொரு கோட்டத்திலும் ஒவ்வொரு கோவில் கட்டுவித்து அந்தக்கோவில்களில் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக்குருமாரை நியமித்து ஆங்காங்கே போதனைசெய்யும்படி கட்டளை செய்து பலவரிகளையும் ஏற்படுத்தினார்கள்.

போகிச்சாதியாரிற் பலகுடிகள் தங்கள் எசமான்களைச் சிவிகையில் வைத்துக் காவியகாரணத்தால் சிவியாரென்று அழைக்கப்பட்டார்கள். அரசாட்சியார் யாவருந் தங்கள் தங்கள் மரபிற்கேற்பச் சிவிகைகாவுவித்தல் மேளமடிப்பித்தல் முதலியவரிசைகளைச் செய்யப்புகுங்கால் அரசாட்சியாரிடம் வரிசைப்பத்திரம் பட்டக்கடதாசி முதலியவற்றைப் பெற்றவர்களேயன்றி மற்றவர்கள் நடத்தக்கூடாதென்று கட்டளைபண்ணி அதிகவருமானங்களை அரசாட்சிக்கு வரும்படி செய்தார்கள். முன் இருந்த ஒவ்வொரு அன்னிய அரசர்களுந் தங்கள் தங்கள் சமயத்தையே ஸ்தாபிக்கவும், மெய்ச்சமயமாகிய சைவசமயத்தைத் தாழ்த்தவும் கருதித் தங்களால் இயன்றளவு எத்தனையோ உபாயங்களைச் செய்தனர்.

இப்படி இருக்க இங்கிலிஷ் அரசினர் தங்கள் பலத்தினாலும், வீரத்தினாலும், நுண்ணறிவினாலும் உலாந்தேசரிடம் யாழ்ப்பாணத்தைச் சகாப்தம் **1781**-ம் வருடத்திற் பிடித்துத் தங்கள் நியாயப்பிரமாணங்களை இலங்கை முழுதுக்குஞ் சகாப்தம் **1738**-ம் வருடத்தில் நிலைநிறுத்துவாராயினார். இவ்வரசினர் முன்னிருந்த அந்நிய அரசரைப்போல் கொடுங்கோலரசுசெலுத்திக் குடிகளை வருத்தாது எச்சமயத்தவர்களுக்குந் தங்கள் இஷ்டப் படியே சமயாசாரங்கள் முதலிய எவ்வகைக்கிரியைகளுஞ் செய்தற்கிடங்கொடுத்துச் செங்கேல்நடத்தி வருகின்றனர். இத்தேசத்திற்கிறீஸ்துமதம், மகமதியமதங்களும் வழங்கிவருகின்றன. ஆயினும் இவ்வியாழ்ப்பாணத்தளவு ஓர் பாகத்தையும் இந்தியாவில் இதற்குச்சரிவந்த ஏதேனும் ஒரு பாகத்தையும், அதற்குச்சரிவந்த சனத்தொகையும் ஒப்பிட்டு எங்கே அதிக கிறீஸ்தவர்களுங் கத்தோலிக்கரும் மற்றும் பிறமதஸ்தர்களும் இருக்கிறார்களெனக் கருதுகையில் இந்தியாவில் நூற்றுக்கு இரண்டாகவும் யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கு ஒன்றாகவுமிருக்கக் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தினர் மேன்மேலும் கல்வி செல்வம், பொறை, தயை தானம் தைரியமுதலியவற்றிற் குறைவில்லாது தங்கள் பெயர்களை விளக்கித் தங்கள் கல்வித் திறமைகளைச் சாமர்த்தியத்துடன் காட்டினர்களென்பது யார்க்குந்தெரிந்தகாரியம்.

## 23ஆவது அதிகாரம்

வண்ணைநகரின் கண்ணே வைத்திலிங்கச் செட்டியாராலே கட்டுவிக்கப்பட்டுச் சகாபதம் 1713-ம் வருடமாகிய சாதாரணவருடம் சித்திரைமாதம் பிரதிட்டை செய்யப்பெற்று நித்தியநைமித்தியங்கள் ஒரு சிறிதும் குறைவுபடாது ஒழுங்குபெற நடத்திவரப்படும் ஓர் பாரியசிவாலயம் உண்டு. இதன் மேல்பாகத்திலே வில்லூன்றி எனப்பெயர்பெற்ற வற்றாத சிற்றேரி இருக்கின்றது. இவ்வேரி இராமசுவாமி இந்தியாவினின்றும் இலங்கைக்குத் தாவியகாலத்துத் தம் வில்லையூன்றித்தோன்றிய காரணத்தால் வில்லூன்றி எனவும், அவர் திருவடிதேய்ந்த இடந் திருவடிநிலை எனவும் பெயர்பெற்றன. இஃதன்றியும், சங்கானை நத்தங்களுளொன்றாய் மூளாயைச்சார்ந்த பொன்னாலையிலும், கட்டைவேலி நத்தங்களுளொன்றாய் வல்லிபுரத்திலும் எழுந்தருளியிராநின்ற கண்ணபிரானுக்கு நித்தியநைமித்தியங்களிற் குறைவுபடாது நடைபெற்றுவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

இலகியசாகாப்தமெண்ணூற்றெழுபதாமாண்டுதன்னி
லலர்பொலிமாலைமார்பனாம்புவனேகவாகு
நலமிகுந்திடு யாழ்ப்பாணநகரிகட்டுவித்துநல்லைக்
குலவியகந்தசுவாமிகோவிலும்புரிவித்தானே.

## வெண்பா

முன்னாட் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்
பின்னாட் பறங்கி பிடிப்பனே-பொன்னாரும்
பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணா போய்மாற
மானே வடுகாய் வரும்.

யாழ்ப்பாணவைபவம்

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# யாழ்ப்பாண வைபவம்.

# (HISTORY OF JAFFNA.)

இவை

[illegible]ட்டுக்கோட்டை

[illegible]ரமஸ்ரீ சி. பாலசுப்பிரமணியசர்மா

அவர்களால்

பரி[illegible]ஷிடப்பட்டு,

ஸ்ரீ

சு. [illegible]சாமிப்பிள்ளை

அவர்களால்

தமது

சச்சிதானந்த யந்திரசாலையில்

பிர[illegible]க்கப்பட்டது

[illegible]அக்ஷயவருஷம் 1927 பங்குனிமீ

இரண்டாம் பதிப்பு

பிரதிகள் 1000.

Registered Copy Right.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை.

யாழ்ப்பாண வைபவம் என்னும் இந்தச் சிறு சரித்திரம் வட்டுக்கோட்டை நா. சி. பாலசுப்ரமண்ய சர்மா அவர்களால் பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு பரிசோதிப்பித்து 1916-ம் ஆண்டு முதலாம்பதிப்பு வெளியிடலானேன். அப்பிரசுரக் காப்பிகள் கிரய மாகிவிட்டபடியால் இப்பொழுது இரண்டாம்பதிப்பில் ஓர் அனுபந்தமும் எழுதுவித்துப் பிரசுரித்திருக்கிறேன்.

இப்புஸ்தகம் கொபி றிஜீஸ்றர் செய்திருப்பதால் ஒரு பாகத்தை அல்லது பாகங்களைப் பிரசுரித்தவர்களிடத்தில் சட்டப் பிரமாணத்தின்படி நஷ்டத்தை அறவிடப்படும்.

இங்ஙனம்

ஈ. பொன்னுச்சாமிப்பிள்ளை.

சங்கானை.

1-4-27.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம்.

## 1. நல்லூர் கந்தஸ்வாமி கோவில்.

இது பறங்கியரினால் இடிக்கப்பெற்றுச் சிலகாலஞ் சென்றபின், கிருஷ்ணையர் சுப்பையர் என்னும் பிரமஶ்ரேத்தமரின் முயற்சியினால் ஆங்கிலேசினரிடம் உத்தரவுபெற்றுக் கோயில் கட்டி மடாலயமாகப் பிரதிஷ்டைசெய்தனர். கிறீஸ்துவருஷம் 1807-ம் வருஷம் தைமீ 5-ந் திகதி சகலகுருத்துவ மரியாதைகளுடன் குருப்பிரதானியாக இவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியும் வேறு ஐந்து குருமார்களை இவருக்குத் துணையாகக் குருத்துவம் நடத்தும்படியும் கவனர் உத்தரவு செய்திருக்கின்றார். பக்தகோடிகளால் நன்குமதிக்கப்பெற்றுச் சிறப்பாக நித்திய நைமித்தியங்கள் நடைபெறுகின்றன.

## 2. நகுலேஸ்வரம் மாவிட்டபுரம்.

நகுலேஸ்வராலயம் கீரிமலை பிர்மஶ்ரீ ச. தியாகராஜக்குருக்களவர்களின் நன்முயற்சியினால் திருப்பணிநிறைவேறி நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

## 3. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்.

அக்காலந் தொட்டு பக்தசிரோன்மணிகளினால் நன்குபாராட்டப்பெற்று, பிரமஶ்ரீ சா. இரத்தினக் குருக்களவர்களின் சிரமம் நோக்காப் பிரயாசையினால் கருங்கற்றிருப்பணியாக வேலைநடந்து வருகின்றது.

## 4. கைலாஸ நாதசுவாமி தேவஸ்தானம்.

வட்டுக்கோட்டை முத்தமிழ் வித்துவானும் வேதாகமஜோதிஷ வைத்ய வித்வானும் தென்கோயிற்புராணம் முதலிய புராணங்களின் ஆக்கியோனும் பலநாடகாசிரியரும் எமது அருந்தந்தையுமாகிய பிரமஶ்ரீ நா. சி. சுப்பிரமண்யசிவாசாரியர் அவர்கள் இயற்றிய “சிவமலை’ ‘லெங்காமான்மியம்” முதலிய நூல்களில் முன்னையோர் சொல்லியபடி கீரிமலை, கேதீஸ்வரம் முதலிய க்ஷேத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்களைப்போல் இந்தத்தேவாலயமும். வேதாகமபுராண இதிகாச சோதிஷ்வித்வ சிகாமணியும் எமதுமாதுலரும் ஆகிய பிரமஸ்ரீ ந. வே. கார்த்திகேயக்குருக்கள் அவர்கள் தனது ஆத்மலாபத்தின் பொருட்டும் குடும்பசந்ததியாகப் பார்த்துப் பராபரித்து பூசை செய்து ஆத்மலாபம் அடையும் பொருட்டும் சொந்தப்பொருள் கொண்டு திருப்பணி பிரதிஷ்டை முதலியன நடத்தப்பெற்றுச் சிறப்பாக நித்திய நைமித்தியங்கள் நடத்திவருகின்றனர்.

## 5. கேதீஸ்வரம்.

இப்பாடல்பெற்ற சிவஸ்தலம் மன்னாருக்குச் சமீபமாகவுள்ளது. இது கொழும்புவாசரும் வேதாகமபுராண சோதிஷவித்வ சிகாமணியும் ஆகிய பிரமஸ்ரீ நா. குமாரஸ்வாமிக்குருக்கள் அவர்களின் சொலற்கரிய பிரயாசையினாலும் சொந்தப்பொருளினாலும் கட்டப்பட்டும் கும்பாபிஷேகத்திற்கு முன் அவர் சிவபதஞ்சென்றபடியால் அவர் பௌத்திரர் பிரமஸ்ரீ மு. சோமாஸ்கந்தசிவாசாரியர் அவர்களின் முயற்சியினாற் கும்பாபிஷேகமாகி நித்திய நைமித்தியங்கள் சிறப்பாக நடந்துவருகின்றன.

## 6. முனீஸ்வரம்.

ஸ்ரீவடிவாம்பிகாஸமேத முன்னநாதஸ்வாமி தேவஸ்தானம் சலாபம் டிஸ்றிக்டை சேர்ந்த முனீஸ்வரம் என்னும் க்ஷேத்திரம் சூர்யகுலராஜாக்களாகிய ஸ்ரீராமபிரான் முதலிய சக்கிரவர்த்திகளாலும் பராக்கிரமபாகு முதலிய இலங்கை அரசர்களினாலும் நன்குபரிபாலிக்கப் பெற்றும் சர்வமான்யங்கள் சன்மானிக்கப்பெற்று இருந்தும் பழுதுபட்டுப் பூசை முதலியன குறைந்திருக்குங்கால் கொழும்புவாசரும் வேதாகமபுராண சோதிஷவித்வசிகாமணியாகிய பிரமஸ்ரீநா. குமாரஸ்வாமிக் குருக்களவர்களால் திருப்பணிபிரதிஷ்டை முதலியன நடாத்தப்பெற்று அவர் பௌத்திரரும் வேதாகம புராண வித்வசிகாமணியும் ஆரியதேவானும் ஆகிய பிரமஸ்ரீ மு. சோமாஸ்கந்தசிவாசாரியரவர்களின் தர்ம பரிபாலனத்தின்கீழ் சமயாசாரம்பதம் பாராட்டாது சர்வமதஸ்தர்களும் வணங்கி இஷ்டசித்திகளைக் குறைவின்றியடைந்து வருகின்றார்கள்.

---

உ

சிவமயம்

# *யாழ்ப்பாண வைபவம்.

வெண்பா.

சீரிலங்கையாட்பாணதேசசரிதத்தீபம்
பாரிலங்கவாசகமாய்ப்பன்னுதற்கு — நீரிலங்கும்
துங்கக்கரிமுகனே தூயோனே அற்புதனே
சங்கத்தமிழ்மூன்றுந்தா

௧-வது, அதிகாரம்.

கிரேததிரேத துவாபரமென்னு முதல் யுகமூன்றிலும், இலங்காபுரியை இராக்ஷதராண்டாரென்று, இதிகாசபுராணங்கள் கூறுகின்றன. இராவணசங்காரத்தின்பின், இலங்கை அரசாட்சியைத் தசதர ராமனாற்பெற்ற விபீஷணன், கலியுகம் முற்கூற்றில் அரசு செய்தபின் நாராயணமூர்த்தியின் உத்தரவுபெற்று வைகுந்தபதவியில் தேகமுத்தியடைந்தானென்பதும், அவன் நீங்கியபின் வேற்றரசரின் கீழ்க்குடிகளாயிருப்பது நெறியல்லவென்று இராக்கதக்குடிகளாயுள்ளோரனைவரும் இலங்கையைவிட்டு வலசை வாங்கினாரென்பதும் கன்னபரம்பரை.

இற்றைக்கு 2400 வருஷங்களுக்குமுன் இவ்விலங்கைநாடு யானை கரடி, புலி முதலிய விலங்கு சாதிகள் சஞ்சரிக்கும் வனாந்தரமாயிருந்தது. அவ்வனாந்தரமத்தியிற் சிலவேடரேயன்றி வேறொருமானிட சீவனுமிருந்ததில்லை அக்காலத்தில் வங்கதேசத்திலே க்ஷத்திரியமரபிலே பிறந்து, லாலாதேசத்தை அரசாண்ட சிங்கவாகுவின் குமாரன் விசயனென்பவன் மகா துட்டனாயிருந்தமையினால் அவனைப் பிதா துரத்திவிட, அவன் அங்குமிங்குமலைந்து ஒருவரும் இடங்கொடாததினாற் காசியிற் போயிருந்தான். அவ்விடம் இருக்கையிற் சொப்பனத்திற் காசிவிசுவேசுரர் தரிசனமாகி நீ உன் கவ

---

* யாழ்ப்பாணத்திற் சம்பவித்தவைகளைக் கூறுவதால் இப்பெயருண்டாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையை நீக்கி இலங்கைமத்தியிலுள்ள, கதிரைமலையிலேபோயிரு. அந்நாடு உனக்குடையதென்று உத்தரவு கொடுக்கப்பெற்றதனால், அவ்விசய குமாரன் நீலகண்ட சிவாசாரியரென்னும் குருவை அழைக்க, அவர் தமது தேவியாகிய அகிலாண்டவல்லியம்மாளையும், புத்திரர் புத்திரிகளையும் மருமக்களையுஞ் சேர்த்துக்கொண்டு தமது பரிவாரங்களுடன் புறப்பட்டு யாவரும் கதிரைமலையிற் சேர்ந்தார்கள்.

அக்காலத்தில், இலங்கையிற் குடிசனமில்லாமையால் விசயகுமாரன் குடியேற்றக் கருதிப் பல முயற்சிகளைச் செய்தான். இலங்கை, இராக்ஷத நாடாயிருந்ததனால் அங்கு வரமாட்டோமென்று கன்னியாகுமரிதொடங்கி, இமயமலைபரியந்தமுள்ள சகலரும் மறுத்துச் சொன்னார்கள் அக்காலம், மகத நாட்டிற் சனங்களிலனேகர் புத்தசமயத்துக் குட்பட்டதினால், மகதராசன் அவர்களை அந்நாட்டைவிட்டுத் துரத்திவிட, அவர்களிற் சிலர் இமயத்துக்கு வடக்கேயும், சிலர் பிரமபுத்திரா நதிக்குக் கிழக்கேயும், பிரமதேசத்தைச் சேர்ந்த சீயம் முதலிய நாடுகளிலும் அலைந்து திரிந்தார்கள். அந்தச் செய்தியை விசயராசனறிந்து அவ்விடஞ்சென்றிருந்த பல குடிகளையழைத்துவந்து எத்திசைகளிலும் குடியேற்றி, நகரப்பிரதிஷ்டை செய்து அரசியற்றவாரம்பித்தான். அந்தப்புத்தர்கள் சிங்களமென்றுபெயருள்ள நாட்டிற் குடியேறினதாற் சிங்களரெனப் பெயர் பெற்றார்கள். குடிகளை வசப்படுத்திக்கொள்ளும் நோக்கத்தினால் இராசன் சமயவழிபாட்டைக் குறித்துச் சனங்களுக்கிட்டமதைக் கொடுத்து தனது சமயாசாரந்தவறாமல் நடந்துகொண்டான். அரசியற்ற ஆரம்பிக்குமுன்னே தனதரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலுதிக்கிலும் நாலு சிவாலயங்களைக் கட்டுவித்ததுமன்றி நந்தவனங்கள் கூபங்கள் முதலிய யாவற்றையும் ஸ்தாபித்தான் கிழக்குத்திசைக்குத் தம்பலகாமத்திற் கோணேசர்கோவிலை எழுப்பியும், மேற்குத்திசைக்கு மாதோட்டத்திலே பழுதுபட்டுக்கிடந்த திருக்கேதீச்சுரச் சிவாலயத்தைப் புதுப்பித்தும், தென்றிசையிலே மாத்துறையிற் சந்திரசேகரவீச்சுரர் கோவிலை எழுப்பியும், வடதிசைக்குக் கீரிமலைச்சாரில் திருத்தம்பலையென்னும் பதியிலே திருத்தம்பலேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரன், திருத்தம்பலேஸ்வரியம்மன் கோவில்களையும் தன் சமீபத்திற் கதிரையாண்டவர்கோவிலையுங் கட்டிவித்து அவ்வாலயங்களுக்குப் பூசைநடத்தும்படி மேற்குறித்த நீலகண்டாசாரியரின் சந்ததியாரையும் மூன்றாங்குமாரன் வாமதேவாசாரியனென்னுங் காசியிற் பிராமணனையும் அவன் பன்னியாகிய விசாலாட்சியம்மாளையும் அழைப்பித்து அக்கிரகாரமுதலிய வசதிகளுங் கொடுத்திருத்தி வைத்தான். அக்கோவிலவ்விடத்தே தோன்றியகாரணத்தால் அக்கிராமங் கோவிற்கடவையெனப் பெயர்பெற்றது.

## உ—வது, அதிகாரம்.

முற்காலத்திலே நகுலமுனிவரென்னு மோரிருஷி அங்குள்ள மலைச்சாரலிலிருந்து தீர்த்தமாடிவந்ததினால் தனக்கிருந்த கீரிமுகமாறி மானிடமுகம் பெற்றதன்மையினால் அத்தல விசேஷத்தையும் தீர்த்த மகிமையையுங் குறித்து வியப்புற்றுத் தவஞ்செய்தற்கேற்ற இடமெனக்கருதி அம்மலையின் குகையிலே வாசஞ்செய்து கொண்டிருந்தார். அம்முனிவர் விசயராசன் கட்டுவித்த பலவாலயங்களிற்றங்கி வழிபட்டுவந்தார். அந்தவிருஷிக்குக் கீரிமுக மாறிய காரணத்தால் அம்மலை கீரிமலையெனப் பெயர்பெற்றது. அதனால் கோவில்களும் நகுலேசுரன்கோவிலென்றும் நகுலாம்பிகை அம்மன் கோவிலென்றும் வழங்கிவந்தன. விசயராசன் திருப்பணியை நிறைவேற்றியபின் தனதிராச்சியம் முழுதுஞ் சுற்றிப்பார்த்துக்கொண்டு கதிரைமலையைச்சேர்ந்தான் அதன் பின் தம்பலகாமமென்னுமிடத்தை இராசதானியாக்கிக்கொண்டு தன் மனைவியையும் இரண்டு மக்களையுந் தள்ளிவிட்டுப் பாண்டிநாட்டுப் பெண்ணொருத்தியை விவாகம்பண்ணிச் சிலவருஷமரசியற்றிப் புத்திரசந்தானமில்லாமல் இறந்துவிட்டான்.

அவன் மந்திரி இராச்சியத்தைத் தளம்பவிடாமல் ஒரு வருஷங்காப்பாற்றிய பின்பு விசயராசன் சகோதரனுடைய குமாரன், பாண்டு வாசுவென்பவனை அழைத்துவந்து அரசனாக்கினான். பின்பு இவன் குலத்தரசர் தலைமுறை தலைமுறையாக அனேககால மிவ்விலங்கைநாட்டை அரசாண்டுவந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலிவாகனச்சகாப்தம் 358ம் வருஷத்தில் மனுநீதிகண்ட சோழராசன்மகன் குழக்கோட்டு மகாராசன் யாத்திரைபண்ணித் திரிகோணமலையிற் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்டலகாமத்திற் பழுதுபட்டுக்கிடந்த கோணேசர் கோவிலைப்பழுதுபார்ப்பித்து, அக்கிரகார முதலியவைகளையுந் திருத்திவித்துக்கொண்டிருந்தான். அக்காலத்திலே கண்டிநாட்டிலிருந்து இலங்கை முழுவதையும் அரசாட்சி செய்த பாண்டுமகாராசன் மணற்றிடல் என்றழைக்கப்பட்ட இந்நாட்டில் வந்தான்.

அப்போ இவ்விடத்திற் குடியிருந்த சிங்களவரிற் சிலர் கீரிமலைக்குச் சமீபமாயிருந்த கரைதுறைகளிற்குடியிருந்த முக்குகரைக்கொண்டு மீன்பிடித்துக் குவித்துக் கண்டிநாடு முதலிய இடங்களுக்குக் கொண்டுபோய் வியாபாரஞ்செய்வது வழக்கமாயிருந்தது. உசுமன் சேர்ந்தான் என்று பெயரிய முக்குகத்தலைமை வலைஞர்கள், தங்கள் வேலையாட்களைக் கொண்டு மீன்பிடித்துக் கொடுத்து வந்தார்கள். சிங்களவர் நிழல் வசதிக்கும் நீர் வசதிக்குமாக அங்குள்ள மலைச்சாரலிருக்குஞ் சிவாலயங்களிற்றங்கிக் கோவிற்பிரகாரங்களில் மீன் காயப்போட்டுத் திருக்கிணறுகளில் தண்ணீரள்ளவுந் தொடங்கினதினாற் பிராமணர் கோவில்களைப்பூட்டி கொண்டப்புறம் போயொதிங்கிவிட்டார்கள், கோவில்களிற் சிலகாலம் பூசையில்லாமலிருந்தது.

அதை அவ்விடத்திருந்த பாண்டு மகாராசனறிந்து விசாரணைசெய்து சிங்களவருக்கு நியாயமான தண்டனைபுரிந்து முக்குகக்குடிகளைத் துரத்திவிட்டான்.

## ௩—வது, அதிகாரம்.

உசுமன்முதலிய வலைஞர்கள் அவ்விடம் விட்டு மட்டக்களப்புக்குப்போய்ப் பானகையிரவி யென்னுமிடத்திலிருந்தார்கள் சிலர் இந்நாட்டின் மறுதுறைகளி லிருந்தார்கள். உசுமன்துறை-சேர்ந்தான்களமெனும் பெயர்கள் உசுமன் சேர்தானென்பவர்களால் வந்தன வலித்தூண்டன் முதலிய இடங்களில் முக்குகரிருந்ததில்லை.

பாண்டு மகாராசன் இங்கேயிருக்க அவன் மனைவி குழக்கோட்டுமகாராசன் கோணேசர் கோவிற் றிருப்பணி செய்விக்குஞ் செய்தியைக்கேட்டுத் தங்கள் சேனைகளிற் சிலரையழைத்து நீங்கள் குளக்கோட்டனை இந்நாட்டினின்றுந் துரத்திவிட்டு வாருங்களென்று செலவுகொடுத்தனுப்பச் சேனைகள் தம்பலகாமத்திற்குப்போய் அவ்விடத்திற் குழக்கோட்டரசன் செய்விக்கும் பெரியவேலைகளையும் அவனுடன் நின்ற சேனைத்திரள்களையுங் கண்டு பயந்து நடுக்கமுற்று ஒன்றும் பேசாமல் தூதாகவந்தவர்கள்போல் நின்றார்கள் அரசன் அவர்களைப்பார்த்து ஏன் வந்தீர்களென அவர்கள் மகாராசனே இந்தத் திருப்பணிக்குவேண்டிய பொருளேதேனும் தேவையோவென விசாரித்து வாருங்களென்று அரசியனுப்ப வந்தோமென்றார்கள். அரசன் அவர்களைநோக்கி வேண்டிய சகலவஸ்துக்களுஞ் சம்பூரணமாயிருக்கின்றன. ஒன்றும் வேண்டியதில்லை உங்கள் சுகவதிசயங்களை விசாரித்தேனென்று உங்களிராணிக்கறிவியுங்களென்று சொல்லிச் சேனைக்கு உசிதமான விருந்துகொடுத்து உபசரித்து அனுப்ப அவர்கள் போய் நடந்த செய்திகள் யாவற்றையு மறிவித்தும் விருந்திற் பருமாறிய பதார்த்தங்களின் மதுரத்தையும் வியந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள். அரசி அந்தச்செய்தியைக்கேட்டு யாதொரு பேச்சுமின்றி இருந்தாள்.

குழக்கோட்டுமகாராசன் திருப்பணியை முடித்து, அவ்வாலயப் பணிவிடைக்குங் கோணேசலிங்கத்துக்கும் பூசனைபுரிவிப்பதற்குஞ் செலவுகளுக்காக ஏழு நாட்டு வயல்நிலங்களையுந் தோப்புகளையுமேற்படுத்தி அவைகளிற் பயிரிட்டு வருமானஞ்செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியிருத்தித் தன்னாட்டிற்கு மீண்டான். அந்நாள் முதல் ஆலயப்பணிவிடைகளும் அந்தணர் கிராமங்களும் மடங்களுஞ் சம்பிரமமாக முன்போல நடந்துவந்தன. சில காலத்தின் பின் குழக்கோட்டுமகாராசன் தேகவியோகமடைந்துவிட்டான். அதன்பின் மேற்கூறிய ஏழு நாடுகளிலும் பயிர்க்குடிகளாயிருந்த வன்னியர்கள் மிகவும் பெருகினார்கள். பாண்டிநாட்டிலிருந்து பின்னும் ஐம்பத்தொன்பது வன்னியர்கள் வந்து அவர்களுடன் கூடிக்கொண்டார்கள் வருமானமும் குடிகளும் வரவரப்பெருகிக்கொண்டபடியால் அரசாட்சியின்றிப் பலமுறை கலகங்

கள் நேரிட்டன. அவ்வேழுநாடுகளும் கோணேசகோவிலுக்குச் செல்வதேயன்றிக் கண்டிநாட்டரசருக்கு யாதொரு நயமுமில்லாமையால் அந்நாட்டரசர்கள் அவற்றைப் பராமுகம் பண்ணிவிட்டார்கள்.

## ச—வது, அதிகாரம்.

அக்காலத்திற் சந்திரவன்னியனும் வேறனேக குறுநிலமன்னரும் தோன்றிப் பலவாறு கலகஞ்செய்து மரித்துவிட வன்னியர்களனைவரும் ஒத்திணங்கித் தங்கள் சாதியிற்றலைமைப்பட்ட ஏழுபேரைத் தெரிந்து அவ்வேழு நாடுகளுக்குந் தலைவராக்கிக் கீழமைந்திருந்தார்கள். அதுமுதல் அத்தலைவரின் சந்ததியாராயிருந்த வன்னியர்களாண்டதனால் வன்னிநாடெனப் பெயர்பெற்றது. சாலிவாகன சகாப்தம் 515ம் வருடத்தில் இலங்கைக்கரசனாயிருந்த அக்கிரபோதிமகாராசன் இவ் வன்னியர்கள் தாங்களும் அரசரென்று இறுமாப்புக்கொண்டதை அறிந்து அவ் வன்னியர்களின் அதிகாரத்தைக் குறைத்துத் தன்னாணையைச் செலுத்திவந்தான். அதுமுதல் அவ் வன்னியர்கள் நாட்டதிகாரிகளாய் ஆண்டுவந்தார்கள். சாலிவாகன சகாப்தம் 717ம் வருஷத்தில் விஜயராசனின் சகோதரன் மரபிற்பிறந்த உக்கிரசிங்கனென்னும் அரசன் வடதிசையினின்று வெகுதிரளான சேனையுடன் வந்து போராடிச் சிலகாலமாக இழந்திருந்த இவ்விலங்கையில் அரைவாசியைப்பிடித்துக்கொண்டு கதிரைமலையிலிருந்து அரசாண்டுவந்தான் தென்னாடுகளை வேற்றரசனாண்டுவந்தான்.

இந்த உக்கிரசிங்கராசனுக்குச் சிங்கத்தை யொத்தமுகமும் மானுடதேகமுமிருந்தது இவன் நகுலேசர் கோவிலைத் தரிசிக்கும் பொருட்டுவந்து, கீரிமலைச்சாரலிலே முற்காலத்திற் சோழராசன் தான் தீர்த்தமாடித் தங்கியிருக்கக் கட்டுவித்த மாளிகையிலே இறங்கினான். சோழராசன் மாளிகைகட்டுவித்ததினால் அந்த இடம் வழுவர்கோன் பள்ளமென வழங்கிவந்தது.

அவனவ்விடமிருக்கத் தொண்டைநாட்டை அரசாண்ட தொண்டைமானென்னும் அரசன் காணவாய் வெள்ளப்பரவையென்னுமிடங்களில் நல்லுப்புப் படுஞ்செய்தியைக்கேட்டுத் தன் பரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்களுடன் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி இவனைச் சந்தித்து இந்நாட்டில் விளையுமுப்பிலே தனக்குவேண்டியளவுக்கு வருடந்தோறும் விலைக்குக் கொடுக்கும்படியும் உப்புப்படுமிடத்துக்குச் சமீபமாக மரக்கலங்களைக் கொண்டுவந்தேற்றவும் மொதுங்கி நிற்கவும் வசதியாகக் கடலிலே நின்றொராறு வெட்டுவித்துக் கொள்ளவும் உத்தரவுகேட்டான். உக்கிரசிங்கமகாராசன் உத்தரவுகொடுக்கத் தொண்டைமானங்கிருந்த சிற்றூற்றை மரக்கலமோட்டத்தக்க ஆழமாயும் விசாலமாயும் ஒதுக்கிடமாகத்தக்கதாயும் வெட்டுவித்துத் தன்னூருக்குமீண்டான் அதுமுதல் அது தொண்டைமாறுறென்றழைக்கப்படுக்கின்றது. உக்கிரசிங்க மகாராசன் தன்சேனைகளோடு கதிரைமலைக்கு வன்னிமார்க்கமாக செல்லுகையில் வன்னியர்கள் ஏழுபேரும் எதிர்கொண்டு வந்து திறைகொடுத்து உத்தரவு பெற்றுக்கொண்டார்கள். அரசன் இராச்சிய மெங்கும் தன்னுணை செல்லவும் தனக்குவரவேண்டிய திறையைக் கோணேசர் கோவிலுக்குக் கொடுக்கவும் முடன்பாடு பண்ணுவித்துக்கொண்டு கதிரைமலையிற் சேர்ந்தான்.

இவைகள் சம்பவித்த எட்டாம் வருடத்திலே சோழநாட்டரசனாகிய திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லி என்பவள் குன்மவியாதியினால் மெலிந்தவளாய் அவ்வியாதி வயித்தியரால் நீக்கமுடியாமையால் தீர்த்தயாத்திரை செய்தாலொருவாறு நீங்குமெனக்கருதிக் காவிரிப்பூம்பட்டணத்தினின்று புறப்பட்டெங்கும் போய்த்தீர்த்தமாடி வருகையிற் சாந்தலிங்கனென்னு மொரு சந்நியாசிகண்டு, உன் வியாதிபண்டிதராற் குணமாகத்தக்கதன்று இப்பொழுதெடுத்த முயற்சியே சுகந்தரத்தக்கது இலங்கையின் வடமுனையிலே கீரிமலையென்றொரு மலையுண்டு அது சமுத்திர தீரத்திலுள்ளது அங்கே உவர்ச்சலமத்தியிற் சுத்த தீர்த்தமும் மலையருவித்தீர்த்தமும் கலந்தஉத்தம தீர்த்தமொன்றுண்டு உலகத்திலுள்ள எந்தத்தீர்த்தத்திலும் முக்கியமானது அதிலே நீ போய் ஸ்னானம்பண்ணிச் சில காலந்தங்கி இருப்பாயாகிற் சுகமடைவாயென்று சொல்ல அதற்கிசைந்து உடனே திரவியங்களை எடுத்துக்கொண்டு மாருதப்புரவல்லி புறப்பட்டுத் தாதிமாரும் தோழிமாருஞ் சேனைவீரருஞ் சூழ்ந்து வரக் கீரிமலைச்சாரலில் வந்திறங்கி நகுலமுனிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைக்கண்டு பஞ்சாங்கநமஸ்காரஞ்செய்து அவரால் ஆசீர்வாதம் பெற்று அந்தத் தலவிசேஷத்தையும் தீர்த்தமகிமையும் தான் தீர்த்தமாடினதினால் தனக்கிருந்த கீரிமுகமாறி மனுஷமுகம் பெற்றதையும் முனிகூறக்கேட்டு மகாசந்தோஷத்துடன் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனஞ்செய்து அங்கு ஓர் இடத்தில் பாளயம் போட்டுக்கொண்டு சிலகாலம் அவ்விடத்திலிருந்தாள். இப்படிச் சுவாமிதரிசனஞ்செய்து தீர்த்தமாடிவருகையில் அவளுக்கிருந்த குன்மவலியுந் தீர்ந்து குதிரைமுகமும் மாறிற்று. மாறவே மாருதப்பிரவல்லியின் யவ்வன சொரூபத்தைக் கண்டவர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

அக்காலத்திலே உக்கிரசிங்கசேன் நகுலேசர்கோவிலைத்தரிசிக்க மூன்றாந்தரம் வந்திறங்கி வளர்வகோன் பள்ளத்திற் பாளயம்போட்டிரிந்தான். இப்படிஇருக்குங் காலத்தில் அவன் ஒருநாள் பரிசனங்களோடு சுவாமிதரிசனம் செய்யப்போனபொழுது அங்குசென்ற மாருதப்பிரவல்லியைக்கண்டு ஆச்சரியமுற்று அவள் பேரழகினால் மயங்கி இவளாரென்று விசாரணைசெய்து இவளைத் தான் விவாகஞ்செய்யவேண்டுமென்று தீர்மானித்து மோகசகிதனாய் மீண்டுஞ் சந்நிதியையடைந்து தரிசனஞ்செய்து தன்பதியையடைந்து சமயம் வாயாது காத்துக்கொண்டிருந்தனன்.

## ரு—வது, அதிகாரம்

மாருதப்பிரவல்லி தனக்குக் குதிரைமுகமாறின் காரணத்தால் மாவிட்டபுரமெனப் பெயரிட்டுக் கந்தசுவாமி கோவில் கட்டுவிக்கும்பொருட்டு அதற்கு வேண்டிய சகல வஸ்துக்களும் விக்கிரகங்களும் பிராமணரும் அனுப்பிவைக்கும்படி பிதாவாகிய திசைஉக்கிரசோழனுக்குச் சகல காரியங்களையும் வரைந்து ஓர் திருமுகம் அனுப்பினாள் அத்திருமுகம் பெற்றவுடனே மகாராசன் மிகவுஞ் சந்தோஷித்து வாசித்தளவில் ஆனந்தபரவசனாய்க் கண்ணீர் ததும்பி மனம் நினைந்து நெக்குருகிக் கசிந்து அக்கடவுளின் கிருபையை இடையறாது துதித்துநின்றனன் அவன் தன் புத்திரிக்கு ஆகவேண்டிய சகல காரியங்களையும் செய்துமுடித்துக்கொண்டு இலங்காபுரிக்கு ஒரு பிராமணனை அனுப்பவேண்டுமாகையால் தீக்ஷிதரில் ஒருவரைத் தன்னிடமனுப்பிவைக்கும்படி சிவாலயத்தலைவனு

28840
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்குக் கட்டளை அனுப்பி பிராமணர் தோணியேறுவது மகாதோஷமாயிருக்க அரசனிப்படிக் கட்டளையனுப்பியிருக்கிறனே நானிதற்கென்ன செய்வேனென்று பயந்து தில்லைச்சிவாலயத்திலே மூன்றுநாட் பட்டினிகிடந்தான். அப்பொழுது சொப்பனத்திலே கிரிமலைச்சாரரிலுள்ள புண்ணிய தீர்த்தத்தினலுஞ் சிவாலயமகத்துவத்தினலும் அப்பூமி மிகச்சிறந்ததெனக் கருதாது பாவமென்றதென்னை பிராமணர் நியமநிட்டை வழுவாதபடிக்கு மரக்கலங்களில் இராத்தங்காமற் பிரயாணஞ்செய்யலாம் காசியிற் பிராமணரும் அங்கேயிருக்கிறர்கள். அதுவுமன்றி நகுலமுனிவனும் அங்கேயிருக்கின்றன். அந்நகுலமுனி அத்தல விசேஷத்தைக்கண்டு அவ்விடமிருந்து தவம்பண்ணும்போதே அங்கேபோக யோசனை பண்ணவேண்டியதில்லை யாதோராலோசனையுமின்றி அனுப்பலாமென்று உத்தரவுகிடைத்தது. அப்போது சிவாலயத்தலைவன் சந்தோஷமாய்ப் பெரியமனத்துளாரென்னும் தீக்ஷதரைச் சோழராசன் பதிக்கனுப்பினன். அவ்வரசன் சகலதளபாடங்களையும் விக்கிரகங்களையும் அவர்கையிற் கொடுத்தனுப்பினன். அவர்கைக்கொண்டு காங்கேயன்துறையில் வந்திறங்கினர். கந்தசுவாமி விக்கிரகம் வந்திறங்கினகாரணத்தால் அந்தத்துறைக்குக் காங்கேயன் துறையெனப் பெயராயிற்று.

மாருதப்பிரவல்லி ஒருநாளிரவில் அந்தத் திருப்பணியைப் பற்றிய ஆலோசனையுடன் சப்ரமஞ்சத்திற் சாய்ந்து விழிப்பாயிருக்குஞ்சமயத்திலே அர்த்தசாமத்தில் உக்கிரமசிங்கமகாராசன் சேனைகளையும் பாளையக்காவல்களையும் கடந்து பாளையத்தினுட்புகுந்து அவளைப்பிடித்துத் தன்பாளயத்திற்குக் கொண்டுபோய்விட்டான். பொழுதுவிடிந்தபின் அவளுடையதாதிமாருந் தோழிமாருஞ் சேனைகளும் அவளைக்காணமல் மனக்கலக்கமுற்று எங்குந் தேடியுங் காணது தவித்து நிற்கும்வேளையில் உக்கிரமசிங்கமகாராசன் பாளையத்திலிருக்கிறளென்றறிந்து அங்கேபோய் நாங்களென்ன செய்யலாமென்று மனக்கலக்கத்தோடு பணிந்து வந்தனைகள் செய்துகூற, அரசன் அவள் என்பட்டத்துத் தேவியானள் நீங்களிந்தச் சுபசோபனசெய்தியை இவளின், பிதாமாதாவுக்குப்

போய் அறிவியுங்களென்று வழிச்செலவுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தனுப்பிவிட்டான். அதன்மேல் உக்கிரசிங்கன் கதிரைமலைக்குப்போக யோசித்தபோது மாருதப்பிரவல்லி கந்தசுவாமிகோவிற்றிருப்பணி நிறைவேற்றி முதலாமுற்சவச் சிறப்புக்கண்டாலேயன்றி அவ்விடத்தைவிட்டுப் போகப்பிரியமில்லாமலிருந்ததினாற் பிரயாணத்தை நிறுத்தித் திருப்பணியை நிறைவேற்றி ஆனி உத்திரத்திலன்றைக்குத் துவசாரோகணந்துவங்கி உற்சவத்தைநிறைவேற்றிக்கொண்டு அதன்பின் மாருதப்பிரவல்லியுடனே அவ்விடம்விட்டுப்போனான். மாருதப்பிரவல்லி பாளயம்போட்டிருந்தவிடம் அது முதற்குமாரத்தி பள்ளமெனப் பெயராயிற்று. உக்கிரமசிங்கமகாராசனும் மாருதப்பிரவல்லியும் கதிரைமலையிற் சேர்ந்து விவாகச்சடங்கை நிறைவேற்றித் தெய்வேந்திரபோகத்தையனுபவித்திருந்தார்கள். தில்லையிற் பெண் எல்லைகடவாததாந் பெரியமனத்துளார் விவாகமில்லாதவராய் வந்திருந்தார் அவர் சாம்பசிவ ஐயரின்மகள் வாலாம்பிகையை விவாகஞ்செய்து அப்பெண்ணுக்குத் தில்லைநாயகவல்லி யென்று பெயரைமாற்றிக் கந்தசுவாமிகோயிலின் தென்புறத்திலே அக்கிரகாரத்திலிருந்துகொண்டுகோயிற்பூசை பண்ணிவந்தார். பிராமணக்குடும்பங்களிரண்டும் ஒரு குடும்பமாகி இருதிறக்கோவில்களுக்கும் ஒருவரே விசாரணைத்தலைவரானார். உக்கிரமசிங்கராசன் சிலகாலத்தின்பின் செங்கடக நகரியை இராசதானியாக்கி அங்கிருந்து அரசாண்டு வருங்காலத்தில் மன்மதரூபமுஞ் சர்வராசலட்சண முடையவனுய்ச் சிங்கவாலுடனொரு குமாரனும் அவனுடனொருபெண்ணும் பிறந்தார்கள். அவ்விருவருக்கும் நரசிங்கராசனென்றுஞ் செண்பகாவதியென்றும் பெயரிட்டு இருவருக்கும் விவாகத்தையுஞ்செய்து அவ்வாலசிங்கராசனைச் செயதுங்கபராராச பட்டத்துடன் முடியுஞ்சூட்டி அரசாளவைத்துச் சிலகாலத்தில் உக்கிரமசிங்கராசன் மரணமடைந்தான். செயதுங்கபரராசன் அரசாட்சியை நடத்தினான்.

## ௬—வது அதிகாரம்.

அக்காலத்திலே இரண்டுகண்ணுங் குருடனுகிய கவிவீரராகவனென்பவன் யாழ்ப்பாண வாலசிங்கமகாராசன் பேரிற் பிரபந்தங்களியற்றிச் செங்கடநகரிக்குப்போய் ராசசமுகத்தில் யாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்துப் பாடிவருங்காலத்தில் அரசன் மிகச் சந்தோஷப்பட்டு இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடல் என்னும் இந்நாட்டை அவனுக்கு உபகாரமாகக்கொடுத்தான். அவனுபகாரம்பெற்று இந்நாட்டுக்கு யாழ்ப்பாணமெனப்பெயரிட்டு இவ்விடம் வந்து சேர்ந்து வடதிசையிலிருந்து சிலதமிழ்க்குடிகளை அழைப்பித்து அக்காலத்திற் சிங்களவரையும் மற்றும்பிறரையும் அரசாளக்கருதிக் தமிழ்க்குடிகளையு மங்கிருந்த சிங்களவருடன் குடியேற்றிச் சிலகாலம் அரசாட்சிசெய்து வயோதிகனாயிறந்தான். அப்போது யாழ்ப்பாணஞ் சிலகாலம் அரசனில்லாது தளம்பிக்கொண்டிருக்கையிற் சிங்களவரைத் தமிழ்க்குடிகள் மிகவும் வருத்தினதினால் அவர்கள் சகிக்கமுடியாது தங்கள் நாட்டுக்குப்போய்விட்டார்கள்.

இப்படி இருக்குங்காலத்திற் பொன்பற்றியூர் வேளாளனாகிய பாண்டிமளவனென்னும் பிரபு மதுரைக்குப்போய் அங்கு நின்று புறப்பட்டுச் சோழநாட்டிற்குப் போய்ச் சிலகாலமிருந்து இராச உத்தியோகத்திற்கேற்ற கல்வி கற்றுக்கொண்டிருந்த திசையுக்கிரசோழன் மகன் சிங்கேதுவுக்கு மருமகனும், மேற்கூறிய மாரதப்பிரவல்லிக்கு மகன்முறையுஞ் சூரியவமிசத்தவனாகிய சிங்கையாரியனென்னும் இராசகுமாரனைக்கண்டு யாழ்ப்பாணத்தின் நிலைபரத்தை அறிவித்து இந்நாட்டை அரசுசெய்யும்படி வரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளச் சிங்கையாரியன் மறுக்காது உடன்பட்டுக்கல்வியறிவிலும் புத்திவிவேகத்திலு மெவர்களும் வியந்து கொள்ளத்தக்க உத்தண்ட வீரசிகாமணியுமாகிய புவனேகவாகு என்னும் மந்திரியையுங் காசியிலிருந்துவந்த வேதியர் குலத்துங்கனாகிய கங்காதரக்குருக்களையும் கூட்டிக்கொண்டு மற்றும் பரிவாரங்களுடன் பிரயாணப்பட்டுப் பாண்டிய இராசன் வழிவிட்டனுப்ப யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி, நல்லூரிலே அரசிருக்கை ஸ்தாபிக்கக்கருதிச், சோதிடர்சொல்லிய நன்முகூர்த்தத்திலத்திபாரம்போட்டு, நான்குமதிலெழுப்பி வாசலுமொழுங்காக விடுவித்து மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் பூங்காவையும் பூங்காவனநடுவே ஸ்நானமண்டபமும் முப்புடைக்கூபமு முண்டாக்கி அக்கூபத்தில் யமுனைநதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிடச் செய்து நீதிமண்டபம் யானைப்பந்தி குதிரைப்பந்தி சேனாவீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசிருப்பிடமுதலியவனைத்தையுங் கட்டுவித்துத் தன்னுடன்வந்த கங்காதரக்குருக்களும் அவர்பத்தினியாகிய அன்னபூரணியம்மாளும் வாசஞ்செய்தற்கு அக்கிரகாரமுமுண்டாக்கிக் கீழ்த்திசைக்குப்பாதுகாப்பாக வெய்யிலுகந்த பிள்ளையார்கோவிலையும் மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன்கோவிலையும் வடதிசைக்குச் சட்டநாதீசுரன் கோவில்களையுங்கட்டுவித்துத் தானும் தனது திலகவதியாரென்னும் பத்தினியுடன் கிரகப்பிரவேசஞ்செய்து ஐம்புலத்தறநெறிக்கு ஏனைமூவகை ஆச்சிரமிகட்கும், நற்றுணையாக வாழ்ந்திருந்தான். சிங்கையாரியமகாராசன் ஒருநாட் புவனேகவாகுவுடனாலோசித்துத் தமிழ்நாட்டரசருக்குத் திருமுகமெழுதித் தமிழ்க்குடிகளையழைப்பிக்க அவர்களுள் ஐந்துகுடிமைகளுடன்வந்த பொன்பற்றியூர் வேளாளன் பாண்டிமளவனையும் அவன்தம்பியையும் மைத்துனனாகிய சண்பகமளவனையும் தம்பியையும் திருநெல்வெலியிலும் காவிரியூர்ப்புரவலாதி தேவனின் மூத்தகுமாரனாகிய நரசிங்கதேவனையும் மயிலிட்டியிலும் வாவிநகர்வேளாளன் சண்பகமாப்பாணனையும், அவன் ஞாதியாகிய சந்திரசேகரமாப்பாணனையும் கனகராயனென்னுஞ் செட்டியையும் தெல்லிப்பளையிலுமிருத்தினான். கோவிலூரார் பேராயிரமுடையானென்னும்வேளாளனை இனுவிலிலிருத்த அவன் அவ்வூர்திருத்தப்படாததினால் அவனவ்வூரைவிட்டு மேலைக்கிராமத்திற் போயிருந்தான். இராசமுத்திரைகளும் வரிசைகளும் பெற்ற தசசூரவேளாளன் நீலகண்டனையும் அவன்தம்பிமார் நால்வரையும் பச்சிலைப்பள்ளியிலும் சிகரமாநகரவேளாளன் கனகமளவனையும் தம்பிமார் நால்வரையும் புலோலியிலும் கூபநாட்டுவேளாளன் கூபகாயேந்திரன் புண்ணியபூபாலனென்னு மிருவரைத்தொல்புரத்திலும் புல்லூர்வேளாளன் தேவராயேந்திரனைக் கோயிலாக்கண்டியிலும் தொண்டைமண்டலத்து மண்ணாடுகொண்ட முதலியென்பவனை இருபாலையிலும் செய்யூர் இருமரபு துய்யதனிநாயக்கனென்னும்வேளாளனை நெடுந்தீவிலும் காஞ்சிபுரம் வல்லவனென்னும் பிரபுவை இரண்டுதுணைப்பிரபுக்களுடன் வெளிநாடென்னும் பல்லவராயக்காட்டிலுமிருத்தினான்.

சிங்கையாரியனிப்படியே அந்தப்பிரபுக்களை அவரவர் அடிமை குடிமைகளுடன் அங்கங்கிருத்தியபின் வல்லிமாதாக்களென்

கிரமசூரனைமேற்பற்றுக்கும் செண்பகமாதாக்கனென்னும் சூரவீரி யனைக் கீழ்ப்பற்றுக்கும் யோன் மாதாக்கனென்னும் விசயபராக் கிரமனைத் தென்பற்றுக்கும் அதிகாரிகளாக்கி உத்தண்டவீரசிகா மணியாகிய வீரசிங்கனென்பவனைச் சேனாதிபதியாக்கி ஓர் சுபதி னத்திலே நல்லமுகூர்த்தமிட்டு மகுடாபிஷேகம் நகர்வலம்வந்து சிங்காதனமேறிப் பூலோகதேவேந்திரனாகி அரசாண்டுவந்தான். இவ்வரசனுக்கு ஒருகை கூழங்கையாயிருந்ததினால் அவனைக் கூழங்கையாரியனென்றும் விசய கூழங்கைச்சக்கிரவர்த்தி யென் றுஞ் சொல்வார்கள். சிங்கையாரியமகாராசன் இப்படியே அர சாட்சியைக்கைப்பற்றி நடத்திவருகையிற் புறமதில்வேலையையுங் கந்தசுவாமிகோவிலையும் சாலிவாகனசகாப்தம் 870-ம் வருஷத் தில் புவனேகபாகு என்னு மந்திரி நிறைவேற்றினான். சிங்கை யாரியமகாராசனும் மந்திரியும் கீரிமலைக்குப்போய்த் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனஞ்செய்து அவ்வாலயவிசாரணையும் அரசாட்சிக் குள்ளாக்கிக்கொண்டு கந்தசுவாமிகோவில்வந்து பெரியமனத்து ளார்குமாரன் சிதம்பரதீக்ஷிதரின் மகனாகிய சின்னமனத்துளார் விருந்திடவுண்டு இளைப்பாறினார்கள். அவ்விருந்து மிகவுமுசிதமா யிருந்ததால் புவனேகவாகு விருந்திலேபருமாறிய ஒவ்வொருப தார்த்தங்களுக்கும் ஒவ்வொருபாட்டுச்சொன்னார்.

## எ—வது அதிகாரம்.

இப்படியே பாட்டுக்களைப்பாடிக் கோவிலைப்பற்றிய ஒழுங் குகள்பண்ணிக்கொண்டு திரும்பினார்கள். காரியங்களிதுவிதமாய் நடந்துவருகையில் ஒருநாளிரவு அரசன் சப்ரமஞ்சத்தில் நித்தி ரைசெய்யும்பொழுது பரமேஸ்வரமூர்த்தி பார்வதி சமேதராய் எழுந்தருளிவந்து கனவிலே தரிசனைபாகி உத்தரவுகொடுத்தபிர காரம் கைலைவிநாயகரின் கோவிலின்பக்கத்திலே கைலாயநாதர் கோவிலையும், கைலாயநாயகியம்மன்கோவிலையும், எவற்றினும்விசே ஷமுறக் கட்டுவித்துமூன்று சபைகளையும் பரிவாரதேவர்களிருப் பிடங்களையும் உக்கிராணசாலை யாகசாலை, அக்கிரகாரமடம், தே ரோடும்வீதி அன்னசத்திரம் கற்றுமதிற்கோபுரம் இவைகளெல் லாவற்றையும் இயற்றுவித்துப் பாண்டிய அரசர்களை முதற்பாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தலைவராயிருத்தி இராமநாதபுரத்தையாண்ட சேதுபதிக்குப் பாசுரமனுப்பிக் கேதாரத்திலே மன்மதன் பூசித்த ஆதாரலிங்கத்தை அழைப்பித்துவைத்துப் பாண்டியராசனைக்கொண்டு பிரதிஷ்டை செய்வித்துத் தன்னுடன்வந்த கங்காதரக்குருக்களைப் பூசைக்கேற்படுத்திக் கைலாயநாதர் திருவடிகளையே தியானித்துக் கொண்டு நல்லூர்க்கைலையில் நெடுங்காலம் அரசாண்டுவயோதிகனைபின் தன்மகன்குலசேகர சிங்கையாரியனுக்கு முடிசூட்டி வைத்துச் சிலகாலத்திற் சிவபதமடைந்தான்.

குலசேகரசிங்கையாரியன் அரசாட்சிமுறைகளைத் திருத்தி குடிகள் பிரியப்படத்தக்கதாய் நடந்துசமாதான அரசாட்சிசெய்து தன்மகன் குலோத்துங்க சிங்கையாரியனுக்கு அரசாட்சியை ஒப்பித்துச் சிலகாலம் நோயினால்வருந்தித்தேகவியோகமானான்.

குலோத்துங்க சிங்கையாரியன் வயல்நிலங்களைத்திருத்துவித்து வருமானங்களை அதிகரிக்கச்செய்து குடிகள் சந்தோஷங் கொள்ளத்தக்கதாய்ச் சமாதான அரசாட்சிசெலுத்தித் தன்மகன் விக்கிரமசிங்கையாரியனுக்கு முடி-சூட்டிப் பரமபதமடைந்தான்.

இவன்காலத்திலே சிங்களவருக்குந் தமிழருக்குஞ் சமயாசாரங்களைப்பற்றிப் பெருங்கலகம் உண்டுபட்டதினால் சிங்களவர் தமிழரைக் காயப்படுத்தியும் இரண்டுபேரைக் கொலைசெய்தும் முரட்டுத்தனங்காட்டி நின்றதையறிந்த விக்கிரமசிங்கையாரியன் அவர்களைப்பிடிப்பித்து விசாரணைசெய்து அக்காலத்துக்குத் தலைவனாய்நின்ற பஞ்சிவண்டா வென்பவனையும் அவனைச்சேர்ந்த அறுபத்தேழு சிங்களவரையுங்கொலைசெய்து பின்னுஞ் சிறைச்சாலையை யடைவித்தான் அதன்பின் கலகமடங்கிச் சில சிங்களக்குடிகளொளித்து இந்நாட்டைவிட்டுப்புறப்படவே, அரசன் தமிழர்மேற்பற்றுள்ளவனாகவும் சிங்களவர்மேற் பற்றில்லாதவனாகவுமிருந்தான்.

இவனுக்குப்பின் இவன்மகன் வரோதய சிங்கையாரியன் அரசாட்சியை ஒப்புக்கொண்டு மார்க்கவழிபாடுகளைக் குறித்துச் சிலகட்டளைகளை ஏற்படுத்தி இருதிறக்குடிகளையும் அரசாண்டு தன்குமாரன் மார்த்தாண்ட சிங்கையாரியனுக்குப் பட்டத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துப் பரகதியடைந்தான். இவ்வரசன் கல்வியும் வேளாண்மையும் விருத்தியாகத்தக்க முயற்சிகளைச்செய்து வன்னியர்களால் வந்தகலகங்களைச் சமாதானப்படுத்தித் தமாளகுணமுள்ளவனாய்க் குடிகளைத்தாய்போலக் காப்பாற்றி அரசாண்டுவருங் காலத்திற் சுகவீனத்தால்மரணமடைந்தான். இது செய்தியைக்கேட்டமாத்திரத்தில் துக்கசாகரத்தில் அமிழ்ந்திக் கண்ணீர்விட்டுப் பதறாதார் யாருமில்லை இருதிறத்துக் குடிகளும் நினைந்து நினைந்து தடுமாறி உழன்றனர்.

## அ—அதிகாரம்

அவன்பின் அவன்மகன் குணபூஷண சிங்கையாரியன் முடிசூடி அரசியற்றிவந்தான். இவன் பிதாவிலும் அதிதயாளகுணமுள்ளவனாய்க் குடிகளைப்பாரபட்சமின்றி அரசாண்டு, கல்வி செல்வம், வர்த்தகம் முதலியயாவற்றையும் விருத்திசெய்து பூரணாயுளுடையனாகித் தன்குமாரன் வீரோதயசிங்கையாரியனுக்குச் சிங்காசனத்தை ஒப்பித்துச் சிலகாலத்தில் தேகவியோகமடைந்தான்.

இவன்காலத்திற் சிங்களக்குடிகளாற் கலகமுண்டாக அக்கலகங்கள் வன்னியராற் றூண்டிவிடப்பட்டதென்றறிந்து வன்னியர்கள்மேற் படையெடுத்துப்போய் ஏழுவன்னியர்களின் சிருகங்களைக்கொள்ளையடித்து, அவ்வன்னியர்கள் ஒருபோதும் அவ்வித எண்ணங்கொள்ளாதபடி தண்டித்துத் திரும்பினான். அவன் திரும்பியவுடன் சிங்களக்கலகக்காரர் அவன்காலடியில் விழுந்து தங்கள்குற்றங்களைப் பொறுத்தருளல் வேண்டுமென்றுவணங்கி நிற்க ஒருவாறு சந்தோஷித்து அக்குற்றங்களை மன்னித்து நன் முகங்காட்டி வேண்டியபுத்திமதிகளை யூட்டினான்.

அக்காலத்தில் மதுரையிலே, சந்திரசேகரபாண்டியனுடன் சத்துருக்கள் எதிர்த்து யுத்தஞ்செய்து இராச்சியத்தைப்பிடித்துக் கொள்ளப் பாண்டியன் ஒளித்துயாழ்ப்பாணத்துக்கு ஓடிவந்து வீரோதய சிங்கையாரியனென்னு மரசனிடம் அடைக்கலம்புகுந்தான். அப்பொழுது வீரோதய சிங்கையாரியன் பாண்டியன் கீழ்ப் பாளையக்காரராயிருந்த சேதுபதி முதலான வீரர்களோடுந் தன்சேனைத்திரள்களோடும் மதுரையிற் சென்றுபோராடிச்

சத்துருக்களைத் துரத்தி பாண்டியராசனின் அரசாட்சியை நிலைக்கச்செய்து தன்பதியடைந்தான்.

இவன்தான் மறுபடியும் வன்னியரின் கிருகங்களைக்கொள்ளையாடவர இருக்கிறானென்று ஒரு பொய்க்கதையைக்கட்ட, வன்னியர்கள் பயந்து கண்டி இராசனிடம் போய்த்தங்களுக்கு உதவிசெய்யுபடி கேட்க அதற்கு அவன் யாழ்ப்பாணம் என்முன்னோர் பரிசாகக்கொடுத்த இராச்சியமாயிருப்பதால் அதற்குவிரோதமாய்ப் படையெடுத்து என்குலப்பிதாக்களின் பெயருக்கு அவகீர்த்தி வரச்செய்யமாட்டேனென்று மறுத்துச் சொன்னதினால் அவ்வேழுவன்னியர்களுந் தங்களுக்குள்ள திரவியங்களிற் சிலபாகங்களைக்கொண்டுவந்து வீரோதயசிங்கையாரியனைக்கண்டு நன்முகம் பெற்றுத் திரும்பிப்போய்ப் பயமுற்றிருந்தார்கள். வீரோதயசிங்கையாரியன் போசனஞ்செய்து அன்றிரவிற்றானே சப்பிரமஞ்சத்தில் நித்திரைசெய்கையிலே சடுதியாய் இளவயதில்மாணித்தபடியால், அம்மரணத்தைக்குறித்துப் பலவாறாய்ப்பேசிக்கொண்டனர். அவன்குமாரன் செயவீரசிங்கையாரியன் சிறுவயதிலேமுடிசூட்டப்பெற்று, அதிவிவேகத்தோடு சாமார்த்தியமாய்ச் சத்துருபயமின்றி இராச்சியபரிபாலனஞ்செய்து குடிகளை இரட்சித்துத் தன்கீர்த்தியைவிளக்கிக்கொண்டிருந்தான்.

## ௯—வது அதிகாரம்.

அக்காலத்திற் கண்டி நாட்டை அரசாண்ட புவனேகவாகு என்பவன் முத்துச்சலாபத்தைக் குறித்து இவனுடன்பகைத்துத், தன் பராக்கிரம சவுரியத்தினாற் யுத்தஞ்செய்து இவனிராச்சியத்தைக் கவரவேண்டுமென்று துணிந்து நெருங்கினதினால் இவனும் அவனுடன் எதிர்த்து மண்மாரி மழைமாரிபொழிந்தாற்போல் யுத்தஞ்செய்து வெற்றிகொண்டு மிதுனயாழ்க்கொடிதூக்கிச் சாலிவாகன சகாப்தம் 1380-ம் வருஷந்தொடங்கி 1392-ம் வருஷம் வரையில் இலங்கைமுழுதையும் ஒருகுடைக்கீழ் அரசாண்டுவந்தான். சகாப்தம் 1392-ம் வருஷத்திலே பராக்கிரமவாகுவென்பவன் பாண்டியராசனைப் பிணைவைத்துச் செயவீரசிங்கையாரியனிடத்தில் இராச்சியத்தைப்பெற்றுக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனும் இவனிற் பின்வந்த வேற்றரசருமொழுங்காய்த் திறை கொடுத்துவந்தார்கள். இவன் நெடுங்காலம் அரசாண்டு தன்மகன் குணவீரசிங்கையாரியனிடத்தில் இராச்சியத்தை ஒப்பித்துப் பரலோகயாழ்வடைந்தான்.

கண்டிதேசத்தரசர் கொடுத்ததிறையைக் கொடாததினாற் குணவீரசிங்கையாரியன் தன் சாமர்த்தியத்தினாற் சில பகுதிகளில், தமிழ்க்குடிகளையிருத்தி அரசாண்டு மதுரையை அரசாண்டநாயக்கர்களுக்குச் சிலபல உதவியையுஞ் செய்தான். இவன் தன்பிதாவிலு மதிவிசேஷமாய் யாவரும் மெச்சிக்கொள்ளத்தக்கதாய் அரசியற்றி வயோதிகனாய்த் தனதுமகன் கனகசூரியசிங்கையாரியனுக்குப் பட்டத்தைச்சூட்டிச் சிவபதமடைந்தான்.

இவ்வரசன் சிங்களவருக்கு அதிக இட்டத்தைக்கொடுத்து மேன்மையாக நடத்தினதினால் அவர்கள் அகங்காரங்கொண்டு வன்னியர்களின் உதவிபெற்றுக் கலகஞ்செய்தபோது கனகசூரிய சிங்கையாரியன் இரவிலே தன்மனைவி மக்களோடு வடதேசத்துக் கோடிப்போய்விட, விசயவாகுவென்னுஞ் சிங்களவன் இத்தமிழரின் நடையுடைபாவனைகளை முற்றும்மாற்றித் தங்களைப்போலாக்கவேண்டுமென்னு மெண்ணத்தினால் இவர்களுக்கெல்லாந் தானே அரசனெனத்தலைப்பட்டுப் பதினேழுவருஷகால மரசியற்றியுங்கீழமையாதிருந்தார்கள்.

கனகசூரிய சிங்கையாரியன் தன்குமாரராகிய பரராசசேகரனையும், செகராசசேகரனையும் திருக்கோவிலூரில் இராசகுடும்பத்தவர்கள்பாற் கல்வி கற்கவைத்து யாத்திரா தரிசனஞ்செய்யும்படி மனைவியுடன் காசிபரியந்தமுள்ள திருத்தலங்கடோறும் போய்த்திரும்பிக் கோகன்ன சிவாலயத்திற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து அங்கு சிலவருடங்களாய்ச் சிவராத்திரி விரதமனுட்டித்து வருங்காலத்தில் ஒருநாள் சுவாமி கனவிலே தரிசனமாகிச் சொல்லியவண்ணம் மதுரைக்குப்போக நினைத்து விரதோத்தியாபனக் கிரியைகளைச் செய்துமுடித்துக்கொண்டு திருக்கோவிலூருக்குப்போய் அங்கே தன்பிள்ளைகள் வளர்ந்து போர்சாமர்த்தியத்திலுங் கல்விப்பயிற்சியிலுஞ் சரீரவழகிலும் அதிகரித்திருப்பக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு அளவற்ற சந்தோஷமுடையவனானான். பிதாவைக் கண்ட போதே பிள்ளைகளின்முகங்கள் சூரியனைக்கண்ட செந்தாமரைப் புஷ்பங்கள்போலாயின. பிள்ளைகளிருவரும் சத்துருவைச்செயிக்கவும், இராச்சியத்தை மீட்டுக்கொள்ளவும் செய்தபிரயத்தனங்களைக் கண்டபிதா மிகுந்தசந்தோஷத்தோடுமுத்தமிட்டு அங்குள்ள இராசகுடும்பத்தாருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்து உத்தரவ்பெற்றுக்கொண்டு பிள்ளைகளையும் மனைவியையுங்கொண்டு மதுரைக்குப்போய்ச் சேர்ந்தான். அங்குசென்றவுடனே அத்தேசத்தைப் பகுதி பகுதியாயாண்ட சிற்றரசர்களெல்லோரும் தங்கள்சேனைகளையும் படைக்கலங்களையுங் கொடுக்கத் தத்துவம் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து கோட்டைக்குள் மேற்குவாயில் வழியாய் நுழைந்தான்.

விசயவாகு காத்திராதவேளையிற் கனகசூரிய சிங்கையாரியன் நுழைந்தபோதிலும் அவன்சடுதியாய்ச் சேனைகளைச்சேர்த்துக்கொண்டு அஞ்சாநெஞ்சனாய் அணி அணியாய்வகுத்து நிற்கச் செகராசசேகரனும் பரராசசேகரனும் விசயவாகுவின் துணிவையும் அவன் செய்யும் வீரத்தையுங்கண்டு வாட்படையுடனேபோர் முனையிற் சிங்கம்போலப்பாய்ந்து சேனைகளையும் அவனையும்வாளுக்கிரையாக்கினான். அதன்பின் பரராசசேகரன் தன்பிதா அரசியற்றவும் தான் தேசவிசாரணை செய்யவும் முயன்று, விசயவாகுவின்கலகத்துக்குடன்பட்டு நின்றசிங்களவரில் அநேகரைப்பிடித்துக் கொலைசெய்வித்தான். அநேகசிங்களக்குடிகள் தங்கள்குடும்பங்களோடு கண்டிநாட்டிற்போய்க் குடியேறினபடியால், எஞ்சி நின்ற சிங்களக்குடிகள் தமிழருக்கு மிகவும்பயந்து நடந்தார்கள். பரராசசேகரன் சோழராசா வம்ஷத்திலுள்ள இராசலட்சுமியம்மாளென்னும் பெண்ணை விவாகஞ்செய்ததாற் பிதாவாகிய கனகசூரிய சிங்கையாரியன் அவனையே இராச்சியபரிபாலனஞ் செய்யும்படி முடிசூட்டிச் சிலகாலம் ஆறியிருந்து பரமபதமடைந்தான்.

## க0;—வது அதிகாரம்.

பரராசசேகரன் பொன்பற்றியூர் வேளாளமரபின் முடிதொட்ட வேளாளனென்னும் பாண்டிமளவன் குலத்திற்பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகேசரியின் மகள்வள்ளியம்மையை இரண்டாம் மனைவியாகவும், மணவக்குடியிலிருந்துவந்த மங்கத்தம்மாளென்பவளை வைப்புப் பெண்ணாகவும் வைத்திருந்தான். பரராசசேகரனுக்குப் பட்டத்துத் தேவியாகிய இராசலட்சுமியம்மாள் சிங்கவாகு பண்டாரம் என்னுமிரண்டு பிள்ளைகளையும் இரண்டாந்தேவியாகிய வள்ளியம்மை யென்பவள் பரநிருபசிங்கம்முதலிய நாலுபிள்ளைகளையும், வைப்புப்பெண்ணாகிய மங்கத்தம்மாளென்பவள் சங்கிலி என்னும் குமாரனையும் பெற்று, இராசகுடும்பம் வரவர அதிகமாய்ப்பெருகப் பரராசசேகரன் அதிவிவேகத்தோடு அரசாட்சி செலுத்திவந்தான்.

செகராசசேகரன் கல்வியறிவிற் சிறந்தவனாய் வடநாட்டிலுந் தென்னாட்டிலு மிருந்துகொண்டு சகலசாஸ்திரங்களையும் பிரபலப்படுத்தும்பொருட்டு வித்வான்கள் பலரைச்சேர்த்துச் சங்கங்கூட்டிச் சிலநூல்களைச் செய்வித்துத்தானுஞ் செகராசசேகரமென்னுஞ்சோதிடமுதலிய பலநூல்களையுஞ் செய்தான். பரநிருபசிங்கத்தின் மைத்துனனும், பரராசசேகரன் மருமகனுமாகிய அரசகேசரியென்பவன் இரகுவமிசமென்னு நூலை வடமொழியிலிருந்து புராணநடையாகப் பாடிப் புண்ணிய பூமியாகிய திருவாரூரிற் சென்று அங்குள்ள கல்விமான்கள் சமுகத்தில் அரங்கேற்றிப் பெருங் கீர்த்தியடைந்தான். இவ்வாறே யாழ்ப்பாணம் கல்வியறிவிற்சிறந்து விளங்கிற்று. பரராசசேகரனுந் தம்பியும் சிங்கையாரியப்பட்டத்தைச் சிங்கையெனச்சுருக்கித் தங்கள் பெயர்களின் முன்வைத்துச் 'சிங்கைப்பரராசசேகரன், சிங்கைச்செகராசசேகரன்' என்றெழுதிவந்தார்கள். செகராசசேகரன் பாண்டிநாடு திருவாவடுதுறை முதலிய ஆதீனங்களிலுள்ள சாஸ்திரங்களனைத்தையுமழைப்பித்து எழுதுவிக்கும்பொருட்டு அடிக்கடி சேதுவுக்குப் போக்குவரவு செய்துகொண்டிருந்தான். இராசகுமாரர் கல்வியிலும் படைப்பயிற்சியிலும் தேகவளர்ச்சியிலும் நாளுக்கு நாள் அதிகரித்து உயர்குணம்முதலிய யாவற்றிலுஞ் சிறப்புற்றிருந்தார்கள். அவர்களுக்குட் சங்கிலி என்பவன் கபட சிந்தனையுந் துர்க்குணமுங் கடுவிவேகமும் துஷ்ட நடையுமுள்ளவனாயிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கக—வது அதிகாரம்

இப்படியிருக்கும் நாளில் ஒருநாள் அகத்தியமுனிவரின் பௌத்திரருஞ், சித்தமுனிவரின் புத்திரருமாகிய சுபதிட்டமுனிவர் பரராசசேகர மகாராசனைக்காணும்படிவர, அரசன் அவ்விருஷிக்குத் தான்செய்யவேண்டிய ஆசாரவுபசாரங்கள் அனைத்தையுஞ்செய்து ஆசனத்திருத்தித் தேவரீர் என்பிதாவுக்கு வருங்காலசம்பவங்களை அறிவித்திருந்தும் அவைகள் அடியேனுக்குப்புலப்படாமையால், அவைகளையும் இனிமேலிவ்வரசாட்சிக்கு வருஞ்சம்பவங்களையுந் தெரிவிக்கவேண்டுமென்று அஞ்சலிசெய்து நின்றான். சுபதிட்டமுனிவர் அரசனைநோக்கி உன் அரசாட்சி இன்னும்சிலகாலம் சிறப்பாய் நடந்துவரும், முன்முடிசூட்டிய முகூர்த்தந் தப்பிப்போனதினால் உன்னிற்பின் முடியைச்சூட்டுதற்குப்பிள்ளைகளில்லை, என்றுசொல்ல அரசன் பட்டத்துத்தேவிபெற்றபிள்ளைகளும், இரண்டாந் தேவிபெற்றபிள்ளைகளும் இருக்கப் பிள்ளையில்லையென்ற தென்னையென, ஓ அரசனே இத்தனைபிள்ளையுண்டென்பது மெய்யே அவர்களுள் பட்டத்துத்தேவிபெற்ற மூத்தகுமாரன் விஷகடியினாலிறப்பான். இளையகுமாரன் வாளினால் வெட்டுண்டிறப்பான் உன் இரண்டாந்தேவியின் மூத்தகுமாரன் அரசியற்றி வருங்காலத்தில் உன்வைப்புப்பெண்ணின் மகன் அவனை வாய்ப்பேச்சினால் மயக்கி, அரசாட்சியைக் கவர்ந்துகொண்டு கொடுங்கோலரசு செலுத்துவதைக் குடிகள்தாங்கமாட்டாது பொறாமைகொள்வதினாலும் இரண்டாந்தேவியின் குமாரனைவெறுத்துப் பகைகொள்வதினாலும் இராச்சியம் அந்நியர்கைக்கீழாகுமென்றார். அரசன் இராச்சியம் எப்பொழுது மீளுமென்று கேட்க, இராச்சியம் முதற்பறங்கிக்காரர் கையில்கப்படும். அவர்கள் சிவாலயங்களை இடித்துத்தள்ளிக் கிறீஸ்துசமயத்தைப் பரப்பும்படி குடிகளை நெருக்கி நாற்பதுவருடகாலம் அரசாண்டபின், உலாந்தேஸ்மன்னர் பறங்கிக்காரரை உபாயமாகப்பிடித்துக் கந்தோலிக்கு வேதத்தைப்பரப்பும்படி தஞ்சமயகோவில்களைக் கட்டுவித்துச் சமயகாரியங்களில் நெருக்கிடைபண்ணி அநேகவரிகளை வைத்துக் குடிகளைவருத்தி நூற்றிருபது வருடத்துக்குமேற்பட அரசாட்சிசெய்வார் அப்பால் இங்கிலீஷ்மன்னர்கள் அவரிடக்

தில் இராச்சியத்தைப்பெற்றுச் சமயகாரியங்களிற் பலவந்தஞ்செய் யாமல் எவர்களுந் தங்களிஷ்டப்படி சிவலாயச்சேவை முதலிய வற்றையுஞ்செய்து முடிக்கத்தடைசெய்யாது நீதியாய் முற்கூற்றில் அரசாண்டு பிற்கூற்றில் சிலவிஷயங்களில் அநீதியாய் அரசுசெலுத் துவாரென்றும் தம் அரசாட்சியை இழந்துபோகுமுன்னே சிங் கையாரிய மகாராசன் கட்டுவித்த கோவிற்றிருப்பணிகளும் விசய ராசன்செய்த திருப்பணிகளும் நிறைவேற்றமாகுமேன்றும், அவ் வாலயங்களிலே அநேகர் புகழைநாட்டிக்கொள்வதற்காகக் கட் டத்தொடங்கி நிலையாதுவறிப்போவார்களென்றும் அவ்வாலயங்க ளில் வடமதில் வாயிற்பாதுகாப்பாய் நின்ற சிவாலயமொன்று மாத்திரம் சிவகடாட்சம்பெற்ற ஒருவனால் முதல் முதல் நிறைவே றுமென்றும் மற்ற ஆலயங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நிறைவேற் றமாகுமென்றும், எல்லாவாலயங்களிலும் அதிவிசேஷமான கை லாயநாதர் கோவிலும் கைலைநாயகியம்மன்கோவிலும், கைலைவிநா யகர்கோவிலும் முன்னிருந்தபடி கட்டியெழுப்புதற்கு கைலைநாத ரால் பூரணகடாட்சம் பெற்றவர்களே முயல்வார்களென்றும் அப் பொழுது அவர்களிடத்தில் வெளிப்பட்டுவரும் வாலசிங்கமென்ப வன்கையில் இலங்கை அரசாட்சியை ஒப்பித்துவிட்டுத் தங்கள் நாட்டுக்குப்போவார்களென்றும் கேதாபுரியை அரசாளும் பூலோ கசிங்க சக்கிரவர்த்தியின் மகன் ஆரிய சிங்கசக்கிரவர்த்தி கன்னி யாகுமரிதொடங்கி இமயமலைபரியந்தமுள்ள ஐம்பத்தாறு தேசங் களையும் ஒரு குடைக்கீழ் அரசாளுவானென்றும், உன்சந்ததியா ருக்குள் இனி ஒருபோதும் அரசாட்சி வருவதில்லையென்றுஞ் சொல்லிச் சுபதிட்டமுனி எழுந்துபோனார்.

## கஉ—வது அதிகாரம்.

இப்படி உறுதிவாக்காக இருஷி சொன்னவைகளை நம்பி யும் நம்பாமலுமிருக்கச், சிலகாலத்தில் மூத்தகுமாரன் சடுதிமர ணமடையத், தன் இளையகுமாரனாகிய பண்டாரமென்பவனுக்குப் பட்டஞ்சூட்டிவைத்துத் தான்யாத்திராதரிசனஞ்செய்யும்படி பரி வாரங்களுடனே கும்பகோணத்திற்குச் செல்ல, அங்கு சோழ தேசத்தரசன் பட்டத்துத்தேவியோடு வந்திருக்கக்கண்டு சந்தோ

ஷங் கொண்டாடிக்கொண்டிருந்தான். இராசாவின் மூத்தகுமாரனைச் சங்கிலி நஞ்சூட்டிக்கொன்றானென்பது ஒருவருக்குந்தெரியாமற்போயிற்று, அங்குசங்கிலி செய்தகுழப்பத்தினால் அவனையும் பரராசசேகரனையும் பரிவாரங்களையும் சோழராசன் பிடித்துச் சிறையில்வைக்கச் சேனைகளுடன் பின்னாகப்போன. பரநிருபசிங்கம் அதைக்கேள்விப்பட்டு அட்டகாசஞ்செய்து யுத்தஞ்செய்கையிற் சடுதிமரணமடையத்தக்க மூன்று காயங்கள் பட்டும் அதைக் கவனியாது வீராவேஷங்கொண்டு போராடிச் சோழராசனைச்சிறையிலிட்டு அவன்சேனைகளைத் தன்வசப்படுத்திக்கொண்டு தகப்பன்முதலிய சகலரையுஞ்சிறைச்சாலையினின்று நீக்கி மூன்றுமாதமங்கிருந்து காயங்களையுமாற்றினான். அப்பொழுது சோழராசன் தன் இராச்சியத்தைத் தான் திறைதந்து ஆளுகிறேனென்று கேட்டுக்கொள்ள அதற்கேற்றபிணைவாங்கிக்கொண்டு இராச்சியத்தை ஒப்பித்துவிட்டு யாழ்ப்பாணத்திற்குத் திரும்பினான். யாழ்ப்பாணம் வந்தவுடன் பரராசசேகரன் பரநிருபசிங்கத்தை யழைத்துக் கனவரிசைகள்கொடுத்து, மிகவும் கனப்படுத்திக் கள்ளியங்காடு, அச்சுவேலி, சண்டிலிப்பாய், அராலி, உடுப்பிட்டி, மல்லாகம், கச்சாய் முதலிய ஏழுகிராமங்களையுஞ் சொந்தமாகச் செப்புத்தகட்டினாற் பட்டயமெழுதிக்கொடுத்து அரசாட்சியின் இரண்டாமதிகாரமுடையவனாகவுமாக்கினான். அது சங்கிலிக்கு மனவருத்தமாயிருந்தும் வெளிக்குக் காட்டாமலடக்கிக்கொண்டான்.

இப்படியிருக்குங்காலத்தில் கண்டிராசன் மனைவிக்கிருந்த வயிற்றுவலி அங்குள்ளபண்டிதரால் நீக்கமுடியாமைகண்டு அவ்வரசன் பரராசசேகரனுக்குப் பாசுரமனுப்ப பரராசசேகரன் பரநிருபசிங்கத்தை நோக்கி உத்தரவுசெய்யப் பரநிருபசிங்கம் போயவ்வியாதியை ஒரே ஒளஷதத்தினால் மாற்றிவரவேண்டுமென்னும் பேராசையினால் தன்சாமர்த்தியத்தைக்காட்டி அந்நோயை நீக்க அரசன் தான்செய்யவேண்டிய உபகாரமனைத்தையும் செய்து அனுப்பிவைத்தான். ஒருநாள் பண்டாரமென்னும் இளவரசன் நந்தனவனத்திற் சென்று வேட்டையாடிவருகையிற் சங்கிலியென்பவன் மறைவில் நின்று வாளினால்வெட்டிக்கொலைசெய்து இராச்சியந் தன்னுடையதென்று முன்னிற்கப் பரராசசேகரன் தன்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிரையும் சிதைப்பானென்ற பயத்தினால் ஒன்றும்பேசாமல் மவுனமாய் ஒதுங்கிவிட்டுப் பரநிருபசிங்கம் இவனுக்கு இராச்சியம் எப்படிக்கிடைக்குமென்றுசொல்லித் தன்பரிசனங்களோடு யுத்தத்திற்குவெளிப்பட்டான். அதுகண்டு சங்கிலி பரநிருபனிடத்திற்குப் போயண்ணே நாங்களிருவரும் சரிவந்தபங்குக்காரர்களாயிருந்துகொண்டு ஒருவரையொருவர் வதைத்துக்கொல்லும் பட்சத்தில் வன்னியர்களிராச்சியத்தைக் கவர்ந்துகொள்ளுவாராகையால் இப்போதைக்கு நான் இராசாவாகவும் நீர் மந்திரியாகவுமிருந்து எங்கள்பிதாவினால் உமக்குக்கிடைத்த அதிகாரத்தை உமதுமகன் பரராசசிங்கனுக்குக் கொடுத்து வேறு ஒழுங்குகள்பண்ணும்வரையில் இராச்சியவருமானங்களை இருவரும் பகிர்ந்துகொண்டு ஒத்திருந்தால் எவ்வளவோ காரியங்கள் செய்துமுடிக்கலாமே யென்றுசொல்லி வாய்ப்பேச்சினால் மயக்கப் பரநிருபசிங்கன் இசைந்து மந்திரியுத்தியோகத்திற்கு ஏற்பட்டான், சிலகாலத்துக்குச் சங்கிலிதன்சேனைகளை வசப்படுத்திக்கொண்டு பரநிருபசிங்கத்துக்குக் கொடுத்துவந்தவருமானப்பங்கையும் தேசவதிகாரத்தலைமையையும் நிறுத்தி மந்திரி உத்தியோகச் சம்பளத்தைமாத்திரங் கொடுக்கப் பரநிருபசிங்கம் சோழராசனுக்குப் பாசுரமெழுதி இன்றுமுதலாகத் திறைகொடுக்கவேண்டாமென்று தடைசெய்தான். அந்த நாட்களிற் பறங்கிக்காறர் வியாபாரஞ்செய்வதற்கு வரத்துப்போக்காயிருக்கையில் அவர்கள்செய்த உபதேசத்தினாற் சில எளியசனங்கள் அவர்கள்மயக்கத்தினாற் சார்ந்திருக்கிறார்களென்பதைச் சங்கிலிராசன் கேள்விப்பட்டு ஆண், பெண், குழந்தையென்னும்பேதம் பாராமல் வெட்டுவித்ததுமன்றி அங்கிருந்த புத்தசமயக்கோவில்களையுமிடிப்பித்துச் சிங்களக்குடிகளையும் முழுதாகத் துரத்திவிட அவர்கள் போய்க்கண்டிநாட்டிலும் வன்னிக்காடுகளிலும் ஒதுங்கிவிட்டார்கள். அதுமுதல் யாழ்ப்பாணத்தில் சிங்களவரிருந்ததில்லை முன்விசயவாகுவின் கீழ்போர்ச் சேவகராயிருந்த யாவகச்சேனையிலே கொலைக்கும் தண்டனைக்கும் தப்பியிருந்த சிலயாவகக்குடிகள் சாவாங்கோட்டையிலும் சாவகச்சேரியிலும் இருக்கக்கண்டு அவர்களையுந் துரத்திவிட்டான்.

## ௧௩-வது அதிகாரம்

அக்காலத்தில் பத்தொன்பது வன்னியர்கள் தென்னாட்டிலிருந்து மரக்கலமேறிவருங்கையில் நெடுந்தீவுக்கடலிலமிழ்ந்திப் போக வேறுமரக்கலங்களில் அதிகதிரவியத்தோடு வந்திறங்கி அவர்கள்மனைவியரும் கரைப்பாட்டு வன்னியனும் அவன் மனைவியம்மைச்சிநாச்சியாரும் கந்தரோடைக்குறிச்சியில் வீடுகட்டிக் கொண்டிருந்து தங்கள் வன்னியர்கள் வரும்போது கூட்டிக் கொண்டு வன்னிநாட்டுக்குப் போகலாமென்றிருக்க அவ்வன்னியர்கள் நெடுங்காலமாய் வரக்காணாமையால் வன்னிச்சிகளாங்காங்கேவீடுகட்டிக்கொண்டு தங்கள்தலைவரின் வரவை எதிர்பார்த்து வேலைக்காரரின் உதவிபெற்றிருந்தார்கள். அப்போது கரைப்பிட்டிவன்னியன் தன் கீழ்ச்சேவகராயிருந்த அறுபதுகத்திக்காரர் நம்பிகளுள் திலநம்பியின் மகளைக் கற்பழித்ததினால் அவள் தகப்பன்மறுநாள் வன்னியன் தெய்வவழிபாடு செய்துகொண்டு நிற்கையிற் கொலைசெய்துவிட அவன்மனைவி அம்மைச்சிநாச்சியார் வயல்வெளியிலோடித்திரிந்து தான் எங்கேபோகலாமென்று அறியாதவளாய், மயங்கித்தற்கொலைசெய்திறந்தாள். நம்பி-தலைவனும் இராசவிசாரணைக்குள்ளாகிக் கொலையுண்டிறக்க, அவ்வன்னியன் கையிலிருந்த திரவியங்களெல்லாஞ் சங்கிலி இராசனுக்காயின. மற்ற நம்பிகள் சீவனத்துக்கு வழியில்லாததினாற் சாணாக்கும்பமென்னும் அயற்கிராமத்திருந்த சாணாகருக்குப் பணிவிடைக்காரராகிப் பனையேறுந்தொழில்பயின்று, பின் அத்தொழிலைச்சொந்தமாக்கிக்கொண்டனர். இவர்கள் தங்கள் குலத்தைவிட்டு நளுவினதால் அவர்களின் குலம் நளுவரென்றாய், இக்காலத்தில் நளவரென்றாயிற்று.

இராமநாதபுரத்திலிருந்து சிலமறவர் வந்து, மறவன்புலவிற் குடியிருந்து, உள்நாடுகளிற் பெருங்களவு நடத்தினதினால் அவர்களில் சிலரைச் சங்கிலிராசன் பிடித்துக்கொலை செய்விக்க மிச்சமானகுடிகள் பன்றியந்தாள் என்னுங்காட்டிற் போய்க்குடியிருந்தார்கள். அந்நாட்களில் வடமராட்சிப் பகுதிகளிலிருந்த குடிசனங்களுக்குள்ளே ஓர் பெருங் கலகமுண்டுபட அக்கலகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைச்சங்கிலிராசன் அவ்விடத்திற்குப்போய் அடக்கிவருகையில், இருபாலை எல்லை சமீபித்தவுடனே வாத்தியத்தொனியை நிலைநிறுத்த இராசன் நிறுத்தினதற்குக்காரணமென்னென்று விசாரிக்க, இருபாலைபரநிருபசிங்கத்துக்குரிய இடமாயிருப்பதால் உத்தரவின்றித் தொனிசெய்யப் பயந்துவிட்டோமென்றார்கள். அதனாற் சங்கிலி இராசன் பரநிருபசிங்கத்துக்குரிய கள்ளியங்காடுமுதலிய ஏழுகிராமங்களையுங் கவர்ந்துகொள்ள நினைத்துஞ் செப்புப்பட்டயம், முடி, செங்கோல் முதலியவை அவன்கையிலிருக்கத் தான் அதிகாரஞ் செய்துவந்தமையாலும், வேறுமுடிதேடிச் சூட்டிக்கொண்டாற் கலகம்நேரிடுமென்பதினாலும் பயந்து விடுத்தனன்.

## கச—வது அதிகாரம்.

வன்னியன் அவ்வூராருடன் கொண்டாடித்திரிவதைச் சங்கிலி இராசனறிந்து தான் நிறுத்திவைத்த வருமானபங்கைப் பரநிருபசிங்கத்துக்கும், கிராம அதிகாரத்தைப் பராசசிங்கத்துக்கும் கொடுக்கச்சம்மதித்து சமாதானப்படுத்திக்கொண்டு, பரநிருபசிங்கத்துக்கும் மகனுக்குமுள்ள இராசநாமங்களை மாற்றி வேறு பட்டத்தைச் சூட்டிவைக்க வேண்டுமென்று ஆலோசித்து வடதிசைவேளாளரின் முதலிப்பட்டத்தை அவர்கள் பெயரினிறுதியிற் சேர்த்துப் பரநிருபசிங்கமுதலி பராசசிங்கமுதலி எனத்தான் எழுதிவைத்துக் கொண்டதுமல்லாமல், ஒருநாள் பராசசிங்கத்தை அழைத்து உன்பிதாவுக்கு முனக்குஞ் சகலகிராமங்களும் மேலதிகாரங்களும் கிடைத்திருக்கின்றது உங்களிற்பின் உங்கள் சந்ததியாருக்கும் தலைமுறை தலைமுறையாக இவ்வதிகாரம் நிலையாக நிற்குமாகையால் உங்கள் சந்ததியாருக்கும் ஒருபட்டஞ்சூட்டிவைக்க விரும்புகிறேனென்றான். அதென்னவென்று கேட்க மடப்பம் ஐஞ்ஞூறு கிராமத்திற்குத் தலைமைபெற்றது. அளித்தல், காத்தல்ஆகவே மடப்பத்தை அளிப்பது மடப்பள்ளியென்பதாமென்றான். அதைப்பராசசிங்கந் தன்பிதாவுக்கு அறிவிக்க பிதா அவன் எப்படிப் பிதற்றினாலும் பிதற்றட்டும் அவரவரிருந்து அறியலாம் உன்னலுவலைப்பாரென்றான். அதன்பின் சங்கிலி இராசன் சேனைகளையும் ஆயுதங்களையும் வரவர அதிகமாகச் சேர்த்துக்கொண்டிருக்கும் நிலவரத்தைப் பராசசேகரன்கண்டு, தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிடத்திலிருந்த திரவியங்களை யானைகளிலேற்றி இராவிராவாய்ப் பிரயாணஞ்செய்து வன்னிநாட்டையடைந்து தங்கள் முன்னோர் திரவியஞ்சேமித்துவைத்த குகையிலே தானும் முடிசெங்கோல் முதலிய யாவற்றையுஞ்சேமித்து உன்மத்த வயிரவனைக் காவலாக வைத்துத் தன் மாளிகையில் வந்திருக்குங்காலத்தில் ஒருவரோடொருவர் வெளிக்குச்சந்தோஷமாயும்; உள்ளெண்ணத்தில் ஒருவரையொருவர் சதிப்பவர்களாயுமிருந்தார்கள். சங்கிலியின்கொடுமை வரவர அதிகரித்தது.

### கரு—வது அதிகாரம்

மன்னாரிற் கிறீஸ்துசமயத்திற் சேர்ந்தசனங்களைச் சங்கிலி இராசன் வெட்டுவித்தபடியாற் சவேரியாரென்னுங் கிறீஸ்துவக் குரு பறங்கிக்காரரை யாழ்ப்பாணத்திலூடாடப் பண்ணவும் தன் சமயத்தைப்பரப்பவும் அவாவுள்ளவனாயிருக்கையிற் பரநிருபசிங்கமுஞ் சங்கிலியும் பகையாயிருப்பதையறிந்து எழுத்து மூலமாய்க் கொண்டாடிக்கொள்ள, அவன் இராச்சிய அதிகாரந்தனக்குளினிமேல் ஒருபோதிலும் வரமாட்டாதென்றுகண்டு இராச்சியத்தைப் பறித்து அந்நிய இராசனுக்குக் கொடுக்க எண்ணங்கொண்டிருந்தான். சங்கிலி இராசன் தன் மந்திரிமாருள் ஒருவனாகிய அப்பா என்பவன் மகள் மிகவுஞ்சவுந்தரியாயிருந்ததினால் அவள்பேரில் மோகங்கொண்டு கற்பழிக்கத்துணிய அவளின் பிதா பரநிருபசிங்கமிடத்தில் வந்து தன் மானத்தைக் காப்பாற்றித்தரவேண்டுமென்று அழ, அதற்குப் பரநிருபசிங்கம் பயப்படாதே நான் காப்பாற்றித்தருவேனென்று திடஞ்சொல்லி உடனே ஒரு காகிதமெழுதி ஊர்காவற்றுறையில் காக்கைவன்னியன் வந்திறங்கி நிற்கிறான் அவனிடத்திற் கொண்டுபோய்க்கொடுவென்றுசொல்லக் கொண்டுபோய்க்கொடுத்த மாத்திரத்தில் அவன் வாசித்துப்பார்த்துக்கொண்டு நீ உன்மகளைப் பரநிருபசிங்கம்வீட்டில் அடைக்கலமாகவைத்துவிட்டு உன் அலுவலைப்பார் நான்சற்றிடம்போய்வந்து எல்லாம்பார்த்துக்கொள்ளுவேனென்று சொல்லிப் பரநிருபசிங்கத்துக்குப் பதிலோலையும் எழுதிக் கொடுத்தனுப்பிவிட்டு தரங்கம்பாடிக்குப்போய்ப் பறங்கிக்காரரைக்கண்டு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களைப் பிடித்துத்தருவேன் வாருங்களென்று நம்பும்படி சத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியம்பண்ணிக் கொடுக்கப் பறங்கிக்காரர் வியாபாரஞ்செய்பவர்களைப்போற் பண்ணைத்துறையில் வந்திறங்கிச் சங்கிலி இராசனிடத்திற்குப்போய்த் தங்களுக்குயாழ்ப்பாணத்தில் வியாபாரஞ்செய்ய உத்தரவுதரவேண்டுமென்று கேட்கச், சங்கிலி இராசன் சம்மதியாது மறுக்கப்.பரநிருபசிங்கமும் மந்திரிமாரும் ஒருமித்து நின்று இப்படிப்பட்டவியாபாரம் இந்நாட்டுக்கு ஆவசியந்தேவையென்று மேன்மேலுஞ் சொல்லச், சங்கிலி இராசன் ஒருவாறுடன்பட்டுப் பறங்கிக்காரரை நோக்கி! நீங்கள் பகற்காலத்தன்றி இராக்காலத்தில் உள்ளூருக்குள் நில்லாமல் உங்கள்தோணிகளில்தங்கி வியாபாரஞ்செய்துகொள்ளுங்கள், என்று உத்தரவுகொடுக்கப் பெற்றதினுல் அவர்கள்அவ்வாறு சிலகாலம் வியாபாரத்தைநடாத்தி அப்பாற்சங்கிலி இராசனுக்கு விலையுயர்ந்த நவரத்தினங்களையும். பட்டுப்புடைவைகளையும், வேறுநூதனசாமான்களையும் கொடுத்து நன்முகம்பெற்றுக்கொண்டு மகாராசனே நாங்கள் தோணிகளிலிருந்து சமயல். போசனம், நித்திரைமுதலியவற்றைச் செய்வது மிகவருத்தமாகையாற் கடலோரத்தில் தங்கியிருக்கவும் வியாபாரப்பொருள்கள் வைத்துக்கொள்ளவும் ஒரு வீடுகட்டும்பொருட்டு உத்தரவு தந்துதவவேண்டுமென்று கேட்கச் சங்கிலி இராசன் மனமிரங்கிக்கொண்டு கடலோரத்தில் ஒருசிறுவீடுகட்டிக்கொள்ளுங்களென்று உத்தரவுகொடுத்தான். அவ்வுத்தரவைச் சாட்டாகக்கொண்டு பறங்கிகள் மண்ணினுல் ஒரு பெருங்கோட்டையைக் கட்டி அதிலே சேனைகளையும் ஆயுதங்களையும் நிறைத்து வைத்திருந்தார்கள். அவ்விடம் பெருங்காடாயிருந்ததினுல் மனிதர்போக்குவரவு மிகக்குறைவாயிருந்தது. அதனுற் சங்கிலி இராசனுக்கு அச்செய்திகள் ஒன்றுந்தெரியாமற்போயிற்று.

## ௧௬—வது அதிகாரம்

சிலகாலத்தின்பின் சங்கிலி இராசன் அந்நாட்டிற்சென்று வேட்டையாடி அங்குமிங்குமலைந்து வருகையிற் கோட்டைகொத்தளங்கள் கொடிகள்சேனைகள் ஆயுதங்கள் முதலியபாவுமிருப்பக் கண்டு, நீங்கள் இவ்வாறு செய்தற்பொருட்டு உத்தரவுகொடுத்ததாரென்முன், நீர்தான் என்ருர்கள். இவன் அதிககோபங்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை முதலியவற்றை இடித்துத்தள்ளக்கருதிப் பறங்கிகளோடு முரட்டுத்தனஞ்செய்தும், அவர்கள் இடங்கொடாது மனவலிமையோடு நின்றதினால் யுத்தமுண்டாகவேதுவாயிற்று. அப்பொழுது யுத்தம் நடத்துதற்கு நல்லூரிலே வீரமாகாளியம்மன் கோவிலுக்கு முன்னாயிருந்த வெளியைப் போர்க்களமாக நியமித்துக் கொண்டுகுறித்த நாளிலே பறங்கிகள் துப்பாக்கி முதலியவற்றோடு அணி அணியாகவும் தமிழர் வாள்முதலிய படைக்கலங்களோடு அணி அணியாகவும் நின்று யுத்தஞ்செய்தார்கள் இருதிறத்துப்படை ஒழுங்கும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருந்ததினாற் சரியான யுத்தம் நடக்கவில்லை. பறங்கிகள் ஒருதுப்பாக்கியை நீட்டி இலக்குப்பிடிக்க, மற்றொருவன் பற்றுவாய்க்கு நெருப்பு வைக்கச், சிலமுறைகளில் வெடிதீர்ந்து சனங்களைச்சேதப்படுத்தியும், சிலமுறைகளில் வெடிதீராதிருக்கத் தமிழர் வாள்முதலியவற்றால் அஞ்சாமற் பறங்கிச்சேனைகளை வெட்டியும், இளைத்துப்போகச் சங்கிலியும் அவனுக்குத் துணைவீரராயிருந்த நானூறு பராக்கிரமசாலிகளும் உள்ளணியாய்ப்பாய்ந்து கடும்போர்செய்ய ஏழாநாட்போரிலே பறங்கிகள் இனி என்னசெய்வோம், சங்கிலி இராசன்கையில் அகப்படுவதன்றி வேறு கதியில்லையென்று மனந்தளர்ந்து நிற்குஞ்சமயத்திற் தரங்கம்பாடியினின்று தங்களுக்குத் துணைச்சேனை வந்ததைக்கண்டு மனத்தைரியங்கொண்டு, மறுபடியுஞ் சண்டைசெய்யத்தொடங்கியும் துப்பாக்கிகள் நெருப்புப்பற்றாது தாமதப்பட்டதினாற், பறங்கிகளும் வாட்படைகொண்டு போர்செய்தார்கள். இருதிறத்துச் சேனைகளும் விறுவிறுப்போடு போர்செய்கையிற் சில பறங்கிகள் ஒதுங்கி மறைவினின்று துப்பாக்கிகளாற் சுடத்தமிழர் கவண்கல் முதலியவற்றால் அவ்வுபாயத்தைநீக்கினர். இவ்வாறு ஒன்பது நாளும் போர்செய்து பத்தாநாள் சங்கிலிராசன் பரநிருபசிங்கத்தையும், மந்திரிமாரையும்பார்த்து நீங்கள் ஒருமுயற்சியும் செய்யாதிருப்பதென்னை யென அதற்குப் பரநிருபசிங்கம் நாங்கள்பயின்றிராத புதுப்போராயிருப்பதினால் எங்கள் சாமர்த்தியமிதிலே செல்லாதென்றான். அரசன் சிரித்து நானும் உங்களைப்போலவே இதற்குமுன் இவ்வித போரைக்கண்டிலேன், நான்செய்யுமாதிரியாய் நீங்களுஞ்செய்யுங்களென்று சொல்லிப் பறங்கிச்சேனையின் நடுவே, மான்கூட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற் புலிபாய்ந்தாற்போலப் பாய்ந்து ஆயிரத்தெழுநூறு பேருக்கு மேற்படவெட்டினான். அன்றுபோய் மற்றநாளாகிய பதினெரா நாள் இருதிறத்துச்சேனைகளும் எதிர்த்து யுத்தஞ்செய்யத் தமிழ்ச் சேனைகள் இளைத்துப்போனதைக்கண்டு சங்கிலி இராசன் துணை வீரருடன் யானைக்கூட்டத்திற் சிங்கம்பாய்ந்தாற்போலப் பறங்கிச் சேனைக்குட் புகுந்து இரண்டாயிரத்து நாநூறு சனங்களையுஞ்சே னைத்தலைவனையும்வெட்ட நின்றபறங்கிகள் முறிந்து கெட்டோடி னார்கள். தமிழ் சேனைகள் துரத்திக்கொண்டுபோக மேற்குத்தி சையை நோக்கிக் காட்டுக்குட்சென்று, கோட்டைக்குட்புகச் சங் கிலி இராசன் சகலரையும் வெட்டியெறிந்து கோட்டையுமிடித் துப்பாவி அங்குள்ள திரவியங்களையும் எடுத்துக்கொண்டு தனது அரண்மனைக்குத்திரும்பினான். சேனைகள் போர்வெற்றியின் சந் தோஷத்தினால் மது உண்டு வெறியினால் மயங்கி ஒருவரை ஒருவர் அடிக்கவும் வையவுந் தலைப்பட்டதினாற் பெருங்கலகமுண்டாக அதை அடக்கிவரும்படி மந்திரியிலொருவனை அனுப்பியும் அடங் காததினால் அரசன் மிகுந்தகோபத்தோடு சென்று அங்கு சமைத் தபோசனங்களெல்லாவற்றையுஞ் சேனைத்தலைவனுமில்லாதிருக்க வெட்டிப்புதைப்பித்ததினாற் சேனைகள் ஆறாதவருத்தத்தை அடைந் தார்கள். சேனைத்தலைவன் தனது நித்தியகடனை முடித்தற்பொரு ட்டுவீரமாகாளியம்மன் கொவிலில் தங்கிநின்றான்.

## ௧௧—வது அதிகாரம்

பறங்கிகள் போரில் இறந்ததையும், தோற்றோடினதையும் தாங்கள் அந்தரங்கத்திற்செய்த உதவிகள் வாயாமற்போனதை யுங் குறித்துப்பரநிருபசிங்கம் விசனமடைந்து, பறங்கிகளுக்காக வெளிவெளியாகநின்று உதவிசெய்யவேண்டுமெனக் கருதிக் காக் கைவன்னியனை தனக்கு உதவிசெய்யும்படி ஓலையெழுதியனுப்பி னான். வன்னியன் கையில் ஓலைசேருமுன் பறங்கிகள் ஊர்காவற்று றைக்குப்போய் வன்னியனைப்பிடித்து உன்னைநம்பிப் போரில் ஏற் பட்டுப் பதினாலாயிரத்துக்கு மேற்பட்ட சனங்களை இறக்கக்கொ டுத்தோமென்றார்கள். நீ எங்களை அழைத்துவந்து ஒரு உதவி யுஞ் செய்யாததினால் எங்களுக்கு அதிக நட்டங்கள் வந்திருக்கின் றது. இந்தமோசஞ்செய்ததினால் உன்னைக்கொலைசெய்வதே எங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தீர்மானமென்று நெருங்கிய சமயத்திற் பரநிருபசிங்கம் எழுதிய ஓலையும் வந்துசேர்ந்தது. அதைவாசித்தபொழுது பறங்கிகள்சந்தோஷங்கொள்ளக், காக்கைவன்னியன் பரநிருபசிங்கம் எழுதியவைகளுக்கு உடன்பட்டுப் பறங்கிகளை மறுபடியும் போர்செய்தற்பொருட்டு அணிவகுத்துக் காலமேவரும்படி சொல்லி அன்றிரவில் நல்லூருக்குப்போய் பரநிருபசிங்கத்தைக் கண்டு ஆலோசனை செய்து அங்கு ஓர் இடத்தில் மறைந்திருந்தான். மறுநாட்காலையில்வன்னியன் சொற்படி, பறங்கிகள் அணிவகுத்துவந்து மேற்குவாசலை வளைத்துக்கொள்ளச் சங்கிலி இராசன் இதையறிந்து சேனைகளைத்திரட்டி மேற்குவாசற்புறத்தே அணிபணியாய்த் துணைவீரருடன் தைரியங்கொண்டுநின்றான். அப்பொழுது காக்கைவன்னியன், சேனைகளுக்குள் நுழைந்து சமீபத்தினிற்கப் பரநிருபசிங்கமவனோடு யோசித்தபடியே வாய்ச்சாமர்த்தியமுள்ள ஒருவன் போர்க்காரியத்தின் அந்தரங்கஞ் சொல்லும்படி உம்மை இன்னவிடத்தில் தேடிக்கொண்டு நிற்கிறான் என்று வேறொருவனைச் சேனாபதியிடமனுப்பிச் சொல்லுவிக்கச் சேனாபதி அதையறிந்து வரும்படி உடனே ஆவனுடன்சொல்ல, அங்குநின்றவன் தன் வாய்ச்சாதுரியத்தினால் மனதைக் கவரத்தக்கபேச்சுகள் வருவித்துப்பேசித் தடுத்துநிற்குஞ் சமயத்தையறிந்து, வன்னியன்தன் உடுப்பைமாற்றிச் சுயகோலத்தோடு வெளிப்பட்டான். அரசன் அவனைக்கண்டு எதிர்கொண்டோடி என்மேல் தயைகூர்ந்து உதவிசெய்வதற்கு இப்பொழுதுதான் வந்தாயோவென்று சொல்லிக் கட்டிமுத்தமிட இவனுங்கட்டி முத்தமிடுபவன்போற் பிடித்தபிடி விடாமற் பிடித்துக்கொண்டான். இருவரும் ஒருவரோடொருவர் சேர்ந்து விழுந்துபுரண்டு நிற்குஞ்சமயத்திற் பறங்கிச்சேனைகள் கிட்டிவந்ததினாற், சேனாபதி இல்லாதிருந்துந் தமிழ்ச்சேனைகள் தங்கள் ஆயுதங்களோடு யுத்தத்திற்குச்செல்லப் பரநிருபசிங்கம் அவர்களைநோக்கிச், சேனாபதி உத்தரவின்றி ஒருவரும் ஆயுதந்தொடப்படாதென்று தடுக்கச் சேனைகள் எங்களுக்கு ஆயுதமெடுக்க உத்தரவில்லையேயென்று பரிதபித்து ஓலமிட்டுக்கொண்டு, அரசனையும் வன்னியனையும் அந்தநிலையில் விட்டுப்பிரிந்து ஓடிப்போனார்கள். பறங்கிகள் சங்கிலி இராசனைப்பிடித்து யாதொருத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையுமின்றி விலங்கிட்டுச், சேனுபதியை வாளினுற் கொலையுஞ் செய்து, கோட்டையையும் ஒப்புக்கொண்டார்கள்.

## கஅ—வது அதிகாரம்

உடனே பராசசேகரன் வன்னிக்காட்டுக்கு ஒழித்தோடிப்போகப் பறங்கிகள் அவ்வரசனைப்பிடித்துத் தருபவர்களுக்கு ரூபா 25000 உபகாரமாய்க் கொடுத்துவிடுகிறேமென்று பறைசாற்றுவிக்கச், சங்கிலி இராசனின் மந்திரியாகிய பிராமணனொருவன் அரசன்போன குறிப்பையறிந்து, இளநீரும் எலுமிச்சம்பழமுங்கொண்டு, வன்னிக்காட்டிற்சென்று எங்குந்தேடியுங்காணுது வருகையில் அரசன் எதிர்கொள்ள உபசாரவார்த்தைசொல்லிப் பிராமணன் வாளினுல் இளநீரைத்திறந்து எலுமிச்சம்பழத்தை அறுத்துப்பிழிந்து கொடுத்தான். அவன் குனிந்துநின்று ஆயாசத்தோடுகுடிக்கச் சண்டாளப்பிராமணன் அவன் சிரசைக்கொய்துவந்து பறங்கிகள் கையிற்கொடுக்கப், பறங்கிகள் அரசனைப்பிடித்துத் தருபவர்களுக்குபகாரங் கொடுப்போமென்று கூறியிருக்க, நீ அரசனைக் கொன்றதுமன்றி அவனுக்குச்செய்த நன்றியையும் அழித்ததினுல் உன்னையும் அப்படியே செய்யவேண்டுமென்று கொலைசெய்தார்கள்.

பறங்கி இராசன், சங்கிலி இராசனை நீதாசனத்தின்கண் நிறுத்தி விழங்கியபொழுது, அவன் முடிசூட்டி அரசுசெய்யாததினுலும் பிதா உயிருடனிருக்கப் பிதாவின் சம்மதத்துக்கு விரோதமாய்க் கலகத்தை உண்டாக்கினதினுலும், முடிக்குரிய இராசகுமாரனை அநியாயமாய்க் கொலைசெய்த பாதகத்தினுலும் நீதிதவறி அநேககொடுமைகளைச் செய்ததினுலும் அவனைக்கொலைசெய்யும்படி உத்தரவுசெய்தான். இதுசெய்தியைக் கேட்டவுடனே அவன்மனைவி தற்கொலைபுரிந்திறக்கப் பிள்ளைகளைத் தரங்கம்பாடிக்கு அனுப்பிக் காக்கைவன்னியனுக்குச் சகல உபகாரங்களுஞ் செய்தனுப்பினுன்.

பறங்கிகள் இராச்சியத்தை ஒப்புக்கொண்டு நல்லூரிலிருந்தார்கள். காலயுத்தி வருஷம் ஆனிமாதம் யாழ்ப்பாணம் பறங்கி அரசாட்சிக்குள்ளாயிற்று. பறங்கிகள் நல்லூரிலிருந்துகொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கோட்டைமதிலை இடிப்பித்துக் கற்களைக்கொண்டுபோய் இடிபட்டிருந்த தங்கள் கோட்டையை மறுபடி கற்கோட்டையாகக் கட்டி, அதன்கீழ்ப்புறத்தில் வீடுகளையும் அரசாட்சிமண்டபங்களையும் கட்டுவித்துச் சுற்றுப்புறங்களிற் காடுகளையும் வெட்டுவித்துச் சமீபத்திற்பிரசைகள் குடியிருக்கவசதியும் பண்ணினார்கள். பரநிருபசிங்கன் தங்களுக்கு அரசாட்சிகிடைக்கும்படி செய்த உதவிக்காக அவனுக்குள் ஏழுகிராமங்களுடன் நல்லூர், மாதகல் என்னும் இரண்டு கிராமங்களையும் பெருந்தொகையான திரவியங்களையும் முன்னிருந்தபடி மந்திரி உத்தியோகத்தையும், பராசசிங்கத்துக்குக் கிராம அதிகாரத்தையுங் கொடுத்து இருவரையுங் கனப்படுத்தி வந்தார்கள். அவர்களாற் பறங்கிகளின் அரசாட்சி பெலத்துக்கொள்ளச் சமயகாரியங்களிற் கைவிட்டுச் சிவாலயங்களை இடித்துக் கிறீஸ்துசமயத்தைப் பரப்பத்துணிந்து நல்லூரிலும் கீரிமலையிலும் உள்ள சிலதலங்கள் மாத்திரம் பரநிருபசிங்கமிருக்கிறவரைக்கும் வழங்கிவந்தபடி வழங்கலாமென்று உத்தரவுசெய்தார்கள் அவர்கள் அரசாட்சி தொடங்கி ஒன்பதாம்வருஷத்திற் பரநிருபசிங்கம் இறக்க, அவனுக்குச் சைவசமயப்படி சடங்குகள் செய்யப்பட்டது.

## கக—வது அதிகாரம்

பராசசிங்கத்தை அரசாட்சி ஆலோசனைத்தலைவனுக்கிச் சங்கிலி இராசன் எழுதிவைத்தபடியே அவனுக்குப் பராசசிங்கமுதலி என்றும், அவன் குலத்துக்கு மடப்பளியென்றும் பட்டஞ் சூட்டிப், பிதாவை நடத்தினதுபோற் கனப்படுத்தி வந்தார்கள். பரசசிங்கமுதலிக்கு மரணகாலங்கிட்டினபோது தன் குமாரர் ஏழுபேரையும் வரவழைத்து ஆஸ்திகளைப்பங்கிட்டுக் கொடுத்தான் நல்லூரையும் பங்கிட்டுக்கொடுத்தான். நல்லூரையுங் கள்ளியங் காட்டையும் அளகாண்மைவல்லமுதலிக்குக் கொடுத்து, நல்லூரில் தன்மாளிகையில் இருத்தினன். தனபாலசிங்கமுதலிக்கு மல்லாகத்தையும் வெற்றிவேலாயுதமுதலிக்குச் சண்டிலிப்பாயையும், விசயதெய்வேந்திர முதலிக்கு அராலியையும், திடவீரசிங்கமுதலிக்கு அச்சுவேலியையும், சந்திரசேகரமாப்பாணமுதலிக்கு உடுப்பிட்டியையும், இராசரத்தின முதலிக்குக் கச்சாயையுங் கொடுத்

தான். இதுவல்லாமல் வேதவல்லியென்னுங் குமாரத்திக்கு வேளாளர் குலத்திலே விவாகஞ்செய்வித்து மாதகலைக்கொடுத்தான்.

பராசசிங்கமுதலி காலஞ்சென்றபின் பறங்கிக்காரர்கள் சிவாலயங்கள் எல்லாவற்றையு மிடிப்பார்களென்றெண்ணி நகுலேசுரர்கோவிலிலிருந்த பாசுபாணி ஐயர் அக்கோவிற் சாமான்கள் விக்கிரகங்கள் முதலியவற்றைக் கிணறுகளிற்போட்டு மூடிவைக்கக் கந்தசுவாமிகோவிற் பணிவிடைக்காரனாயிருந்த பண்டாரம் என்பவன் அங்குள்ள ஆலயங்களின் சம்பவங்களையும் ஒழுங்கு திட்டங்களையுஞ் செப்புப்பட்டயத்தில் எழுதிக்கொண்டு மட்டக்களப்புக்குச்சென்றான். பராசசிங்கமுதலி மரணமடைந்தவுடன் கங்காதரஐயரின் வம்மிசத்துப் பிராமணக்குடிகள் நல்லூரினின்றும் நீங்கி நீர்வேலியிலும் வடமராட்சிப்பகுதிகளிலுமிருந்தார்கள். அக்காலத்திற் பறங்கிகள் தமிழ் இராசாக்களைப்போல் மாதாக்கர்களை வைக்கக்கருதி இராசரத்தினமுதலியின் குமாரன் சேனாதிராயமுதலியைக் கீழ்ப்பற்றுக்கும், விசயதெய்வேந்திரமுதலியை மேல்பற்றுக்கும் அழகாண்மை வல்லமைமுதலியின் குமாரன் இராசவல்லமுதலியைத் தென்பற்றுக்கும், திடவீரசிங்கமுதலியின் குமாரன் குமாரசூரியமுதலியை வடபற்றுக்கும் மாதாக்கர்களாக நியமனஞ்செய்து அரசியற்றிவருநாளில், காரைக்காலிலிருந்து பல உயர்குல வேளாளக்குடிகள் வந்து வட்டுக்கோட்டையிலுங் காரைதீவு முதலிய தீவுகளிலும் குடியேறினார்கள்.

சாலிவாகன சகாப்தம் 1428-ம் வருஷமாகிய பரிதாபிவருஷத்தில் இலங்கையை அரசாண்ட தருமபராக்கிரமவாகு மகாராசனிடத்திற் பறங்கிகள் முதல் முதல் உத்தரவுபெற்றுக்கொண்டு போக்குவரவுபண்ணத் தொடங்கினார்கள். கரவருஷம் ஆடிமாதம் சவரியான் முதலிய பறங்கிக்காரர்களால் வேதத்திற்சேர்ந்த சனங்களைச் சங்கிலி இராசன் சகாப்தம் 1466-ம் வருஷமாகிய சோபகிருது வருஷம் வைகாசிமாதம் கொலைசெய்வித்தான். சகாப்தம் 1503-ம் வருஷமாகிய விக்கிரமவருஷத்திற் சவரியான் முதலிய பறங்கிகள் பரநிருபசிங்கத்தின் வழியாய்ச் சங்கிலி இராசனுடன் கொண்டாட்டமாய் அடுத்தவருஷம் தைமாசம் வீடுகட்ட உத்தரவுபெற்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாந்தேசர் இலங்கையையடைந்து கண்டியில் விமலதரும ராசனுடன் சகாப்தம் 1526-ம் வருஷமாகிய சோபகிருதுவருடம் சிநேகங்கொண்டு உமக்குப் படைத்துணையாவோமென்று சொல்ல அவன் அவர்களை அழைத்துத் தன்னுடன் வைத்துக்கொள்ள முன்கண்டியிலிருந்து துரத்தப்பட்ட இராசகுமாரத்தியைப் பறங்கிகள் மன்னாரில் வைத்துவளர்த்து அவளுக்கு தொன் கத்தறீனாள் என்று பெயருமிட்டு அடுத்தவருஷங்களில் கண்டி அரசாட்சியைப் பிடித்துக்கொடுக்க ஆரம்பித்தபோது, விமலதருமராசன் உலாந்தேசரைத் துணையாகக்கொண்டு பறங்கிகளைத் துரத்தித் தொன் கத்தறீனாளையும் விவாகஞ்செய்தான். கீலக வருஷத்தில் உலாந்தாக் கப்பற்சேனைபதியுஞ் சேனைகளிற்பலரும் மதுவெறியினால்மயங்கி விமலதருமராசனை நிந்தனைசெய்து மூர்க்கமாய்நின்றதினால், அவன் அவர்களிற்சிலரைக் கொலைசெய்விக்க உலாந்தேசர் அவ்விடம்விட்டுக் கொழும்புச்குச்சென்று கோட்டைகட்ட ஆரம்பித்த பொழுது, பறங்கிகள் தடைசெய்ததினால் அவ்விடத்தினின்று நீங்கி இலங்கையின் வடதிசையில் வந்திருந்து சகாப்தம் 1533-ம் வருடமாகிய சாதாரணவருடம் தென்மார்க்கமாய்க் கப்பலேறிவந்து இலங்கையிலுள்ள அரசருடன் கொண்டாடிப்படைத்துணை வருகிறோமென்றுசொல்லியும், அவர்கள் அதற்குடன்படாமையால் தங்கள் தேசத்திற்குப்போய்விட்டார்கள்.

## உ௦—வது அதிகாரம்

இவ்வாறிருக்கப் பறங்கிகள் சகாப்தம் 1538-ம் வருடமாகிய ராக்ஷதவருடத்தில் யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டத் தொடங்கினர். மூன்றுவருடத்தின்பின் திருக்கோணமலையிலும் மட்டக்களப்பிலுங் கோட்டைகளைக்கட்டினார்கள். யாழ்ப்பாணக் கோட்டை சகாப்தம் 1546-ம் வருடமாகிய ருதிரோற்காரி வருடத்திற் கட்டப்பட்டுமுடிந்தது. அடுத்தவருடங்களிலே உலாந்தேசர் திருகோணமலை மட்டக்களப்பு நீர்கொழும்பு முதலிய இடங்களைப்பிடித்து நீர்கொழும்பைப் பறிகொடுத்தார்கள். யாழ்ப்பாணத்துத் தேசாதிபதியாகிய அந்தோனிமீறால் என்பவன் மன்னாரிலிருந்து கொழும்புக்குப் போனபொழுது சகாப்தம் 1556-ம் வருடமாகிய ஸ்ரீமுகவருடம் உலாந்தேசர் பிடித்துச் சிறைச்சாலை

யைப்படைவித்தார்கள். சகாப்தம் 1580-ம் வருடமாகிய ஏவிளம்பி வருடம் மாசிமாதம் ஆறுந்தேதி உலாந்தேசர் மன்னாரைப்பிடித்துக்கொண்டு பங்குனிமாதம் தொடங்கி யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்து வரச்சேனைகளை நிறுத்தி, அந்தமாதக்கடைசியில் ஊர்காவற்றுறைக்கோட்டையைப்பிடித்து அதன் வழியாய்க் காரைதீவிலிறங்கினர். அங்கே சிலகாலத்துக்குமுன் உலகுகாவலமுதலி என்னும் உயர்குலவேளாளன் ஒருவன் சோழதேசத்திலே விதித்த இராசதண்டனைக்குப் பயந்தோடிவந்து காரைதீவிலே களபூமி என்னுமிடத்திற் பெருஞ் செல்வனாயிருந்தான். அவன் அவர்களுக்குச் சகலவசதிகளுங்கொடுத்து அனுசரிக்க, அவர்கள் அவனிடத்தில் இராச்சிய வளமைகளைக்கேட்டு விசாரித்துக்கொண்டு, யாழ்ப்பாணக்கோட்டையைப் பிடிப்பதற்கு உபாயங்கேட்க, அவன் நான் சொல்லுந்தினத்தில் நீங்கள் வருவீர்களாகில் வசதியாய்க்கொண்டுபோய்விடுவேன் என்றான். அதற்குச் சம்மதித்துச் சேனைகளைத்திட்டம்பண்ணி மூன்றரைமாதக்காலங் காத்திருந்தும் வசதிவாயாதிருக்க ஒருநாள் இரவிலே பறங்கிகள் நடனசங்கீதவினோதராயிருக்குஞ் சமயத்தில், உலகுகாவலமுதலி வழிகாட்ட உலாந்தேசர், திறந்திருந்த கள்ளவாயில்வழியாய் நுழைந்து கோட்டைக்குட்சென்று, பறங்கிகளை இராவிராவாய்வெட்டியுங் கட்டுங்கொன்றுவிடப் பறங்கிப்பிணங்கள் கடலிலுங் கரையிலுங் கிடப்ப உலாந்தேசர் களிப்புக்கொண்டாடுவதைக் கண்டு சகலருந்திகைப்படைந்தார்கள். சகாப்தம் 1581-ம் வருஷமாகிய விளம்பிவருடம் ஆனிமாதம் ஒன்பதாந்தேதியின்று யாழ்ப்பாணம் உலாந்தேசர் அரசாட்சியின் கீழாயிற்று. அந்நாளையில் புரோடெஸ்டாண்டுக்கிறீஸ்துமதம் யாழ்ப்பாணத்துட் பரவலாயிற்று. பறங்கி அரசுபோயும் அவர் பாஷைச்சொற்களாகிய அலவாங்கு தோம்பு கதிரை முதலியன இன்னும் வழங்கிவருகின்றன. இவ்விதசொற்கள் அரிதாய்த்தென்னிந்தியாவிலுஞ் சில பகுதிகளில் வழங்கிவருகின்றன.

## ௨௧-வது அதிகாரம்

கைலாயவன்னியன் சகோதரியை விவாகஞ் செய்திருந்த பூதத்தம்பி, மனுவலந்திராசி என்பவர்கள் உலாந்தேச அரசாட்சியாருக்கரசிறைவிதித்த முதலிமாரானார்கள் அத்தேசாதிபதி

அந்திராசிக்கு அதிக நண்பனாயும் தேசாதிபதியின் தம்பி பூதக்தம்பிக்கு அதிக நண்பனாயுமிருந்தார்கள். ஒருநாள் பூதத்தம்பி அந்திராசியைத்தன் வீட்டுக்கு அழைத்து விருந்திட அவன் பூதத்தம்பி மனைவியின் பேழகினால் மயங்கியிருந்த விகாரத்தோடு வீட்டிற்குச்சென்று, ஒரு தூது அனுப்பி நீர் என்னுடன் இணங்கிச் சிநேகமாயிருக்கச் சம்மதித்தால் உமக்குவேண்டிய திரவியங்களும் மற்றும் எவ்வித பொருள்களுந்தருவேன் என்றுகேட்பிக்க, அவள் அந்திராசியைவைது தூதுவந்தவனை துடைப்பத்தாலடித்துத்துரத்திவிட்டாள். இதுகாரியத்தினால் இருவருக்கும் பகை நேரிட்டிருக்குங்காலத்தில் ஒருநாள் அந்திராசி அரசாட்சியாரின் வேலைக்கு மரங்கள் அழைப்பிக்கக் கச்சாய்த்துறைக்குக் கட்டளையனுப்பவேண்டுமென்று வெள்ளைக் கடுதாசியிற் கையொப்பமிடுவித்து, அதிலே கோட்டைபிடிக்க இன்ன இன்ன உதவிசெய்வேனென்று பறங்கிக்காரர்க்குப் பூதத்தம்பி எழுதிக்கொடுத்தனுப்பக், கொண்டுபோனவிடத்திற் கண்டுபறித்தேனென்று அந்திராசி தேசாதிபதிகையிற் கொடுக்கத் தேசாதிபதி அதைப் பொய்க்குற்றச்சாட்டென்றறிந்தும் அந்திராசியின் வேண்டுதலுக்காகப் பூதத்தம்பியைக் கொலைசெய்வித்தான்.

அவ்வேளையில் தேசாதிபதியின் தம்பி ஊர்காவற்றுறையிற் கடற்கோட்டை கட்டுவித்துக்கொண்டு அங்கிருந்தமையாற் றன் சிநேகனுக்கு உற்றவிடத்துதவி செய்யக்கூடாதவனாயிருந்தான். இதைக்குறித்துப் பூதத்தம்பியின் மைத்துனனாகிய கைலாயவன்னியன் கொழும்பேறி வழக்குப்பேசினபோது தேசாதிபதியையும் அந்திராசியையும் அங்குவரும்படி கட்டளைவர இருவரும் புறப்பட்டுப் போகும்பொழுது தேசாதிபதி கடலில்விழுந்தும் அந்திராசி ஆனை இடறியுமிறந்தார்கள். அவ்வருடத்தில் வெள்ளப்பெருக்கினால் ஊர்காவற்றுறையில் அநேக மனிதரும் மிருகங்களும் இறந்துபோயின. உலாந்தேசர் உலகுகாவலமுதலிக்குச் சகலதிரவியங்களையுங்கொடுத்து மாபாலுயர்ந்த முதலியின் சகோதரியையும் விவாகஞ்செய்வித்தனர். அவனுக்கு வாயிலுத்தியோகமும் முதலிக்கு முன்னிருந்தபடி திரவியச்சாலைத் தலைமையையுங்கொடுத்தார்கள். உலகுகாவலமுதலி இறந்தபின் அவன் மகன் இரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுங்க முதலிக்கு முதலியின் குமாரத்திகள் ஏழுபேரில் ஒருத்தியை விவாகஞ்செய்வித்துப் பூலோககைலாசமுதலிக்குத் திராவியசாலைத் தலைமையையுங்கொடுத்து, வேறுசில தத்துவங்களையுங் கொடுத்தனர்.

அக்காலத்திலேசந்தச்சாய்பு என்பவனால் மகமதுமார்க்கத்திற்சேர்ந்து தமிழ் பேசுஞ்சோனகக்குடிகள், காயிலிப்பட்டணம் முதலிய இடங்களிலிருந்துவந்து தென் மிருசுவில் என்னுமூரிலே குடியிருந்து சாவுகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில் என்னுமிடங்களில் உள்ள சந்தைகளில் வியாபாரஞ்செய்துகொண்டு, தாங்கள் குடியிருந்த மிருசுவிலுக்கு உசனென்னும் பெயருமிட்டனர், சிலகாலமவ்விடமிருந்து அங்குவசதியில்லாமையினல் நல்லூரிலே கந்தசுவாமி கோவில்கட்ட இருக்குமிடத்தில் வந்து குடியேறினர்கள். சோனகரை அவ்விடமிருக்கவிட்டாற் கந்தசுவாமிகோவில்கட்டத் தடையாயிருக்குமென்று நினைத்துத் தமிழர் கூடி அவர்களைத்துரத்தத் தெண்டித்தும் முடியாதிருக்க, அந்நிலங்களுக்கு அதிகவிலை தருகிறோமென்று கேட்டதற்குஞ் சோனகர் சம்மதிக்கவில்லை. ஒன்றுக்குமிடங்கொடாததினல் தமிழர் கோபங்கொண்டு சோனகரின் கிணறுகளிற் பன்றி இறைச்சிகளைப்போடும்படி தங்கள் சிறைகளுக்குக் கட்டளையிட, அவர்கள் அவ்வாறு செய்துமுடித்தனர். அதுகண்ட மாத்திரத்திலே சோனகர் அழுதுபுலம்பிப் பசிபட்டினியாய்க்கிடந்து ஆற்றுமற்கடைசியில் தங்கள் மதாசார வழிபாடுகளைக்குறித்து எக்காலத்திலுந் தடைசெய்யாதிருக்கவேண்டுமென்று தமிழரிடத்திலே உடன்படிக்கை செய்வித்துக்கொடுத்த விலையையும் பெற்றுக்கொண்டு நாவாய்த்துறைக்குக் கீழ்ப்புறமாய்க் குடியேறினர்கள். நாவாய்த்துறை நாவாந்துறையென வழங்கிவருகின்றது

## உஉ—வது அதிகாரம்

அக்காலத்திலே உத்தரகோசமங்கையிலே ஒரு பெருங்கலகமுண்டானதினல் அதற்குப்பயந்து பலவேளாளக் குடிகளுஞ் சிலவிட்டுணுசமயம் சிவசமயப்பிராமணக்குடிகளும் அங்கிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து காரைதீவு வட்டுக்கோட்டை முதலிய இடங்களிற் குடியிருந்தனர். சோழமண்டலத்தினின்று சிலபட்குடிகள் வேளாளரின் கீழ்ப்பயிர்க்குடிகளாயிருந்து பிழைக்கலாமென்றெண்ணி வந்தும் அப்படிப்பிழைக்க இடங்காணாததினாற் சிலர் திரும்பினர், சிலர் சான்றாரைப்போற் பனையேறுந்தொழிலைப் பயின்றார்கள். சிலருக்குப் பிழைப்புக்குறைந்ததினாற் துரைமார்வீடுகளிற் பணிவிடைகளுக்கு ஏற்பட்டும் சிலர் வலைவீசியும்பிழைத்தார்கள், சிலர் வேளாளருக்கு அடிமைகளாக எழுதிக்கொடுத்தார்கள், முன்னாட்களிற் சிலவறியகுடிகள் தங்களைக் கோவில்களுக்கு அடிமைகளாக எழுதிக்கொடுத்ததினாற் கோவிலாரென்றழைக்கப்பட்டுப் பின் கோவியரெனப் பெயர்பெற்றார்கள்.

பறங்கிகள் அரசாட்சியைக் கைப்பற்றியபின் இடிபட்ட கோவில்களின் எசமான்கள் கோவிலரைப்பிறருக்கு விற்பனவுபண்ணினார்கள் பிற்காலத்தில் வடகரையிலிருந்து சிலசிறைகள் வடசிறைக்கோவியம் என்னும் பெயரால் விலைப்பட்டனர். இப்படியே சிறைவிற்பனவு கொள்வனவு வரவர அதிகப்படவே அரசாட்சியார் அவற்றைத் தங்கள் அதிகாரத்துக்குக் கீழாக்கித்தங்களுக்கு வருமானத்தை உண்டாக்கிக்கொண்டனர். உலாந்தேசு மன்னர் கிறீஸ்துமதத்தைப் பரப்ப நினைத்து யாழ்ப்பாணத்தை முப்பத்திரண்டு கோட்டங்களாகவகுத்து ஒவ்வொருகோட்டத்திலும் ஒவ்வொருகோவில்கட்டுவித்து அந்தக்கோவில்களில் தங்கள் சமயக் குருமாரை நியமித்து ஆங்காங்கே போதனைசெய்யும்படி கட்டளை செய்து பலவரிகளையும் ஏற்படுத்தினார்கள்.

போகிச்சாதியாரிற் பலகுடிகள் தங்கள் எசமான்களைச் சிவிகையில்வைத்துக் காவியகாரணத்தால் சிவியாரென்று அழைக்கப்பட்டார்கள். அரசாட்சியார் யாவருந் தங்கள் தங்கள் மரபிற்கேற்பச் சிவிகைகாவுவித்தல் மேள்மடிப்பித்தல் முதலியவரிசைகளைச் செய்யப்புகுங்கால் அரசாட்சியாரிடம் வரிசைப்பத்திரம் பட்டக்கடதாசி முதலியவற்றைப் பெற்றவர்களேயன்றி மற்றவர்கள் நடத்தக்கூடாதென்று கட்டளைபண்ணி அதிகவருமானங்களை அரசாட்சிக்கு வரும்படிசெய்தார்கள். முன் இருந்த ஒவ்வொரு அன்னிய அரசுகளுந் தங்கள் தங்கள் சமயத்தையே ஸ்தாபிக்கவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ச்சமயமாகிய சைவசமயத்தைத் தாழ்த்தவும் கருதித் தங்களால் இயன்றளவு எத்தனையோ உபாயங்களைச் செய்தனர்.

இப்படி இருக்க இங்கிலிஷ் அரசினர் தங்கள் பலத்தினாலும், வீரத்தினாலும், நுண்ணறிவினாலும் உலாந்தேசரிடம் யாழ்ப்பாணத்தைச் சகாப்தம் 1718-ம் வருடத்திற் பிடித்துத் தங்கள் நியாயப்பிரமாணங்களை இலங்கை முழுதுக்குஞ் சகாப்தம் 1738-ம் வருடத்தில் நிலைநிறுத்துவாராயினர். இவ்வரசினர் முன்னிருந்த அந்நிய அரசரைப்போல் கொடுங்கோலரசுசெலுத்திக் குடிகளை வருத்தாது எச்சமயத்தவர்களுக்குந் தங்கள் இஷ்டப்படியே சமயாசாரங்கள் முதலிய எவ்வகைக்கிரியைகளுஞ் செய்தற்கிடங்கொடுத்துச் செங்கோல்நடத்தி வருகின்றனர். இத்தேசத்திற்கிறீஸ்துமதம், மகம்தியமதங்களும் வழங்கிவருகின்றன. ஆயினும் இவ்வியாழ்ப்பாணத்தளவு ஓர் பாகத்தையும் இந்தியாவில் இதற்குச்சரிவந்த ஏதேனு ஒருபாகத்தையும், அதற்குச்சரிவந்த சனத்தொகையையும் ஒப்பிட்டு எங்கே அதிக கிறீஸ்தவர்களுங் கத்தோலிக்கரும் மற்றும் பிறமதஸ்தர்களும் இருக்கிறார்களெனக் கருதுகையில் இந்தியாவில் நூற்றுக்கு இரண்டாகவும் யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கு ஒன்றாகவுமிருக்கக் காணப்படுகிறது. இக்காலத்தினர் மேன்மையும் கல்வி செல்வம், பொறை, தயை தானம் தைரியமுதலியவற்றிற் குறைவில்லாது தங்கள்பெயர்களை விளக்கித் தங்கள் கல்வித்திறமைகளைச் சாமர்த்தியத்துடன் காட்டினர்களென்பது யார்க்குந்தெரிந்தகாரியம்.

## உ௩—வது அதிகாரம்

வண்ணைநகரின்கண்ணே வைத்திலிங்கச் செட்டியாராலே கட்டுவிக்கப்பட்டுச் சகாப்தம் 1713-ம் வருடமாகிய சாதாரணவருடம் சித்திரைமாதம் பிரதிட்டை செய்யப்பெற்று நித்தியநைமித்தியங்கள் ஒரு சிறிதும் குறைவுபடாது ஒழுங்குபெற நடத்திவரப்படும் ஓர் பாரியசிவாலயம் உண்டு. இதன் மேல்பாகத்திலே வில்லூன்றி எனப்பெயர்பெற்ற வற்றாத சிற்றேரி இருக்கின்றது. இவ்வேரி இராமசுவாமி இந்தியாவினின்றும் இலங்கைக்குத் தாவியகாலத்துத் தம் வில்லை யூன்றத்தோன்றிய காரணத்தால் வில்லூன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், அவர் திருவடிதோய்ந்த இடந் திருவடிநிலை எனவும் பெயர்பெற்றன. இஃதன்றியும், சங்கானை நத்தங்களுளொன்றாய மூளாயைச்சார்ந்த பொன்னாலையிலும், கட்டைவேலி நத்தங்களுளொன்றாய வல்லிபுரத்திலும் எழுந்தருளியிராநின்ற கண்ணபிரானுக்கு நித்தியநைமித்தியங்களிற் குறைவுபடாது நடைபெற்றுவருகின்றது

விருத்தம்

இலகியசாகாப்தமெண் ணூற்றெழுபதாமாண்டுதன்னி
லலர்பொலிமாலைமார்பனும்புவனேகவாகு
நலமிகுந்திடயாழ்ப்பாணநகரிகட்டுவித்துநல்லைக்
குலவியகந்தசுவாமிகோவிலும்புரிவித்தானே

வெண்பா

முன்னாட்குளக்கோட்டன்மூட்டுந்திருப்பணியைப்
பின்னாட்பறங்கிபிடிப்பனே—பொன்னாரும்
பூனைக்கண்செங்கண்புகைக்கண்ணர்போய்மாற
மானேவடுகாய்வரும்,

யாழ்ப்பாணவைபவம்
முற்றிற்று.

13952 CL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜோதிட, மாந்திரீக, வைத்திய விற்பன்னரும், ஸ்ரீ முன்னேஸ்வர வேதசிவாகம கிரியாபிவிருத்திச் சபையின் தலைவரும், தேவஸ்தான ஆதீன பரிபாலன கர்த்தாவுமாகிய பாலசுப்பிரமணியக் குருக்கள்.

யாழ்ப்பாண வைபவத்தின் முதலாவது பதிப்புக்கான ஏட்டுச்சுவடிகளைப் பரிசோதித்துக் கொடுத்த பாலசுப்பிரமணிய சர்மா அவர்கள்.
(நன்றி - புகைப்பட உதவி பிரம்மசிறி ச.பத்நாதன் சிரேஸ்ட விரிவுரையாளர் சம்ஸ்கிருதத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

288401



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய வரலாற்று வரைபுகளுள் 'யாழ்ப்பாண வைபவம்' என்ற பெயரில் அமைந்த இருவேறு நூல்களும் இடம்பெறுகின்றன. அவை இரண்டும் ஆசிரியர் பெயர் அறியா நிலையிலேயே கிடைக்கின்றன. அவை எவ்வெக் காலத்தில் எழுதப்பட்டன என்பதும் தெளிவாய் அறியக்கூடியதாய் இல்லை. அவற்றுள் ஒன்றை திரு. வே. சதாசிவம்பிள்ளை என்பவர் முதன்முதற் பரிசோதித்து 1884இல் வெளியிட்டார். மற்றையது பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணிய சர்மா அவர்களாற் பரிசோதிக்கப்பட்டு 1916இல் வெளியானது. இதனது மூன்றாம் பதிப்பே இப்போது இலங்கைத் தமிழியற் கழகத்தால் வெளியிடப்படுகிறது. இதன் பதிப்பாசிரியராக கலாநிதி சயனொளிபவன் முகுந்தன் விளங்குகின்றார்.

கலாநிதி சயனொளிபவன் முகுந்தன் இந்துநாகரிகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிகக்கற்கைகள் புலத்தின் இணைப்பாளராகவும் சிரேஸ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்துறைத் தலைவராகக் கடமையாற்றி வருகிறார். இலங்கை, இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற அனேக சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள இவர் இந்து கணித வானியல்மரபு, புராதன இந்து இலக்கியங்களில் அரசியல் பொருளியல் நீதிபரிபாலனம். இந்துக்கற்கைகளை வளமூட்டிய ஆளுமைகளும் ஆய்வுகளும், இந்து சமயத்தில் இயற்கை மெய்யியல், புராதன இந்து சமுதாயத்தில் போரியல் ஆகிய ஆய்வு நூல்களை எழுதியுள்ளார்.

ISBN 624621100-3
9786246211004
Print@Mickey-Chava 021-2-27-17-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org